# பொருளியல் நோக்கு

மலர் 26 இதழ்கள் 08/09 நவம்./டிசம். 2000

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர்
மாவத்தை,
கொழும்பு 2, இலங்கை.

பிரதம ஆசிரியர்:
கலாநிதி எஸ். எஸ். ஏ. எல். சிரிவர்தன
ஆராய்ச்சிப் பணிப்பாளர்

பிரதி பிரதம ஆசிரியர்:
கலாநிதி எஸ். எல். திலகசிரி

இணையாசிரியர்-நிர்வாக ஆசிரியர்:
டப். ஜீ. எஸ். வைத்தியநாத

இணையாசிரியர் : (சிங்களப் பதிப்பு - ஆர்திக விமசும)
ஈ. டி. சி. புஷ்பகுமார

இணையாசிரியர் : (தமிழ் பதிப்பு - பொருளியல் நோக்கு)
எம். எல். எம். மன்சூர்

*பொருளியல் நோக்கு* கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விவரத் தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

*பொருளியல் நோக்கு* ளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித் திட்டமாகும். எனினும், அதன் பொருடளக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறபபுக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப் பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

*பொருளியல் நோக்கு* மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

## மாணவர் பொருளியல்

எம். பி. ஜி. தமயந்தி மெனிக்கே 30 வணிகத் துறையில் மேம்பாட்டு நடவடிக்கைகளின் செல்வாக்கு

## வறுமையின் பரிமாணங்கள்

ரமணி குணதிலக்க 2 சுய ஏற்பாட்டுக்கு ஊடாக வறுமையைத் தணித்தல் – நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி மற்றும் பொருத்தப்பாடு என்பன தொடர்பான பிரச்சினைகள்

விஜய ஜயதிலக 9 மனித உரிமைகளின் பின்புலத்தில் வறுமை ஒழிப்பு

எச். சுமனபால 12 சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் : அதன் அமுலாக்கலும் முன்னேற்றமும் 1995 – 2000

மல்லிகா பெரேரா 17 வறுமையும் மகளிரும்

வீ. பெரியண்ணன்பிள்ளை 23 உள்நாட்டில் இடம் பெயர்ந்திருப்பவர்களிடையே நிலவி வரும் வறுமை

சமன் வீரவன்ச 26 இலங்கையில் வறுமை ஒழிப்பில் இளைஞர்கள் கொண்டிருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூ

அடுத்த இதழ்

**நிலைமாற்றம் கண்டு வரும் வங்கித்தொழில்**

அட்டைப் படம் : நன்றி – லேக்ஹவுஸ் நூல்நிலையம்

## சுய ஏற்பாடுகளுக்கூடாக வறுமையைத் தணித்தல்

# நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி மற்றும் பொருத்தப்பாடு என்பன தொடர்பான பிரச்சினைகள்

ரமணி குணதிலக்க

> **வறுமைத் தணிப்பு முயற்சியின் அத்திவாரம் சமூக மட்டத்தில் வறிய மக்கள் தம்மைத் தாமே ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு வகை செய்வதாகும். இது வறுமையின் மூல காரணமாக இருந்துவரும் வலுவற்ற நிலைக்கான ஒரு சிறந்த மருந்தாகும்.... எனவே, வறியவர்களுக்கு பெருமளவுக்கு தேவைப்படும் பொருள் தமது நிறுவன ரீதியான ஆற்றலைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கான வளங்களாகும்.**
>
> ஐ நா அபிவிருத்தி திட்டம் (2000), மனித வறுமையை ஒழித்தல், பக். 72

அண்மைக் காலம் வரையில் 'பங்கேற்பு' மற்றும் 'வறியவர்களுக்கு வலுவூட்டுதல்' போன்ற கருத்தாக்கங்கள் அரசு சாராத் துறையினால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியவையாக இருந்து வந்தன. ஆனால், இந்தக் கருதுகோள்கள் இப்பொழுது பொது அரங்கில் ஒரு முக்கிய கூறாக உருவாகி இருப்பதுடன், அரசாங்கங்களினதும் கொடையாளிகளினதும் வறுமைத் தணிப்பு கொள்கைக் கட்டமைப்புக்களில் வளர்ச்சி நோக்கிலான பேரண்ட பொருளியல் கொள்கைகள் என்ற முறையில் அதிக இடத்தையும் உயர் கவனத்தையும் ஆக்கிரமித்துள்ளன. உண்மையிலேயே வறியவர்களின் பங்கேற்பு மற்றும் சுய நிறுவன அமைப்பு என்பன இப்பொழுது மிக முக்கியமான அங்கங்களாக நோக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர் மேட்டுக்குடியினரின் கைஓங்கியிருக்கும் நிலையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு உள்ளூர்ச் சமூகங்கள் வறுமை ஒழிப்பு திட்டங்களில் தம்மை அணிதிரட்டிக் கொள்ள வேண்டும் என ஐ. நா. அபிவிருத்தி திட்ட அறிக்கை (2000) கேட்டுக் கொள்கிறது. இது ஒரு வரவேற்கத்தக்க மாற்றமாகும். ஆனால், வறியவர்கள் தமக்குத் தாமே வலுவூட்டிக் கொள்ளும் பொருட்டு தம்மை ஒழுங்கமைத்து கொள்வதற்கு உதவுவதற்கென மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் நிலையான தன்மை மற்றும் பொருத்தப்பாடு என்பன குறித்து பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்து வருகின்றன. முதலாவதாக, வறியவர்கள் தம்மைத் தாமே ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு ஊடாக அவர்களுக்கு வலுவூட்டும் செயன்முறை தற்போதைய சமூக ஏறுவரிசைக் கட்டமைப்பு மற்றும் நிலவரங்கள் என்பவற்றுக்கு தவிர்க்க முடியாத அளவில் சவாலாக இருந்து வருகின்றது என்பதனை ஒரு சில வறுமை ஒழிப்பு கொள்கை செயற்திட்டங்கள் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால், அரசாங்கங்களும் கொடையாளர்களும் அத்தகைய ஒரு சமூக இயக்கத்துக்கு எந்த அளவுக்கு உதவி செய்வதற்கு விருப்பம் கொண்டிருக்க முடியும். எப்படியிருந்தபோதிலும் அத்தகைய இயக்கங்கள் உள் மற்றும் வெளி சக்திகளின் பாதிப்புக்கு வெகு எளிதில் ஆளாகலாம். இத்தகைய சக்திகள் எவை என்பது குறித்தும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு அவை அச்சுறுத்தலாக இருந்து வருவதனை எவ்வாறு தடுத்துக் கொள்ள முடியும் என்பது குறித்தும் அதிக அளவில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

வறியவர்களின் நிறுவன ரீதியான ஆற்றலை கட்டியெழுப்புவதற்கு ஒரு நிகழ்ச்சித் திட்டத்தினால் ஆதரவளிக்கப்படும் தூண்டுதல் முகவரகமொன்று அவசியமாக இருந்து வருவதனால் அந்த முகவரகத்தின் பணி நிறைவு செய்து வைக்கப்பட்டுள்ளது என எப்பொழுது கருத முடியும் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இந்த தூண்டுதல் பணியை வகிக்கும நிறுவனம் அந்தப் பணியிலிருந்து விலகிக் கொள்வதற்கான அளவுகோல் எது? மிக முக்கியமாக அத்தகைய நிறுவனமொன்று இல்லாத நிலையில் வறுமை ஒழிப்புப் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியுமா? மக்கள் தம்மை சுயமாக ஒழுங்குபடுத்திக் கொள்ளும் செயன்முறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள் சாதித்துக் கொள்ளப்படும் வரையில் மட்டுமே அவசியமாக இருந்து வருகின்றன என முடிவு செய்வது இப்பிரச்சினையை சமாளிக்கும் ஒரு வழி. ஆனால், செய்திட்ட குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் விடயம் இந்தக் குறிக்கோள்கள் எவ்வளவு பரந்தவையாக அல்லது எவ்வளவு குறுகியவையாக இருந்து வருகின்றன என்பதனை பொறுத்து அமையும். மேலும், இக்குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு அவசியமாக இருக்கும் ஏனைய காரணிகள் அல்லது சக்திகள் எவை என்பதனையும் நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். இப்பொழுது இது தொடர்பாக மூன்றாவதாக நோக்க வேண்டியிருக்கும் ஒரு பிரச்சினையும் உள்ளது. அதாவது, கிராமிய வறுமையை ஒழிப்பது மற்றும் வறியவர்களுக்கு வலுவூட்டுவது என்ற இறுதிக் குறிக்கோளைச் சாதித்துக் கொள்வதில் ஒரு காரணி எந்த அளவுக்கு பொருத்தமானதாகவும் முக்கியமானதாகவும் இருந்து வருகின்றது என்ற கேள்வியாகும்.

வறுமை ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான தற்போதைய ஆர்வம் ஏற்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரேயே இலங்கையில் ஒரு பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த திட்டம் தொடர்பான இலங்கையின் அனுபவத்தின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் இந்த விடயங்கள் தொடர்பாக மேலும் புரிதலை எடுத்து வருவது இக்கட்டுரையின் நோக்கமாகும். கிராமிய வறியோர் தமது சொந்த முயற்சிகளுக்கு ஊடாக தமது பொருளாதார, சமூக அந்தஸ்தினை மாற்றியமைத்துக் கொள்வதற்கு தூண்டுதல் அளிக்கும் நோக்குடன் மாறுதல் முகவர்கள் நிகழ்ச்சித்திட்டம் (மா மு நி) 1978 இல் செயல்பாட்டு ஆராய்ச்சியின் ஒரு பரீட்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1980 களிலும் 1990 களிலும் மா மு நி மாற்று கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றாக அபிவிருத்தி அடைந்ததுடன், சமூக அணிதிரட்டல் கூறுகளினால் அது தூண்டுதலை பெற்றிருந்தது. மா மு நி யின் அனுபவம் வறியவர்கள் தம்மைத் தாமே அணிதிரட்டிக் கொள்வதற்கும், வறியவர்களுக்கு வலுவூட்டிக் கொள்வதற்கும் ஊக்கமளிப்பதன் மூலம் வறுமையை தணிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கும் எந்தவொரு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாகவும் மோதல்களை சமாளித்தல், நிலைத்து நிற்கும் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் பொருத்தப்பாட்டினை உறுதி செய்து கொள்ளல் என்பன அடிப்படையான விடயங்களாக இருந்து வருகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

## மாறுதல் முகவர்கள் நிகழ்ச்சித்திட்டம் (மா மு நி)

1977 தொடக்கம் பின்பற்றப்பட்டு வந்த இலங்கையின் பேரண்டப் பொருளாதார கொள்கை நிலைப்பாடு சந்தையினால் நெறிப்படுத்தப்படும் வளர்ச்சி நோக்கிய அணுகுமுறையொன்றுக்கு சாதகமாக இருந்து வந்த போதிலும், சமூக நலனோம்பல் மற்றும் கிராமிய அபிவிருத்தி என்பன தொடர்பான வரலாற்று ரீதியிலான அழுத்தம் தொடர்ந்தும் இருந்து வரவேண்டிய நிலையை அரசியல் நிர்ப்பந்தங்கள் உருவாக்கியிருந்தன. மா மு நி தாராளமயமாக்கலுக்கு பிற்பட்ட காலத்தில் அமுல் செய்யப்பட்ட முதலாவது கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். அதனையடுத்து ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இடம் பெற்றன. கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் பங்கேற்பு பயிற்சி அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் கிராமிய தலைவர்களுக்கான அதன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை புதிய வழிகளில் உருவாக்கிக் கொண்டபொழுது மா மு நி ஆரம்பமாகியது. 1978 அளவில் இது பரீட்சார்த்தமான செயல் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமொன்றாக மாற்றமடைந்திருந்ததுடன், அது பங்கேற்பு முறைகளுக்கூடாக பயிற்றுவிப்பவர்களுக்கு பயிற்சியை அளித்து, அவர்களை கிராமங்களுக்கு அனுப்பி வைத்தது. இவ்விதம் கிராமங்களுக்கு சென்றவர்கள் உயர் அளவில் செயல் தூண்டல்களை பெற்றிருக்கும் இளைஞர்களை தெரிவு செய்து மாறுதல் முகவர்களாக செயற்படுவதற்கான பயிற்சியை அவர்களுக்கு பெற்றுக் கொடுத்தார்கள். அதன் பின்னர் கிராமத்தின் உற்பத்திக் கட்டமைப்பு குறித்த மதிப்பீட்டாய்வுகளுக் கூடாக விழிப்புணர்வை தூண்டும் ஒரு செயன்முறையை அவர்கள் ஆரம்பித்து வைத்ததுடன், வறியவர்களை குழுக்களாக அணி திரட்டும் பணியிலும் ஈடுபட்டார்கள். தமக்கும் அதிகளவில் சக்தி வாய்ந்தவர்களுக்கும் இடையில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வான பேரம் பேசும் சக்தியை நிவர்த்தி செய்து கொள்வதற்காக கூட்டாக செயற்படும் பொருட்டு வறியவர்கள் இவ்விதம் குழுக்களாக அணிதிரட்டப்பட்டனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் கிராமியத் துறையில் மாற்றங்களை எடுத்து வருவதற்கான பரந்த அடிப்படையிலான ஓர் இயக்கத்தை தூண்டிவிடும் நோக்கத்தை கொண்டிருந்தது.

இந்த செயன்முறையின் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் அது கிராமியக் குடும்பமொன்றை ஓர் உற்பத்தி அலகாகவும் ஒரு நுகர்வு அலகாகவும் நோக்கியமையாகும். மேலும், குடும்பத்தின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை விருத்தி செய்வதற்கு அவசியமான கூட்டு நடவடிக்கையை தூண்டி விடும் பொருட்டு ஊழியத்தை பரிமாறிக் கொள்ளல் மற்றும் குழு சேமிப்புக்களை சுழல் முறையில் பயன்படுத்திக் கொள்ளல் போன்ற பணம் சாராத பாரம்பரிய மூலதனங்களையும் அது பயன்படுத்திக் கொண்டது. உதாரணமாக, ஒவ்வொன்றும் (0.25 ஏக்கர் அளவிலான) சிறிய தேயிலை அல்லது தென்னங் காணிகளை வைத்திருக்கும் ஐந்து மற்றும் பத்து வறிய குடும்பங்கள் தமக்கிடையில் ஒரு குழு நிதியத்தை உருவாக்கிக் கொள்ளும். இந்நிதியம் உரம் மற்றும் விதை வகைகள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படும். மேலும், அவர்கள் ஒவ்வொருவரினதும் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் பயிர்ச் செறிவினையும் விளைதிறனையும் அதிகரித்துக் கொள்வதற்காகவும் உழைப்பினை ஒன்றாக பகிர்ந்து கொள்வார்கள். பின்னர் தமது விளை பொருட்களை சந்தைப்படுத்துவதற்கென வழமையான இடைநடுவர்கள் இல்லாத விதத்தில் புதிய சந்தை வாய்ப்புக்களையும் அவர்கள் தேடிக் கொள்வார்கள். அதே வேளையில், குறிப்பிட்ட சில பண்டங்களை மொத்த விற்பனை விலைகளில் கொள்வனவு செய்வதற்கு இக்குடும்பங்கள் குழு நிதியமொன்றை கட்டியெழுப்பும். இவ்விதம் உருவாக்கிக் கொள்ளப்படும் சேமிப்புக்களின் ஒரு பகுதியை மீண்டும் குழு நிதியத்துக்கு பங்களிப்புச் செய்து மொத்த விற்பனை விலையில் கொள்வனவு செய்யக்கூடிய பண்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளும். இந்தக்குழு நிதியத்தின் சேமிப்பு மற்றும் மீள்முதலீட்டு செயன்முறை பல குடும்பங்கள் தளபாடங்கள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்கும், சுகாதார வசதிகளை உருவாக்கிக் கொள் வதற்கும் ஆற்றலை பெற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு முன்னேற்றமடையும்.

இச்செயன்முறை, நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றவர்களுக்கிடையில் சார்புரீதியில் சக்திவாய்ந்த தற்சார்புக் கலாச்சாரமொன்றை உருவாக்குவதில் விதிவிலக்கான முறையில் வெற்றி கண்டிருந்தது. இலங்கையின் அரசியல் சமூகத்தில் அரசாங்கத்தினால் வறியவர்களுக்கு இலவசமாக சலுகைகளை பெற்றுக் கொடுக்கும் ஒரு வழமையே இது வரை காலமும் ஜனரஞ்சகமாக இருந்து வந்துள்ளது. இது வறிய சமூகப் பிரிவினர் பெருமளவுக்கு அரசாங்கத்தின் மீது தங்கியிருக்கும் ஒரு நிலைமையை தூண்டி யிருந்தது எனலாம். மா மு நி யின் குறிக்கோள் வறியவர்கள் தமக்குத் தேவை யான பொருட்களை தாமே தேடிப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அவர்களுடைய ஆற்றல்களை கட்டியெழுப்புவதாகும். இச்செயன்முறையின் போது அது வறிய மக்களுக்கு நம்பிக்கை, உருவாக்கம் விழிப்புணர்வுத் தூண்டல், கல்வி, தகவல் மற்றும் பயிற்சி என்பவற்றை பெற்றுக் கொடுத்தது.

மா மு நி 1980 களின் நடுப்பகுதி தொடக்கம் பல்வேறு காரணங்களினாலும் தனிநபர் அடிப்படையிலான வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கும் சுயதொழில் நடவடிக் கைகளுக்கும் ஊக்குவிப்பினை வழங்க முன் வந்தது. இக்காலப்பிரிவு தொடக்கம் பால் நிலை வலுவூட்டல் என்ற விடயமும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் தெளிவான ஒரு குறிக்கோளாக பின்பற்றப்படத் தொடங்கியது. இதனையடுத்து 1988 அளவில் மா மு நி யில் பங்கேற்றிருந்த சுமார் 65,000 மக்களில் 84 சதவீதத்தினர் பெண்களாக இருந்து வந்தனர். 1991 இன் பின்னர் வறுமை ஒழிப்புக்கென பரந்த அடிப்படையிலான நிறுவன ரீதியிலான கட்டமைப்பொன்றை ஸ்தாபித்துக் கொள்ளும் பொருட்டு இரண்டாம் நிலை நிறுனங்கள் உருவாக்கப்பட்டு அரசு சாரா நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டன. மா மு நி க்கு பிரதம நிதியளிப்பு அமைப்பாக இருந்து வந்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த சிடா நிறுவனம் அதன் உதவியை கட்டம் கட்டமாக நிறுத்திக் கொண்டது. மா மு நி இன் இரண்டாம் நிலை நிறுவனங்கள் தமது உறுப்பினர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்கும் பொருட்டும் இந்த நிறுவனங்களுக்கான வருமானங்களை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டும் நுண் மட்ட நிதி நிறுவனங்களாக நிலைமாற்றம் கண்டன. நிகழ்ச்சித்திட்டத்தின் நுண்மட்ட நிதியளிப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்கும் இதுவரை காலமும் அரசாங்கம் மேற்கொண்டு வந்திருக்கும் கண்காணிப்பு மற்றும் நிருவாகப் பணிகளை பொறுப்பேற்றுக் கொள்வதற்குமென சிடா அமைப்பின் உதவியுடன் மா மு நி யின் சொந்த நுண்மட்ட நிதி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. மா மு நி யின் முறைமையியல் வறியவர்களை அணிதிரட்டு வதில் குறிப்பிடத்தக்க அளவில் தாக்க மானதாக இருந்து வந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இச் செயன்முறையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதும் அதன் இறுதி இலக்கான கிராமிய அபிவிருத்தியை சாதித்துக் கொள்வதும், பெருமளவுக்கு நழுவிச் செல்லும் ஒரு குறிக்கோளாகவே இருந்து வருகிறது.

## தீர்க்கப்படாத பிரச்சினைகள் வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும்

நுகர்வு வறுமையை குறைத்தல் மற்றும் வறியவர்களுக்கு வலுவூட்டுதல் என்பவற்றை இலக்காகக் கொண்ட நேரடித் தலையீடுகள் பிரதானமாக இரு வகைகளில் அடங்கு கின்றன: (1) சுயதொழில் செயல்திட்டங் களுக்கூடாக வறியவர்கள் தமது உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்வதற்கும். அதற்கூடாக வறுமையை போக்கிக் கொள்வதற்கும் அவர்களுக்கு உதவி வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட தனிநபர் அடிப்படையிலான அணுகுமுறைகள்; (2) வறியவர்கள் தம்மைத் தாமே அணிதிரட்டி கூட்டாக செயற்பட்டு வருமானங்களை உயர்த்திக்

கொள்ளும் திசையில் முன்னோக்கிச் செல்வதற்கு உதவி வழங்குவதனை நோக்கமாக்க கொண்ட குழு அடிப்படையிலான அணுகுமுறைகள். சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி போன்ற தனிநபர் அடிப்படையிலான அணுகுமுறைகள் 1980 களிலும் 1990 களிலும் அரசாங்கங்களிடையேயும் கொடை நிறுவனங்களிடையேயும் நன்கு பிரபல்யமாகியிருந்தன. ஆனால், அவ்விதம் உதவிகளை பெற்றுக்கொண்ட பெருந்தொகையான சிறு தொழில் முயற்சிகள் பல்வேறு காரணங்களின் நிமித்தம் வெற்றியீட்ட முடியாது போய்விட்டது. அந்த நிலையில் இப்பொழுது குழு அடிப்படையிலான அணுகுமுறைகள் மீண்டும் அரங்குக்கு வந்துள்ளன.

பொருளாதாரக் கோட்பாட்டு நியதிகளிலும் கூட குழு அடிப்படையிலான அணுகுமுறைகள் பல சாதகமான கூறுகளை கொண்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை. மோசமான போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் இணைப்புக்கள் காரணமாக கிராமியச் சந்தைகள் துண்டு துண்டுகளாக பிரிந்து வேறுபட்டிருக்கும் நிலையில் தோன்றும் பூரணமற்ற சந்தைகள் ஏகபோக நிலைகளின் எழுச்சிக்கு வழிகோலுகின்றன. இந்தச் சூழ்நிலையில், ஒரு தனி நிறுவனம் அல்லது வர்த்தகர் விலையை நிர்ணயிக்கும் நிலை ஏற்படுகிறது. இவர்கள் ஒரு போட்டிச் சந்தை கொள்வனவு செய்வதிலும் பார்க்க குறைந்த விலைகளில் பண்டங்களை கொள்வனவு செய்கின்றார்கள். அத்தகைய சூழ்நிலைகளில் ஏகபோக நிலையை அனுபவித்து வரும் வர்த்தகரின் மிதமிஞ்சிய அளவிலான இலாபங்களை குறைவடையச் செய்வதற்கென தொழிலாளர்கள் அல்லது சிறு வழங்குனர்கள் கூட்டாக பேரம் பேசலை மேற்கொள்வது இரண்டாவது மிகச் சிறந்த தெரிவாக இருந்து வருகின்றது. மேலும், அத்தகைய குழு அடிப்படையிலான அணுகுமுறைகள் உண்மையிலேயே கொடுக்கல் வாங்கல் செலவுகளை குறைப்பதுடன், உச்சமட்ட அனுகூலங்களையும் எடுத்து வருகின்றன.

மாறுதல் முகவர் நிகழ்ச்சித்திட்டம் இதனை சிறந்த முறையில் நிருபித்துக் காட்டியுள்ளது. உதாரணமாக, தென்னிலங்கையைச் சேர்ந்த பாரம்பரிய பெண் தும்புக்கயிறு உற்பத்தியாளர்கள் நீண்ட காலமாக இடைத்தரகர்களின் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளனர். இந்த இடைத்தரகர்கள் இப்பெண் தொழிலாளர்களுக்கு தும்பை கடனுக்கு வழங்கி வந்ததுடன், முடிவு உற்பத்திப் பொருளை நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலையில் கொள்வனவு செய்து வந்தனர். எவ்வாறிருப்பினும், மா மு நி யின் தலையீட்டையடுத்து கயிறு உற்பத்தியாளர்கள் தம்மை ஓர் அமைப்பில் ஒன்று திரட்டிக் கொண்டதுடன், குழு நிதியம் ஒன்றையும் உருவாக்கிக் கொண்டார்கள். அதன் பின்னர் தமக்குத் தேவையான உள்ளீடுகளை இக்குழு நிதியத்தை பயன்படுத்தி தும்பு ஆலைகளிலிருந்து நேரடியாக கொள்வனவு செய்தனர். இவர்களின் இந்த கூட்டு முயற்சி பிற்காலத்தில் மேலும் வலுவடைந்ததுடன், அவர்கள் மிகப் பெரிய தும்புக் கயிறு ஏற்றுமதி நிறுவனத்தை அணுகி தமது உற்பத்திப் பொருட்களை அந்நிறுவனத்திற்கு நேரடியாக விற்பனை செய்யக்கூடிய ஆற்றலை பெற்றுக் கொண்டனர்.

சிறு உற்பத்தியாளர் குழுக்கள் தொடர்ந்தும் நிலைத்து நிற்பதற்கான பாரிய ஆற்றலை கொண்டுள்ளன என்பதனை மா மு நி அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது.

(அ) தாம் ஏற்கனவே தேர்ச்சியை பெற்றுக் கொண்டிருக்கும் பொருளாதார நடவடிக்கையிலேயே குழு உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்த உறுப்பினர்கள் அனைவரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஒரேவிதமான இயல்பை கொண்டவையாகவே இருந்து வருகின்றன.

(ஆ) குறிப்பிட்ட இந்த நடவடிக்கை அவர்களுடைய பிரதான வருமான மார்க்கமாக உள்ளது.

(இ) இந்த நடவடிக்கை பேரண்டப் பொருளியல் சூழலினால் ஆதரவளிக்கப்பட்டு வரும் பொருளாதாரத் துறைகளுடன் பரந்த அளவில் இணங்கிச் செல்பவையாகவே இருந்து வருகின்றன.

எனினும், இந்தக் குழு அடிப்படையிலான அணுகுமுறைகள் அணிதிரட்டுதல் மற்றும் வலுவூட்டுதல் என்பன தொடர்பான ஒரு பிரச்சினையையும் கொண்டுள்ளன. அதாவது, அவை வெகு விரைவில் தற்போதைய சமூக ஏறுவரிசைகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுக்கு (தனி நபர் அடிப்படையிலான அணுகுமுறைகள் மேற்கொள்ளாத விதத்தில்) சவால் விடுக்கத் தொடங்குகின்றன. இதன் விளைவாக தற்போதைய நிலையில் மாற்றங்களை எடுத்து வர விரும்பாத சக்திகள் இதற்கு எதிர்விளைவு காட்டத் தொடங்குகின்றன. அரசாங்கங்கள் மற்றும் உதவி வழங்கும் முகவரகங்கள் என்பவற்றின் வறுமை ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் வறியவர்களுக்கு வலுவூட்டும் தமது குறிக்கோள்களை தெளிவான இலக்குகளுடன் முன்வைக்கின்றன. எனினும், வறியவர்களுக்கு வலுவூட்டுவதற்கான இந்தப் பொறிமுறை விழிப்புணர்வுத் தூண்டல் சமூக அணிதிரட்டல் மற்றும் வறியவர்களை ஓர் அமைப்பில் அணிதிரட்டல் போன்றவற்றின் மீது தங்கியிருக்கும் பொழுது இந்தக் குறிக்கோளை மோதல்கள் ஏற்படாத ஒரு நிலையில் சாதித்துக் கொள்வது சாத்தியமில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

மா மு நி நிகழ்ச்சித்திட்ட அனுபவம் இந்த விடயத்தையும் தெளிவான விதத்தில் நிருபித்துக் காட்டியுள்ளது. மா மு நி முறைமையியல் அதன் அசல் கட்டமைப்பில் பூரணமற்ற சந்தைகள் மற்றும் ஏகபோக போட்டி கோட்பாட்டினை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. மாறாக, கிராமியச் சமூகங்களின் உற்பத்தி உறவுகள் தொடர்பாக மார்க்ஸிய பொருள் விளக்கத்தினையே அது அடிப்படையாக கொண்டிருந்தது. வறியவர்களை அணி திரட்டும் அதன் செயன்முறை தற்போதைய உபரி உற்பத்தி சுரண்டல், தக்கவைத்துக் கொள்ளல், மற்றும் முதலீடு என்பவற்றின் போக்குகளை மாற்றியமைப்பதன் மூலம் கிராமிய வறியவர்களின் சமூக மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கு தூண்டுதல் அளிப்பதனையும், அதன் மூலம் பெருமளவுக்கு மூடுண்டதாகவும் தனித்து விடப்பட்டதாகவும் இருந்துவரும் கிராமியப் பொருளாதாரத்தின் உற்பத்தி உறவுகளையும், உற்பத்தி அடித்தளத்தையும் மாற்றியமைப்பதையும் நோக்கமாக கொண்டிருந்தது. எனவே, மா மு நி பொருளாதார வளர்ச்சிக்கு ஊடாகவன்றி மீள் பகிர்வுக்கு ஊடாக சமூக நீதியை சாதித்துக் கொள்வதற்கு முயன்று வந்துள்ளது என்பது தெளிவாகும். எனினும், இச்செயன்முறை வறியவர்களுக்கும் தமது மிதமிஞ்சிய இலாபங்களை இழக்க வேண்டி நேரிட்ட இடைத்தரகர்களுக்குமிடையில் ஒரு மோதல் நிலை தோன்றுவதற்கு வழிகோலியதனையடுத்து இந்த சமூக அணிதிரட்டல் சக்திகள் சில சுய அக்கறை குழுக்களினால் மார்க்ஸிய எழுச்சியொன்றின் முன்னோடிகளாக நோக்கப்படத் தொடங்கினர். இது அக்காலகட்டத்தில் மூலதனத்துக்கு ஆதரவான, சந்தைக்கு ஆதரவான நிலைப்பாட்டினை கொண்டிருந்த கொள்கைக் கர்த்தாக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோரைப் பொறுத்தவரையில் ஒரு கசப்பு மருந்தாக இருந்து வந்தது. இதனையடுத்து, 1970 களின் பொருளாதார பின்னடைவுகளுக்கு வழிகோலியிருந்த ஜனரஞ்சகமற்ற சோஷலிஸ கொள்கைகளுக்கு எதிராக ஓர் எதிர்விளைவு தோன்றியது. மா மு நி யின் குறிக்கோள்கள் மற்றும் முறைமையியல் என்பன அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார செயற்றிட்டங்களுக்கு உகந்தவையாக இருந்து வரவில்லை. இதனையடுத்து இந் நிகழ்ச்சித்திட்டம் அதன் மார்க்ஸிய பண்புக் கூறுகளை மெதுவாக புறந்தள்ளியதுடன், பங்கேற்பு நுட்பங்களை ஒருங்கிணைத்துக் கொண்ட வறுமை நோக்கிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றாக தன்னை மாற்றியமைத்துக் கொண்டுள்ளது. அதன் முறைமையியலும் ஒரு நிலைமாற்றத்தை எதிர்கொண்டுள்ளது. கிராமத்தின் உற்பத்தி உறவுகளை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கை அடிப்படையிலான ஒரு நிகழ்ச்சித்திட்டமாக இது முன்னர் இருந்து வந்தது. அதனையடுத்து ஸ்தாபிதமாகியிருக்கும் சமூக்

கட்டமைப்பு மற்றும் ஏறுவரிசை என்பவற்றுக்கு எந்த வகையிலும் சவால் விடுக்காத வறியவர்களுக்கு பொருளாதார சக்தியை அளிக்கும் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது. இந்த மாற்றம் ஒரு சில வட்டாரங்களில் 'மோதல்' நிலையில் இருந்து 'நல்லிணக்க' நிலையை நோக்கி ஏற்பட்ட ஒரு நகர்வு என குறிப்பிடப்பட்டது. அதன் பின்னர் இந்நிகழ்ச்சித் திட்டம் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கும் சுயவேலை நடவடிக்கைகளுக்கும் ஊக்கமளிக்கத் தொடங்கியது. கொடை நிறுவனங்களின் உதவி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பவர்களுக்கும், குழுக்களுக்கும் பயிற்சியளித்தல் மற்றும் ஆற்றல்களை கட்டியெழுப்புதல் என்பவற்றிடையே பெருமளவுக்கு கவனம் செலுத்தியது.

வறியவர்களின் கூட்டு செயற்பாடு மற்றும் அவர்கள் வலுவடையும் நிலை என்பவற்றினால் இழப்புக்களை எதிர்கொள்ளக் கூடிய குழுக்கள் சிறு உற்பத்திக் குழுக்களின் மீது பாதிப்புக்களை எடுத்து வரக்கூடிய அச்சுறுத்தலும் இருந்து வருகின்றது. அதே போல இந்தச் சிறு உற்பத்தி குழுக்கள் உள்ளக பிரிவினைச் சக்திகளினாலும் நலிவடைய முடியும். முதலாவதாக, பொருளாதார தாராளமயமாக்கல் சக்திகள் சமூகத்தின் அடிமட்டம் வரையில் ஊடுருவிச் செல்லும் பொழுது அவை குழு உறுப்பினர்களின் வருமான மார்க்கங்களை பன்முகப்படுத்துவதுடன், குழு இசைவு நிலையின் முக்கிய கூறு ஒன்றாக இருந்து வரும் குழு ஒருமித்த தன்மையின் மீதும் தாக்கங்களை எடுத்து வருகின்றது. இந்த நிலையில் குழுக்கள் எளிதில் பாதிப்படையக் கூடியவையாக இருந்து வருவதுடன், முறிவடையக்கூடிய நிலையும் தோன்றுகின்றது. இரண்டாவதாக, குழுக்கள் தமது உற்பத்தி ஆற்றலின் உச்ச மட்டத்தை எட்டி அதற்குமேல் செல்வதற்கு அவசியமான தொழில்நுட்பம் இல்லாத நிலையில் இருந்து வரும் பொழுது முன்னேற்ற உணர்வு இழக்கப்படுவதுடன், குழு உறுப்பினர்களை ஒன்றாகப் பிணைத்து வைத்திருப்பதற்கான ஊக்குவிப்புக்களும் குறைவடைகின்றன. மூன்றாவதாக, தெளிவான உதவிகளுடன் கூடிய ஏனைய அரசாங்க மற்றும் அரசு சாராத வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், வேறுபட்ட செய்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் என்பவற்றுடன் இந்நிகழ்ச்சித்திட்ட பரப்பு ஆக்கிரமிப்பு செய்யப்படும் பொழுது, அவை மா மு நி போன்ற செயல்முறைகளின் உந்து விசையாக இருந்து வரும் சுயதூண்டுதல் உணர்வினை மழுங்கடையச் செய்து விடுகின்றன. இறுதியாக இத்தகைய திட்டங்கள் ஒருமித்த தன்மை, பொது வாழ்க்கை வழி மற்றும் சாதகமான பொருளாதார சூழல் என்பவற்றுக்கு அவசியமான நிபந்தனைகளை பூர்த்தி செய்யக்கூடிய வணிக நிறுவனங்களாக வளர்ச்சி கண்டாலே தவிர ஒரு சில குழுக்கள் மட்டுமே வெளித் தூண்டுதலில்லாமல் செயற்படக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும்.

## நிலைத்து நிற்கக்கூடிய தன்மையுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்

மாறுதல் முகவர் நிகழ்ச்சித்திட்டம் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது கிராமிய பொருளாதார மற்றும் சமூக மாற்றத்துக்கான சமூக இயக்கமொன்றை தூண்டி விடுவதே அதன் இறுதிக் குறிக்கோளாக இருந்து வந்தது. இந்நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாட்டின் நடு வழியில் கிராமிய பொருளாதார மற்றும் சமூக மாற்றம் என்ற குறிக்கோளை வறுமைத் தணிப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி என்ற குறிக்கோளாக மாற்றியமைத்துக் கொண்டது. திருத்தப்பட்ட இந்த குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதும் கூட சிரமமான ஒரு காரியமாகவே இருந்து வந்தது. மா மு நி யின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகள் மற்றும் சக்திகள் என்பவற்றில் அது தங்கியிருந்தமையே இதற்கான காரணமாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சமூக அணி திரட்டல், சுய ஏற்பாடு மற்றும் கூட்டு நடவடிக்கை என்பன மட்டும் வறுமைத்தணிப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி என்ற குறிக்கோளை நிறைவேற்றிவைக்க முடியாது என்ற விடயம் தெளிவாக தெரிய வந்தது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு சுமார் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் தனது குறிக்கோள்களை சாதித்துக்கொள்ளும் விஷயத்தில் இன்னமும் தெளிவான ஒரு முடிவு தென்படவில்லை என்ற உண்மையை மா மு நி உணர்ந்து கொண்டது. அதே வேளையில், மா மு நி யின் பிரதம நிதியுதவி நிறுவனமான சிடா அமைப்பு அதன் உதவியை கட்டம் கட்டமாக குறைத்துக், கொள்ளத் தொடங்கியது. இந்த நிலையில் மா மு நி யினால் துவக்கி வைக்கப்பட்டிருக்கும் வறுமை ஒழிப்பு திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் பொருட்டு வேறு பொறிமுறைகளை கண்டறிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்பட்டது.

அதனையடுத்து சிறு குழுக்களை அரசு சாரா நிறுவனங்களாக நிறுவனப்படுத்தும் முயற்சியில் அது ஈடுபட்டது. இவ்விதம் உருவாக்கப்பட்ட இரண்டாம் நிலை நிறுவனங்கள அதன் உறுப்பினர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்கும் பொருட்டும், நிறுவனங்களுக்கும் மா மு நி யின் ஊக்குவிப்புச் செயற்பாடுகளுக்கும் வருமானத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கும் சிறு நிதியளிப்பு நிறுவனங்களாக நிலை மாற்றம் செய்யப்பட்டது. மறுபுறத்தில், பயிற்றுவிப்பவர்கள் மற்றும் மாறுதல் முகவர்கள் ஆகியோரின் சேவைகளை அரசாங்கம் நிறுத்தியிருந்ததுடன், அவர்களுக்கான கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த நிலையில் இந்த சிறு நிதியளிப்பு ஏற்பாடு இவ்விதம் வேலைகளை இழந்தவர்களுக்கு செயற்படுவதற்கு ஒரு களத்தை வழங்கியதுடன், அவர்களுக்கு ஒரு ஜீவனோபாயத்தையும் வழங்கியது. எனவே, இலங்கை அரசாங்கமும் சிடா அமைப்பும் இந்த நிறுவனங்களின் மீது ஒரு கடுமையான நிதி நிர்ப்பந்தத்தை எடுத்து வந்திருந்ததுடன், ஒன்றில் வீழ்ச்சி அடைவது அல்லது எதிர் நீச்சல் அடிப்பது என்ற இரு தெரிவுகளில் ஒன்றை அவை எதிர்கொண்டிருந்தன.

எனினும், இந்த நிறுவனங்களின் தொடர்ச்சி பிந்திய ஒரு கால கட்டத்திலேயே கேள்விக் குறியாக்கப்பட்டிருந்தமையினால் புதிய நிலைமைகளுக்கு சீராக்கம் செய்து கொள்வதற்கு அவற்றுக்கு போதிய கால அவகாசம் இருந்து வரவில்லையென பேர்கேகார்ட் (1998) சுட்டிக் காட்டுகின்றார். ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் அவை தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்றாண்டு கால அவகாசம் மட்டுமே அவற்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், அரசாங்கமும் சிடா நிறுவனமும் இந்த நிகழ்ச்சித்திட்டதிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் இவற்றின் ஆற்றல்களைக் கட்டியெழுப்பும் விஷயத்திலும் போதிய அளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. இதன் விளைவாக இந்நிறுவனங்களின் முகாமைத் திறன் நலிவடைந்திருந்ததுடன், இவற்றில் முகாமைத்துவ மற்றும் தகவல் தொகுப்புக்கள் அறவே காணப்படவில்லை. சிறு நிதியளிப்பு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த மாத வருமானம் நிர்வாகச் செலவுகளை ஈடுசெய்வதற்கு மட்டுமே போதியதாக இருந்து வந்தது. மாறுதல் முகவர்களாக செயற்பட்டு வந்தவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை நிலவி வந்ததால் அவர்கள் பலரின் பணிகள் நிறுத்தப்பட்டன. இதன் விளைவாக நிகழ்ச்சிதிட்டத்தின் முன்னேற்றம் இடையூறினை எதிர்கொண்டது.

இன்று மா மு நி யின் பெரும்பாலான சிறு நிதியளிப்பு நிறுவனங்கள் நலிவுற்றவையாக இருந்து வருவதுடன், அவற்றில் எத்தனை நிறுவனங்கள் தொடர்ந்தும் நீடிக்க முடியும் என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது. இத்தகைய ஒரு சில நிறுவனங்கள் அரசு சாரா அமைப்புக்களாக வெற்றிகரமாக தம்மை நிலைமாற்றம் செய்து கொண்டிருப்பதுடன், பல்வேறு கொடையாளிகளிடமிருந்தும் உதவிகளைப் பெறுவதற்கு முயன்றுள்ளன. எனினும், இலங்கையின் பெரும்பாலான சிறு நிதியளிப்பு திட்டங்களை போலவே இவையும் கொடைகளிலேயே தங்கியிருந்து வர முடியும். மறுபுறத்தில், அரசாங்கதின் புதிய சிறு நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டமான சமுர்த்தி திட்டம் மா மு நிகழ்ச்சித்திட்டத்தின்

சிறு நிதியளிப்பு நிறுவனங்களின் வாடிக்கையாளர் தொகுப்பினையும் வைப்பு அடித்தளத்தினையும் வேகமாக கைப்பற்றி வருவதுடன், மா மு நி யின் விரிவாக்கத்துக்கும் வளர்ச்சிக்குமான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தியுள்ளது. பயிற்சியளிப்பவர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோரால் மா மு நி யின் சிறு நிதியளிப்பு நிறுவனங்களை தொடர்ந்து இயங்கக் கூடிய நிறுவனங்களாக ஆக்க முடியுமா என்பதும் சந்தேகத்துக்குரியதாகவே இருந்து வருகின்றது. மேலும், தற்பொழுது மா மு நி நிறுவனங்களில் பணியாற்றி வரும் பெருந்தொகையான பயிற்சி அளிப்பவர்கள் மாறுதல் முகவர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் தமக்கு கவர்ச்சிகரமான நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதாக இருந்தால் அத்தகைய தொழில்களை ஏற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கலாம். அந்த நிலையிலும் இந்நிறுவனங்களின் நீடித்த செயற்பாடு பாதிப்படைய முடியும்.

தமக்குக் கிடைக்கும் உதவி விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் தொடர்ந்தும் நிலைத்திருப்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு மா மு நி தனது அமைப்புக்களை சிறு நிதியளிப்பு நிறுவனங்களாக நிறுவனமயப்படுத்திக் கொள்வதற்கு முன்வந்தது. ஆனால், இந்த நிறுவனமயமாக்கல் இந்தக் குழுக்களின் நெகிழ்ச்சித் தன்மையையும் உள்ளார்ந்த இயல்பினையும் மாற்றியமைத்து, அவற்றை அதிக அளவுக்கு இயந்திரத்தனமான நிறுவனங்களாக உருவாக்கியிருக்க முடியும். மேலும், முறைசார்ந்த விதத்தில் நிறுவனமயமாக்கல் மேற்கொள்ளப்படும் பொழுது நிகழ்ச்சித்திட்ட கட்டமைப்புக்கள் நெகிழ்ச்சித் தன்மை அற்றவையாகவும், அதிகார தோரணை கொண்டவையாகவும் மாற்றமடைவதுடன், நிகழ்ச்சித்திட்ட பங்கேற்பாளர்களின் உரித்தினையும் குறைவடையச் செய்கிறது. அவற்றின் கட்டமைப்புக்கள் மற்றும் செயன்முறைகளின் அடிப்படையில் நிறுவனத்துக்குள் நிலவி வரும் நெகிழ்ச்சித் தன்மை என்பவற்றின் அடிப்படையிலான நிறுவனங்களின் (உற்பத்தியாளர் குழுக்களின்) முறைசாராத இயல்பு அவற்றை கூட்டு நடவடிக்கைகயை தூண்டும் ஒரு வழிமுறையாக, சக்திவாய்ந்த நிறுவனங்களாக உருவாக்கியுள்ளன என 1990 களின் தொடக்கத்தில் கம்மன்பிலவும் ஏனையோரும் அவதானித்துள்ளனர். இரண்டாம் நிலை மட்டத்திலான நிறுவனங்கள் இந்த செயன்முறையின் ஆயுள் காலத்தை நீடித்திருக்க முடியும். ஆனால், நிர்வாக எல்லைகளுடன் கூடிய விதத்திலான நிறுவனமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைப்பு என்பன இந்த நிறுவனங்களின் அசல் சக்தியை பலவீனப்படுத்தியிருக்க முடியும். மேலும், இதனையொத்த நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பவர்கள் வறியவர்களைக் கொண்ட பெரும்பாலான நிறுவனங்களின் இயங்கியல் இயல்பினை அங்கீகரிப்பது அவசியமாகும். குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காக குழுக்கள் உருவாக்கப்படுவதுடன், இனிமேலும் அந்நோக்கம் நிறைவேற்றி வரப்படவில்லை என்பதனை அல்லது உறுப்பினர்களுக்கிடையே தொடர்ந்தும் ஒருமித்த அக்கறைகள் நிலவி வரவில்லை என்பதனை தெரிந்து கொள்ளும் பொழுது அக்குழுக்கள் முறிவடைகின்றன. அதன் பின்னர் பொது அக்கறையைக் கொண்ட வேறுபட்ட சேர்க்கைகளுடன் புதிய குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. அத்தகைய நிறுவனங்களை அல்லது கழகங்களை நிரந்தர அமைப்புக்களாக நிலைமாற்றம் செய்வதற்கு முயற்சிப்பது யதார்த்தத்துக்கு புறம்பானதாக இருந்து வருவதுடன், அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் பயனையும் பெற்றுக் கொள்ள முடியாது போய்விடும். குறிப்பிட்ட குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் கொண்டிருக்கும் ஆற்றலுக்கு ஏற்றவிதத்தில் குறிக்கோள்கள் வகுத்துக்கொள்ளப்பட வேண்டிய தேவையையும், அதன் பின்னர் தெளிவான நியாயமான இலக்குகளையும் நிகழ்ச்சித்திட்டத்தை முடிவுறுத்துவதற்கான அளவுகோலையும் உருவாக்கிக்கொள்ள வேண்டிய தேவையையும் மா மு நி யின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. வறுமைத் தணிப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் நல்லாட்சியை ஏற்படுத்துதல் போன்ற குறிக்கோள்கள் இத்தகைய இயல்பினைக் கொண்ட நிறுவனங்களைப் பொறுத்தவரையில் (அவை தமது குறிக்கோள்களை சாதித்துக்கொள்ளும் பொருட்டு பல்வேறு காரணிகளில் தங்கியிருக்கும் நிலையில்) அதிக அபிலாசைகளுடன் கூடிய இலக்குகளாக இருந்து வர முடியும். நகர சேரிகளில் செலவுகளைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையிலாவது நீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளல், மது மற்றும் போதைப் பொருள் பாவனை என்பவற்றை குறைத்தல், சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் இயற்கை வளங்களின் கொள்ளை என்பவற்றை தடுத்து நிறுத்துதல், வீட்டில் இடம்பெறும் வன்செயல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கு எதிராக கூட்டு நடவடிக்கைகளை தூண்டுதல் போன்ற அதிகளவுக்கு யதார்த்த ரீதியிலான இலக்குகளைச் சாதித்துக் கொள்வதற்கென குழு அடிப்படையிலான உத்திகள் வறியவர்களுக்கு வலுவூட்டுவது இன்றைய நிலையில் அவசியமானது என்பதனை நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். எனினும், இப்பிரச்சினைகளைக் கையாளும்பொழுது விழிப்புணர்வு தூண்டல் நடவடிக்கைகளையும் வறியவர்களை அணிதிரட்டும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசியமாகும்.

## பொருத்தம் தொடர்பான விடயங்கள்

வறியவர்கள் தமது நலிவு நிலையைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு சமூக மட்டத்தில் தம்மை அணிதிரட்டிக் கொள்வதற்கு உதவ முயற்சிக்கும் மா மு நி போன்ற முன்முயற்சிகள் குறுங்காலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றத்தை எடுத்துவர முடியும். ஆனால், இலங்கையைப் போன்ற குடிச்செறிவு மிக்க நாடுகளில் வாழ்ந்து வரும் கிராமிய வறியவர்களில் பெரும்பாலானவர்களைப் பொறுத்தவரையில் வறுமை மற்றும் வலுவற்ற நிலை என்பவற்றிலிருந்து மீண்டு வருவதற்கான நீண்டகால அடிப்படையிலான வழி அவர்களை அணிதிரட்டல் அல்ல; மாறாக அவர்களுக்கு அதிகமதிகமான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமே அக்குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அரசாங்கங்களினாலும் அதேபோல கொடை முகவரகங்களினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் பெரும்பாலான வறுமைத் தணிப்பு உத்திகளின் ஒரு முக்கியமான பலவீனம் அவை குடிமக்கள் ஆடாமல் அசையாமல் ஒரேயிடத்தில் நின்றுள்ளார்கள் என அனுமானித்து அவர்களை அவ்விதம் வைத்துக்கொள்ளும் பொருட்டு திட்டங்களை தயாரிப்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அரசாங்கங்களும் கொடை முகவரகங்களும் அபிவிருத்தியை மக்களுக்கருகில் எடுத்துச் செல்வதற்கு முயற்சிப்பதுடன், நிலைமைகளை மாற்றியமைப்பதன் மூலம் வறியவர்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் வறுமையைக் குறைப்பதற்கு முயன்று வருகின்றன.

கிராமிய வறுமை ஒழிப்பு தொடர்பான இந்த ஒரே இடம் சார்ந்த அணுகுமுறை முக்கியமான ஒரு விடயத்தை மறந்து விடுகின்றது. அதாவது, அபிவிருத்தியே மக்கள் ஆவார்கள், பிரதேசங்கள் அல்ல என்பதே அந்த விடயமாகும். குறிப்பிட்ட ஒரு பிரதேசம் மூலவளங்கள், அமைவிடம் அல்லது வேறு ஏதேனும் ஒப்பீட்டு அனுகூலம் என்பவற்றின் அடிப்படையில் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்குமானால் அப்பொழுது அப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது அப்பிரதேசத்தில் வாழும் மக்களை அபிவிருத்தி செய்வதற்கும் வறுமையைத் தணிப்பதற்கும் நிச்சயமாக உதவ முடியும். ஆனால், பெரும்பாலான பிரதேசங்கள் மூலவளங்கள் அற்றவையாக இருந்து வருவதுடன், அதுவே அங்கு நிலவி வரும் வறுமைக்கான காரணியாகவும் இருந்து வருகின்றது. அதிக வாய்ப்புக்களுடன் கூடிய இடங்களுக்கு நகர்ந்து செல்வதற்கு தேவையான திறன்களும் வளங்களும் தம் வசம் இல்லாதிருந்து வருவதனாலேயே மக்கள் அத்தகைய சுற்றாடல்களில் தொடர்ந்தும் வாழ்ந்து வருவதுடன்

வறுமையையும் அனுபவித்து வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, நாங்கள் செயல்முனைப்புடன் கூடிய ஓர் அணுகுமுறையைப் பின்பற்றி வறுமை தொடர்பான பிரச்சினையை வறியவர்களின் - இடம் சார்ந்த தொழில்சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த அடிப்படையில் - ஓரிடத்தில் தேங்கிக்கிடக்கும் நிலையின் பின்னணியில்- நோக்கினால் அப்பொழுது மக்கள் வறுமையிலிருந்து மீட்சிபெற முடியாமல் அவர்களைத் தடுத்துக் கொண்டிருக்கும் பெருந்தொகையான இடையூறுகளை எம்மால் கண்டறிந்து கொள்ள முடியும். வறியவர்கள் இடம் சார்ந்த அடிப்படையில் ஒரே இடத்தில் நிலைத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம். அதாவது, நில குடிவார முறை மற்றும் மூலதன பற்றாக்குறை என்பவற்றின் காரணமாக வளம் குன்றிய தொலைதூர பிரதேசங்களில் பிழைப்பூதிய விவசாயத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டிருப்பதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம். தம்மிடம் போதிய அளவில் மூலதனம் இல்லாதிருப்பதனால் இக் காணிகளை விற்றுவிட்டு நல்ல வளமான பிரதேசங்களில் காணிகளை வாங்கக்கூடிய சக்தி அவர்களுக்கு இல்லை. மேலும், சிறந்த தொழில் வாய்ப்புகள் காணப்படும் நகரப் பிரதேசங்களுக்கும் அவர்களால் குடி பெயர்ந்து செல்ல முடியாது. ஏனெனில் நகர பிரதேசங்களில் காணி மற்றும் இருப்பிடம் என்பவற்றுக்கு அவர்கள் உயர் அளவில் செலவுகளை ,மேற்கொள்ள வேண்டியுள்ளது. தேர்ச்சித் திறன்கள் இல்லாதிருப்பதனால் வேறு தொழில்களைப் பெற முடியாத நிலை காரணமாகவும் மக்கள் வறியவர்களாக இருந்து வர முடியும். திறன்கள் இல்லாதிருப்பதனாலும் அதன் காரணமாக நல்ல வேதனத்துடன் கூடிய தொழில்களைத் தேடி வெளியே செல்ல முடியாதிருப்பதனாலும் மிக்க குறைந்த ஆதாயங்களை எடுத்து வரும் பொருளாதார நடவடிக்கைகளின் மீது நீண்ட நேரத்தை செலவிடுவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம். மேலும், வறியவர்கள் சமூக ரீதியில் ஓரிடத்தில் நிலைத்திருப்பவர்களாகவே இருந்து வருகின்றனர். சமூக, அரசியல் அல்லது கலாச்சார காரணிகளால் அவர்கள் தமது சொந்தக் கிராமங்களில் புறமொதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வர முடியும். அந்த நிலையில் அவர்களால் ஏனையவர்கள் அனுபவித்து வரும் வளங்களையோ அல்லது சேவைகளையோ பெற்றுக் கொள்ள முடியாதும் போகலாம். உதாரணமாக, இலங்கையின் அரசியல் கலாச்சாரத்தில் "உள்" ஆட்கள் மற்றும் "வெளி" ஆட்கள் என்ற பிரிவினை நிலவி வருவதுடன், வெளி ஆட்களைப் பொறுத்த வரையில் வேலைவாய்ப்புகள், வளங்கல் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் பல இடையூறுகள் காணப்படுகின்றன. குடும்பம், உறவுமுறை மற்றும் அரசியல் அனுசரணை என்பவற்றின் அடிப்படையில் ஒருவர் உருவாக்கிக் கொள்ளக்கூடிய தொடர்புகளிலேயே வேலைவாய்ப்புக்கள், பொருட்கள், சேவைகள் மற்றும் ஏனைய வாய்ப்புக்கள் என்பவற்றை அவர் அணுக முடிகிறது. இந்த அமைப்பில் எத்தகைய வசதிவாய்ப்புக்களும் அற்ற நிலையில் வாழ்ந்து வரும் வறிய மக்கள் பெருமளவுக்கு பிரதிகூலங்களை அனுபவித்து வருகின்றனர்.

வறியவர்கள் தொழில்ரீதியாக, சமூக ரீதியாக அல்லது இடரீதியாக வெளியே நகர்ந்து செல்ல முடியாதவர்களாக அல்லது இந்த மூன்று காரணிகளினதும் அடிப்படையில் வெளியே செல்ல முடியாதவர்களாக இருந்து வருபவர்கள் என அவர்களுக்கு நாங்கள் வரைவிலக்கணம் வழங்கினால் அவர்கள் வெளியே நகர்ந்து செல்லக்கூடிய நிலையை எடுத்து வந்து, நீண்டகால அடிப்படையில் அவர்களுடைய வறுமையை தணிக்கக் கூடிய மிகச் சிறந்த கொள்கை எது என்பதனை எம்மால் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். இந்த விஷயத்தில் வேறு எந்த காரணியைப் பார்க்கிலும் கல்வி ஒரு முக்கியமான இடத்தினை வகித்து வருகின்றது. அதாவது, வறியவர்களை வெளியே நகர்ந்து செல்லச் செய்வதிலும், அவர்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்கச் செய்வதிலும் அது நிர்ணயகரமான ஒரு பங்களிப்பை வழங்குகின்றது. அதே போல - உதாரணமாக ஆங்கில மொழி அறிவு மற்றும் கணிப்பொறித் திறன்கள் போன்ற - ஊழியச் சந்தையில் கிராக்கி நிலவி வரும் துறைகளில் திறன்களை விருத்தியடையச் செய்வது தொழில்சார் ரீதியில் வறியவர்கள் வெளியே நகர்ந்து செல்வதற்கும் நல்ல சம்பளத்துடன் கூடிய தொழில்களை பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக்களை அளிக்கும். மேலும், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் என்பனவும் வறியவர்கள் நல்ல செழிப்பு நிலை நிலவி வரும் பிரதேசங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது வறிய விவசாயிகள் தமது பண்டங்களை நல்ல விலைகள் நிலவி வரும் சந்தைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு உதவ முடியும். வேறு காரணிகளைக் கவனத்தில் எடுக்காது தகுதியின் அடிப்படையில் மட்டும் தொழில்கள் மற்றும் ஏனைய வாய்ப்புக்கள் என்பவற்றை பெற்றுக் கொடுக்கும் நடைமுறையின் மீள் ஸ்தாபிதம் வறியவர்களின் முன்னேற்றத்துக்கு இடையூறாக இருந்து வரும் நியாயமற்ற தடங்கல்களை களைவதுடன், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும். எனவே, வறுமை ஒழிப்பு தொடர்பான மக்களை வெளியே நகர்த்திச் செல்வதனை அடிப்படையாகக் கொண்ட ஓர் அணுகுமுறை வறியவர்களை ஒரேயிடத்தில் வைத்திருக்கும் செயன்முறைகளை மாற்றியமைப்பதற்கான வாய்ப்பினை எமக்கு வழங்கும்.

இந்தப் பின்புலத்தில் வறியவர்களுக்கு வலுவூட்டுவதற்கென அவர்கள் தம்மைத் தாமே தாபன அமைப்பில் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு இடமளிப்பதனையும் உள்ளிட்ட தலையீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பாரம்பரிய அணுகுமுறைகள் வறியவர்கள் வாழ்ந்து வரும் அதே இடத்தில் அவர்களை வைத்திருக்கும் அதே வேளையில், வறுமையை வெற்றிகொள்வதற்கென அவர்களுக்கு உதவுவதற்கு முயற்சிக்கின்றன. இயற்கை வளங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகள் போன்ற வெளிக் காரணிகள் சாதகமாக இருந்துவரும் நிலையில் இத்தகைய அணுகுமுறைகள் வெற்றியளிக்க முடியும். ஆனால், உள்ளூர் காரணிகள் வறியவர்கள் வெளியே நகர்ந்து செல்வதற்கு இடையூறாக இருந்து வரும் ஏனைய பிரதேசங்களில் அத்தகைய தலையீடுகள் தாக்கமானவையாக இருந்து வர முடியாது. வளம் குன்றிய சூழல், கல்வி வசதிகள் இல்லாத நிலை அல்லது திறன் விருத்திச் சேவைகள் இல்லாத நிலை, ஊழல் மற்றும் சுரண்டல் தன்மை வாய்ந்த அரசியல் மேட்டுக் குடியினரின் அடக்குமுறை வடிவங்கள் மற்றும் சாதிக் கட்டமைப்புக்கள் என இந்த இடையூறுகள் விரிந்து செல்கின்றன. எனவே, உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு அதிக அளவிலான தன்னாதிக்கத்தை வழங்குவதன் மூலம் வறியவர்களுக்கு வலுவூட்ட முயலும் உத்திகள் உண்மையிலேயே வறியவர்களை ஒரேயிடத்தில் தேங்கிக் கிடக்க வைத்திருக்கும் கட்டமைப்புக்களுக்கு மேலும் வலுவூட்ட முடியும். இது தவிர மோசமான நிர்வாகம் வறுமையை போஷித்து வளர்ப்பதைப் போல வறுமை மோசமான நிர்வாகத்தை போஷித்து வளர்க்கின்றது.

ஏனெனில், வறியவர்கள் அதே அடக்கு முறை கட்டமைப்புக்களுக்குள் அடைக்கப் பட்டவர்களாகவும், வெளியே நகர்ந்து செல்ல முடியாதவர்களாகவும், எளிதில் ஊறுபடத் தக்கவர்களாகவும், உள்ளூர் மேட்டுக் குடியினரை கட்டுப்படுத்தும் திராணி அற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் சுயமாக அணிதிரள்வதனையும் வறியவர்களுக்கு வலுவூட்டுவதனையும் ஊக்குவிப்பது என்பது எந்த வகையிலும் சாத்தியமற்றதாகவே இருந்து வருகின்றது.

மறுபுறத்தில், வறியவர்களின் தேக்க நிலையில் கவனம் செலுத்தும் வறுமை தொடர்பான பகுப்பாய்வு அவர்களை அவ்விதம் தேக்க நிலையில் வைத்திருக்கும் இடையூறு காரணிகளில் இருந்து அவர்கள் தப்பிக்கொள்வதற்கு உதவும் உத்திகளை எடுத்துவர வல்லனவாகும். திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் போக்குவரத்து, தொடர்பாடல் துறைகளில் ஏற்படும் முன்னேற்றம் என்பன வறியவர்களின் தேக்க நிலையை போக்குவதில் எடுத்து வரக்கூடிய தாக்கம் குறித்து நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். எனவே, கொள்கைக் கர்த்தாக்களும் கொடை முகவ ரகங்களும் செய்ய வேண்டியதெல்லாம் நீண்ட கால ரீதியில் வறியவர்களின் வெளி நோக்கிய நகர்வினை - இடம் சார்ந்த தொழில்சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த நகர்வினை - உயர்த்தக் கூடிய திட்டங் களை கண்டறிந்து கொள்வதும், அவற்றில் நிலையான விருத்தி நிலைமைகளை எடுத்து வருவதுமாகும். உதாரணமாக, ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நீண்டகால ரீதியில் வறியவர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், அதற்கூடாக அவர்கள் இட ரீதியிலும் தொழில் ரீதியிலும் வெளியே நகர்ந்து செல்வதற்கும் உதவுகின்றது. மேலும், இலக்குக் குழுவின் பங்கேற்பு, சுய அணி திரளல் மற்றும் வலுவூட்டல் என்பன சேவைகள் சிறந்த முறையில் விநியோகிக் கப்படுவதையும் உத்தரவாத படுத்த முடியும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சிறு நிலச் சொந்தக்காரர்களை கொண்ட இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமே உதவ முடியும். ஆனால், சுகாதாரம் மற்றும் போசாக்கு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் நீண்டகால அடிப்படையில் வறுமையைக் குறைப்பதில் உண்மையில் ஒரு பாரிய தாக்கத்தை எடுத்து வரக் கூடியவையாக இருந்து வருகின்றன. அடுத்த தலைமுறையினரின் வெளி நோக்கிய நகர்வினை அதிகரித்துக் கொள்வதற்கான ஏனைய திட்டங்கள் செயற்படுத்தப்படாவிட்டால் நீர்ப்பாசனத்தின் மீது மேற்கொள்ளப்படும் முதலீடு அடுத்த தலைமுறையினர் மீண்டும் வறுமைப் பொறிக்குள் வீழ்ந்து விடுவதனை தடுத்து நிறுத்த முடியாதிருக்கலாம்.

வறியவர்களின் வெளிநோக்கிய நகர்வினை அதிகரிக்கச் செய்வதன் மூலம் வறுமையை ஒழிப்பதனை நோக்கமாகக் கொண்ட ஓர் உத்தி பேரண்டப் பொருளியல் மட்டத்தில் எத்தகைய தோற்றத்தை கொண்டிருக்க முடியும். பொதுவாக அரசாங்கங்களும் கொடை முகவரகங்களும் கிராமப்புறங்கள் மற்றும் கிராம வாழ்க்கை என்பன குறித்து பரவசத்துடன் கூடிய கருத்தாக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், கிராமப் புறங்களில் யதார்த்தத்தில் இந்த பரவசம் நிலவி வரவில்லை. கிராமிய வறியவர்களில் பெரும்பாலானவர்கள் நகர்மயமாக்கப்பட்ட பின்னர் மட்டுமே அவர்களால் வறுமையி லிருந்து மீள முடியும். எப்படியிருந்த போதிலும், பல வளர்முக நாடுகள் ஊக்கு விப்பதற்கு முயன்று வரும் சந்தைத் தாராளமயமாக்கல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி சக்திகள் நகர்மயமாக்கலுக்கான முனைப்புடன் கூடிய சக்திகளை கட்ட விழ்த்துவிடக் கூடியவையாகவும் இருந்து வருகின்றன. கிராமப் பிரதேசங்களுக்கும் நகர்ப் பிரதேசங்களுக்குமான அதிகரித்து வரும் போக்குவரத்துச் செலவுகளின் பின் புலத்தில் நிறுவனங்கள் தமது தொழில்களை உள்ளீடுகள் கிடைக்கும் இடங்களுக்கு அருகில் அல்லது தமது வாடிக்கையாளர் களுக்கு அருகில் நிறுவுவதற்கு முயன்று வருகின்றன. இந்த நிலையில் கைத் தொழில்களும் மக்களும் குறிப்பிட்ட இடங்களில் செறிந்து காணப்படும் நிலை தோன்றுகின்றது. தொழில்கள் மக்களைத் தேடிச் செல்வதுடன், மக்கள் தொழில்களை தேடிச் செல்கிறார்கள். இந்த செயன் முறையின் போது நகர் மையங்கள் விரி வடைகின்றன. இந்நிலையில் பெரும்பாலான கிராமிய வறியோரைப் பொறுத்தவரையில் செயல் துடிப்புமிக்க நகர்த் துறையிலேயே நல்ல பொருளாதார வாய்ப்புக்கள் நிலவி வருகின்றன.

வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளின் அனுபவம் இது தொடர்பாக எமக்கு ஒரு நல்ல படிப்பினையைத் தருகிறது. அத்தகைய நாடுகளில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு என்பன அவர்களுடைய ஊழியர் படையின் அதிகரித்த அளவிலான நகர்விலேயே தங்கியிருந்தது. இந்த நகர்வு ஆரம்ப உற்பத்தித் துறையிலிருந்து இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உற்பத்தித் துறைகளை நோக்கியும், இட ரீதியில் கிராம பிரதேசங்களிலிருந்து நகர பிரதேசங்களை நோக்கியும் இடம்பெற்றது. எனவே, நீண்ட கால ரீதியில் வறுமையை ஒழிப்பதனை இலக்காகக் கொண்ட ஒரு கொள்கைக் கட்டமைப்பு திட்டமிடப்பட்ட நகர்மயமாக்க லையும், ஊழியத்தின் கிராம பிரதேசங்களி லிருந்து நகர் பிரதேசங்களை நோக்கிய குடியகல்வினையும் ஊக்குவிப்பது அவசிய மாகும். நகர் மையம் சனநெரிசல் மிக்கதாக இருந்து வந்தால் பிரதான நகர் மையத்துக்கு அருகில் உப நகர மையங்களை அபிவிருத்தி செய்வதற்கும், ஒன்றுதிரட்டலின் அனுகூலத்தை இழக்காத விதத்தில் கைத்தொழில்கள் மற்றும் குடித் தொகை என்பவற்றின் உயரளவிலான பரவலை இடம்பெறச் செய்வதற்கும் கொள்கை வகுப்பவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காணிகள் துண்டாடப்படும் விகிதம் உயர்வாகவும் அதன் விளைவாக விவசாய விளைதிறன் தாழ்வாகவும் இருந்து வரும் இலங்கையைப் போன்ற நாடுகளில் காணி உடமைகளின் அளவைப் பராமரித்து வருவதற்கும், விவசாயத் துறையின் உற்பத்தியை எடுத்து வருவதற்கும் கூட உயர் விகிதங்களிலான கிராமிய - நகரக் குடியகல்வு அவசியமாக இருந்து வருகின்றது. அந்த நிலையில் கிராமியத் துறையில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கு விவசாயத் துறையினால் வாழ்வாதாரங்களை வழங்க முடியும்.

*(11ஆம் பக்க தொடர்ச்சி)*

தாக்கமான விதத்தில் எதிர்கொள்ளக் கூடிய முடிவெடுக்கும் முறை இடம்பெற முடியும்.

அரசு

அரசு அது கொண்டுள்ள அதிகாரம் மற்றும் சட்ட அந்தஸ்து என்பவற்றுடன் இணைந்த விதத்தில் ஏனைய முக்கிய அக்கறை தாரர்கள் வறுமை ஒழிப்பில் தாக்கமான முறையில் செயற்படுவதற்கு உசிதமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கும் முக்கிய பொறுப்பினைக் கொண்டுள்ளது. எனவே, இதற்கென வறுமை ஒழிப்புக்கு சார்பான அபிவிருத்தி கட்டமைப்பொன்றும் தாக்கமான செயல்திறன் கொண்ட பொறுப்புக் கூறக் கூடிய ஒளிவு மறைவற்ற ஆட்சி முறையொன்றும் அவசியமாகும். தாக்கமான அரச பொறிமுறை உள்ளூர், பிராந்திய, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் முடிவுகளை எடுக்கும் விஷயத்தில் தாக்கத்தை எடுத்து வருகின்றது. பொது நிர்வாக அமைப்பு, பாராளுமன்றம் மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய பொறிமுறைகளை அது கொண்டுள்ளது. அரசாங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் பொதுத்துறை அதிகாரிகளும் சட்ட அமுலாக்கல் முகவரகங்களும் நீதித் துறையினரும் வறுமை ஒழிப்பு, மானிட அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

"அனைத்து நாகரீகங்களினதும் அடையாளம் மானிட கண்ணியத்துக்கும் சுதந்திரத்துக்கும் அவை அளித்து வரும் மரியாதையாகும்"

*மானிட அபிவிருத்தி அறிக்கை, 2000*

# மனித உரிமைகளின் பின்புலத்தில் வறுமை ஒழிப்பு

கலாநிதி விஜய ஜயதிலக
(பணிப்பாளர்,
இலங்கை மன்றக் கல்லூரி)

வறுமை அபிவிருத்தி மற்றும் சமாதானம் என்பவற்றுக்கான மிகப் பெரிய அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் இருந்து வருகின்றது எனக் கருதப்படுகின்றது. சமூகத்தை குலைத்துவிடும் அச்சுறுத்தலைக் கொண்டிருக்கும் பெருந்தொகையான மோதல் நிலைமைகளின் ஆணிவேராகவும் அது இருந்து வருகின்றது. வருமானமின்மை அல்லது குறைந்த வருமானம் அல்லது ஜீவனோபாய வழிமுறைகள் இல்லாத நிலை என்பவற்றின் விளைவாகவே வறுமை தோன்றுகின்றது எனக் கூறப்படுகின்றது. அந்த நிலையில் மக்களால் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களான உணவு, இருப்பிடம் போன்ற பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. ஆனால், வருமானம் இல்லாத நிலை மட்டும் வறுமையாக இருந்து வரவில்லை. ஏற்றுக் கொள்ளத்தக்க வாழ்க்கைத் தரம் ஒன்றுக்கான தெரிவுகள் மற்றும் வாய்ப்புக்கள் என்பன மறுக்கப்படும் நிலையே வறுமையாக இருந்து வருக்கின்றது. எனவே, இந்த வகையில் வறுமை வருமானம் சார்ந்த வறுமை மற்றும் மானிட வறுமை என வேறுபடுத்தி நோக்கப்பட்டு வருகின்றது. பொருள்சார்ந்த செழிப்பு நிலையை உறுதி செய்யக்கூடிய விதத்தில் வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளை கொள்வனவு செய்வதற்கு இயலச் செய்யக் கூடிய போதிய வருமான மட்டமொன்றை சம்பாதித்துக் கொள்ளும் ஆற்றலின்மை வருமானம் சார்ந்த வறுமையாகும். நீண்ட ஆரோக்கியமான, ஆக்க பூர்வமான வாழ்க்கையொன்றினை நடத்துவதற்கும் ஒரு கண்ணியமான வாழ்க்கைத் தரத்தை பராமரித்துக் கொள்வதற்கும், சுதந்திரம், கண்ணியம், சுயமரியாதை என்பவற்றை அனுபவித்து வருவதற்கும் தேவையான தெரிவுகள் இல்லாதிருப்பது மானிட வறுமையாகும். ஐ நா அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) மானிட அபிவிருத்தி அறிக்கை (1997) "வறுமை வருமானம் தொடர்பான விடயத்தில் மட்டும் கவனத்தில் எடுக்கப்பட கூடாது என்றும், அது அதன் அனைத்துப் பரிமாணங்களிலும் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்" என்றும் குறிப்பிடுகின்றது.

எனவே, வறுமை பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

I. *குறைந்த ஆயுள் காலம்* - நல்ல சுகாதார பராமரிப்பு அல்லது போஷாக்கு குறைவாக இருந்து வருவதன் விளைவாக இது ஏற்படுகிறது.

II. *கல்வியறிவின்மை* - கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதன் விளைவாக எழுத்தறிவின்மை தோன்றுகிறது. இதன் காரணமாக மக்கள் இன்றைய சூழலில் முனைப்பான விதத்தில் இயங்கிவர முடியாதிருப்பதுடன், பயனுள்ள ஜீவனோபாய மார்க்கங்களையும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

III. *புறமொதுக்கப்படுதல்* - தமது வாழ்க்கையில் தாக்கத்தை எடுத்து வரக்கூடிய முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதில் மக்கள் பங்கேற்பு மறுக்கப்படும் செயன்முறைகளின் விளைவாக அவர்கள் சமூகத்திலிருந்து புறமொதுக்கப்படும் நிலை ஏற்படுகின்றது. இந்த புறமொதுக்கல், பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் மட்டங்களில் ஏற்பட முடியும்.

IV. *பொருள் வளமின்மை* - இது வருமானமின்மை மற்றும் சந்தையிலிருந்து தமக்கு தேவைப்படும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான ஆற்றலின்மை என்பவற்றின் விளைவாக தோன்றுகின்றது.

## வறுமை ஒழிப்பு செயற்திட்டங்கள்

ஐ நா அபிவிருத்தி திட்டம் அதன் 1997 அறிக்கையில் வறுமை ஒழிப்புக்கு அவசியமான நடிவடிக்கைகளுக்கென ஆறு முன்னுரிமைத் துறைகளை இனங்கண்டுள்ளது. அவையாவன:

1. ஆண்களும் பெண்களும் தமது வாழ்க்கை மீதான கட்டுப்பாட்டதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான சக்தியை அவர்களுக்கு அளிப்பது இதற்கான துவக்கப் புள்ளியாகும். அவர்களுக்கு வலுவூட்ட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். அதாவது, அவர்கள் தமது ஆற்றல்களையும் சொத்துக்களையும் கட்டியெழுப்பும் ஆற்றலை பெற்றுக் கொடுக்கும் தமது வாழ்க்கையின் மீது தாக்கங்களை எடுத்துவரக் கூடிய முடிவுகளை எடுக்கும் விஷயத்தில் அவர்கள் பங்கேற்பதனை உறுதிசெய்தல்.

2. வறுமையை ஒழிப்பதற்கு பால் சமத்துவம் அவசியமாகும். மகளிர் குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலுமான தமது பணிகளில் வறுமையை ஒழிக்கும் முயற்சிகளில் முன்னணியில் இருந்து வருகின்றார்கள். அவர்களை முடிவுகளை மேற்கொள்ளும் செயன்முறையில் செயலூக்கத்துடன் பங்கேற்கச் செய்வதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கான சமூக மற்றும் தேசிய முயற்சிகளுக்கு அவர்கள் புது வீரியத்தையும் செயல் முனைப்பினையும் எடுத்து வர முடியும்.

3. வறியவர்களுக்கு சார்பான பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகள் - பொருளாதார வளர்ச்சி மட்டும் வறுமை ஒழிப்புக்கு உத்தரவாதம் அளிப்பதில்லை. ஆர்ஜன்டீனா, ஹொண்டுராஸ், நியுஸிலாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் உதாரணங்கள் இதனை நிரூபித்துக் காட்டியுள்ளன. வறியவர்களுக்கு சார்பான ஒரு கொள்கைக்கு அத்தியாவசியமாக இருந்து வரும் மூன்று கூறுகள் வருமாறு: முழுமையான வேலை வாய்ப்புக்களை வழங்குதல், ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், அதி தீவிர அந்தங்களை மிதமாக்குதல் மற்றும் வறிய பொருளாதாரங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல் என்பவற்றைக் கொண்டிருக்கும் ஒரு கொள்கைக்கு உயர் முன்னுரிமை அளித்தல், கிராமிய வறியவர்கள் தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்துவது அவசியமாகும். சிறு அளவிலான விவசாயம், சிறிய தொழில் முயற்சிகள், முறைசாராத துறை என்பவற்றின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் நடைமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். இத்துறைகளுக்கு அவசியமான பொருத்தமான தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்து பரவலாக்குதல், சுற்றுச்சூழல் சீர்கேட்டினைத் தடுத்து நிறுத்துதல், சிறு குடும்பங்களை ஊக்குவித்தல் என்பன.

4. உலகமயமாக்கல் காரணமாக தோன்றும் வாய்ப்புக்களை விவேகபூர்வமான முறையில் பயன்படுத்திக் கொள்ளல். உலகமயமாக்கல் காரணமாக ஒரு சில

நாடுகள் வெற்றியீட்டியிருந்த போதிலும் பல வறிய நாடுகளில் சமூக ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்திருப்பதுடன், வறுமை மற்றும் வர்த்தக நியதிகள் என்பன தொடர்ந்தும் மோசமடைந்து சென்றுள்ளன. இதன் காரணமாக தேசிய மற்றும் சர்வதேசிய மட்டங்களில் உலகமயமாக்கல் செயன்முறைகளை எச்சரிக்கையுடனும் சிறந்த முகாமைத் துவத்துடனும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை ஐ நா அபிவிருத்தித் திட்டம் வலியுறுத்து கின்றது. இலங்கையைப் போன்ற வறிய சிறிய பொருளாதாரங்கள் இது தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியுள்ளது என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

5. அரசு வறியவர்களுக்கும் சந்தை களுக்கும் சாதகமான கொள்கை களுக்கு ஆதரவு வழங்குதல் வேண்டும். அடிப்படைக் கல்வி, சுகாதார வசதிகள் என்பவற்றை வழங்குதல், மக்கள் சொத்துக்களை தேடிக் கொள்ளக்கூடிய நிலையை விருத்தி செய்தல்.

ஒரு தேசிய குறிக்கோள் என்ற முறையில் முழுமையான வேலைவாய்ப்பு மட்டத்தை இலக்காக கொள்ளல், வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் ஒழித்தல் என்பன அரசாங்கத்தின் அடிப்படை கடமைகளாக இருந்து வருகின்றன. இந்த விடயங்களில் தலையீடுகளை மேற்கொள்வதில் மூலவளங்களில் அல்லது பொருளாதார தீர்வுகளில் ஒரு பற்றாக்குறை நிலவி வரவில்லை. மாறாக, இத்தகைய தலையீடுகளை மேற்கொள்வதற்கான அரசியல் விருப்பின்மையே இங்கு ஓர் இடையூறாக இருந்து வருகின்றது. இந்தத் தேவைகளை அரசு சிறந்த விதத்தில் நிறைவு செய்து வைக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற்கு பின்வருவன அவசியமாகும்: மோதல் தடுப்பு மற்றும் தீர்வு, சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் புனரமைப்பு, மானிட அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு என்பவற்றுக்கான கடன் நிவாரணம், நேரடி உதவி, சமூக ரீதியில் பொறுப்புக் கூற வேண்டிய நிலை மற்றும் நல்லாட்சி என்பவற்றுக்கான கடப்பாடுகளைக் கொண்டிருக்கும் பொறி முறைகளை பலப்படுத்துதல்.

### வறுமையை ஒழித்தல்

வறுமையை ஒழிப்பதற்கான உத்தி யொன்றுக்கு மூன்று அடிப்படை அம்சங்கள் அவசியமாகும். முதலில் வறியவர்களுக்கு சக்தியை ஊட்ட வேண்டும். அந்த நிலையில் அவர்கள் தமது வாழ்க்கையின் மீது தாக்கத்தை எடுத்து வரும் விடயங்கள் மீது [illegible]யகரமான ஒரு பங்கினை வகிக்க [illegible]டாவதாக, வறுமை ஒழிப்பு [illegible] ஒருமித்த [illegible]றும் விதத்தில் ஒன்றுபட்டு [illegible]ணைதல் வேண்டும். அரசாங்க நிறுவனங்கள், தொழில்சார் கழகங்கள், ஊடகங்கள், தனியார் துறை, பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், சனசமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள் என்பன இதில் அடங்குகின்றன. மூன்றாவதாக, வறுமை தொடர்பான சவாலை சமாளிக்கும் பொருட்டு இந்த தரப்பினர்கள் அனைவரும் ஒரு கூட்டு உத்தியை வகுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு பரஸ்பர புரிந்துணர்வும் ஒருவருடன் ஒருவர் சமரசம் செய்யக்கூடிய ஆற்றலும் அவசியமாகும்.

வறுமையை ஒழிக்கும் விஷயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருவது அவசியமாகும். பல்வேறு தரப்பினரும் தாக்கமான முறையில் கூட்டாக இணைந்து செயற்படுவதற்கு அவசியமான ஒரு சூழலை அது வழங்க வேண்டும். ஒளிவுமறைவற்ற தன்மை மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய நிலை என்பவற்றை கொண்ட ஒரு செயல்முறைக் கூடாக அரசியலிலும் பொதுத் துறையிலும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அரசியல் பங்கேற்பினை மேம்படுத்துதல் அவசியமாகும். பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்களை வழங்குதல் என்பவற்றில் தனியார் துறை ஒரு முன்னணிப் பங்கினை வகித்துவரும் பொழுது பொதுத்துறையும் தனியார் துறையும் இணைந்து செயற்படக் கூடிய ஓர் ஏற்பாட்டினை வகுத்துக் கொள்வது அவசியமாகும். பல வளர்முக நாடுகளில் உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் அரசியலில் குற்றச் செயல்கள் பெருகியுள்ளன. இந்நிலைமை நிவர்த்திக் கப்படுதல் வேண்டும். வறியவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பான சுதந்திரமான பத்திரிகைகள், நிதித் துறையில் மக்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் ஒரு சமூகச் சூழல் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான கல்வி என்பன வறுமை ஒழிப்புக்கு அவசியமான நிலைமைகளை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்கின்றன. மனித உரிமைகள் தொடர்பான அகிலம் தழுவிய பிரகடனம். பின்வருவனவற்றை அங்கீகரிக்கின்றது:

- பால், இனம், சாதி, மதம் அல்லது பிறந்த நாடு என்பவற்றின் அடிப்படையிலான பாரபட்சங்களிலிருந்து சுதந்திரம்.
- கண்ணியமான வாழ்க்கைத் தர மொன்றை அனுபவிக்கும் பொருட்டு வறுமையிலிருந்து சுதந்திரம்.
- ஒருவர் தனது மானிட ஆற்றல்களை அபிவிருத்தி செய்து முழுமையாக பெற்றுக் கொள்வதற்கான சுதந்திரம்.
- தனிப்பட்ட பாதுகாப்பு, சித்திரவதை, தான்தோன்றித்தனமான கைதுகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் என்பன தொடர்பான அச்சம் மற்றும் அச்சுறுத்தல் என்பவற்றிலிருந்து சுதந்திரம்.
- அநீதிகள் மற்றும் சட்ட மீறல்கள் என்பனவற்றிலிருந்து சுதந்திரம்
- சிந்தனை மற்றும் பேச்சுச் சுதந்திரம், முடிவுகளை எடுப்பதில் பங்கேற்றல் மற்றும் அமைப்புக்களில் இணைந்து கொள்ளல் என்பவற்றுக்கான சுதந்திரம்.,
- சுரண்டலற்ற விதத்தில் கண்ணியமான முறையில் வேலை செய்வதற்கான சுதந்திரம்.

### மானிட அபிவிருத்தி

மானிட அபிவிருத்தி என்பது மக்களின் தெரிவுகளை பரவலாக்கும் ஒரு செயன் முறை என வரைவிலக்கணப்படுத்தப் படுகிறது. மக்கள் நீண்ட ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துவதற்கும், கல்வியை பெறுவதற்கும், கண்ணியமான வாழ்க்கைத் தரமொன்றினை அனுபவித்து வருவதற்கும் வகை செய்யக்கூடிய தெரிவுகள் இவற்றுள் மிகவும் நிர்ணயகரமான தெரிவுகளாக இருந்து வருகின்றன. மனித அபிவிருத் திக்கு அத்தியாவசியமான தெரிவுகளாக இருந்து வரும் கண்ணியத்துடன் கூடிய விதத்தில் நீண்ட ஆரோக்கியமான ஆக்கபூர்வமான வாழ்க்கையை நடாத்துதல், சுய மரியாதை மற்றும் சுதந்திரம் என்பன மறுக்கப்படும் பொழுது வறுமை ஏற்படுகின்றது. செல்வந்தர்கள் தொடக்கம் வறியவர்கள் வரையில் ஒவ்வொரு சமூகமும் எந்த அளவுக்கு முன்னேற்றமடைந்து வந்துள்ளது என்பதன் மூலம் அபிவிருத்தி மட்டத்தை நோக்க முடியும். வறியவர்களின் நிலைமை எவ்வாறு விருத்தியடைந்து வந்துள்ளது என்பதனை பரிசீலனை செய்வது மற்றொரு முறையாகும்.

### சிறந்த வாழ்க்கைக்கான உரிமை

மனித உரிமைகள் தொடர்பான அகிலம் தழுவிய பிரகடனம் 1948 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டதனை அடுத்து மனித உரிமைகள் உலகளாவிய ஒரு பொறுப்பாக உருவாகின. சிவில், அரசியல், பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்திலும் ஊழிய உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ள பல நாடுகளில்

இலங்கையும் ஒன்றாகும். இதன் மூலம் இலங்கையும் தனது நாட்டு மக்களின் உரிமைகள் மதிக்கப்படுவதனையும் பாதுகாக்கப்படுவதனையும் உத்தரவாதப் படுத்தும் பொருட்டு ஐநா அமைப்புக்கும் சர்வதேச சமூகத்துக்கும பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் இருந்து வருகின்றது. இது அரசினதும் அதேபோல சிவில் சமூகத்தினதும் ஒரு கூட்டுப் பொறுப்பாகும்.

மனித உரிமைகள் தொடர்பான அகிலம் தழுவிய ஒரு பிரகடனம் வறுமை தொடர்பாக இரு முக்கிய சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் வழங்குகின்றது. கண்ணியமான வாழ்க்கைத் தரம் மற்றும் ஜீவனோபாயம் என்பனவே அச்சுதந்திரங்களாகும். எனவே, வறுமை மற்றும் ஏழ்மை நிலை என்பவற்றிலிருந்து விடுபட்டிருக்கும் நிலை சர்வதேச சமூகத்தினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் ஓர் அடிப்படை மனித உரிமையாக கருதப்பட்டு வருகின்றது. மனித உரிமைகள் மற்றும் மானிட அபிவிருத்தி என்பன மக்களுக்கான அடிப்படை சுதந்திரத்தை பெற்றுக் கொடுப்பதுடன் சம்பந்தப்பட்டிருக்கும் விடயங்களாகும். அவை இரண்டும் இணைந்து முன்னேற்றமடையும் பொழுது அவை ஒன்றுக்கு ஒன்று வலுவூட்டுகின்றன. மனித உரிமைகளைப் பாதுகாப்பதானது மானிட அபிவிருத்தியை எடுத்து வரும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை பலப்படுத்துகின்றது.

மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் விடயத்தில் பெருமளவுக்கு வெற்றி ஈட்டப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பாக இன்னும் ஒரு நீண்ட தூரம் நாங்கள் செல்ல வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி உயர் மட்டத்திலான விழிப்பினையும் நடவடிக்கையையும் அவசியப்படுத்தும் புதிய அச்சுறுத்தல்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. நாட்டின் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் இடையறாது இடம் பெற்று வரும் மோதல்கள், பொருளாதார மற்றும் அரசியல் நிலைமாற்றங்கள், அதன் விளைவாக தோன்றியுள்ள ஊசலாட்டங்கள், உலகளாவிய ஏற்றத்தாழ்வுகள், வறிய நாடுகள் மற்றும் வறிய மக்கள் புறமொதுக்கப்படும் நிலை என்பன மிக முக்கியமான பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு மிகுந்த உள்ளுணர்வும் விவேகபூர்வமான உத்திகளும் அவசியமாகும். இலங்கை சமூக மற்றும் மானிட அபிவிருத்தித் துறைகளில் பல தசாப்த காலமாக நிகழ்த்தி வந்திருக்கும் பெருமைப் படத்தக்க சாதனைகள் இத்தகைய புதிய அச்சுறுத்தல்கள் காரணமாக மதிப்பிழந்து வருகின்றன.

மனித சுதந்திரங்கள் தாமாகவே முன்னேற்றமடைவதில்லை. அவற்றுக்கு தெளிவான திட்டவட்டமான நடவடிக்கை அவசியமாகும். மனித உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான அடிப்படை அம்சங்கள் வருமாறு:

1. விழுமியங்கள், நிறுவனங்கள் சட்ட கட்டமைப்புக்கள், பொருளாதார சூழல் முதலிய சமூக கட்டமைப்புக்களை பலப்படுத்துதல்.

2. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்து, அதிகாரங்களை வேறுபடுத்தி பொதுமக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலை, அரவணைப்பு ஜனநாயகமொன்றை செயற்படுத்தல்.

3. வறுமை ஒழிப்பினை மனித உரிமைகளின் மைய அம்சமாக கவனத்தில் எடுத்தல்.

4. அரசின் எல்லைகளுக்கு அப்பால் உலகளாவிய தளம் வரையில் மனித உரிமைகளைப் பாதுகாத்து, அரசு சாரா துறைகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்கியிருக்கும் வலுவான ஓர் அமைப்பினை அபிவிருத்தி செய்தல்.

5. பொருத்தமான தகவல்களை உருவாக்குவதும் அவநம்பிக்கையையும் பொய்ப் பிரசாரங்களையும் போக்குவதற்கு அவற்றை பரவலாக்குவதும், கொள்கை மாற்றங்கள் மற்றும் நடத்தை என்பவற்றை எடுத்து வருவதற்கு உதவுதல்.

6. சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் அரசு சாரா அமைப்புக்கள், ஊடகங்கள் வணிக சமூகம், தொழில் சார் கழகங்கள் உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கம், அரசியல்வாதிகள் மற்றும் கருத்துத் தலைவர்கள் ஆகிய தரப்புக்களை உள்ளடக்கிய விதத்தில் அனைத்து சமூக குழுக்களிடமிருந்தும் கடப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல்.

7. உறுதியான சர்வதேச நடவடிக்கையும் கடப்பாடும்.

மக்களின் அபிவிருத்தியை உத்தரவாதப் படுத்துவதற்கு தனிப்பட்ட சமூக மற்றும் அரச மட்டங்களில் பல பொறுப்புக்கள் இருந்து வருகின்றன. இந்தப் பொறுப்புக்களை இனங்கண்டு கொள்வதும், அவை பொருத்தமான விதத்தில் மேற்கொள்ளப் படுவதனை உறுதி செய்து கொள்வதும் வறுமையை ஒழிப்பதற்கு உதவும்.

தனிநபர்

சமூகக் குழுக்கள், சமூகங்கள் மற்றும் அரசு என்பன தனிநபர்களின் பல்வேறுபட்ட கூட்டுக்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, மக்களுக்கு தமது உரிமைகள் மற்றும் கடமைகள் என்பன குறித்து தெரிவிக்க வேண்டியிருப்பதுடன், அவர்கள் அவற்றை அறிந்திருப்பதும் அவசியமாகும். இந்த அறிவையும் விழிப்புணர்வையும் முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றுக்கூடாக பெற்றுக் கொள்ள முடியும். பொதுமக்களின் அறிவை விசாலிக்கச் செய்யும் பணியில் ஊடகங்கள் மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றன. தகவல்களை பெற்றுக் கொண்ட பின்னர் அவற்றைத் தாக்கமான முறையில் உபயோகிப்பதும் மேலும் தகவல்களை கோருவதும் அதன் பிரகாரம் செயற்படுவதும் தனிநபரின் பொறுப்பாக இருந்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், புறமொதுக்கப்பட்ட வறிய வசதி வாய்ப்புக்களற்ற சமூகக் குழுக்களை பொறுத்தவரையில் வெளி நிறுவனங்களின் உதவியில்லாமல் இப்பொறுப்பினை தாக்கமான முறையில் நிறைவு செய்து வைக்க முடியாது. எனவே, இந்த பின்னணியில் சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் அரசு சாரா அமைப்புக்கள், தொழில்சார் கழகங்கள், வணிக சமூகம் மற்றும் அரசாங்கம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

சமூகம்

கல்வி, தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், சரியான செல்லுபடியாக கூடிய தகவல்களை உருவாக்குதல், வறுமையை ஒழிப்பதற்கான உத்திகளை திட்டமிடுவதற்கும் செயற்படுவதற்கும் தகவல்களின் பிரகாரம் செயற்படுதல், தெரிவுக்கான மனித சுதந்திரத்தை பாதுகாக்கக் கூடிய சூழலொன்றை உருவாக்குதல், அதிக அளவிலான சமூக, பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பன அனைவரினதும் ஒரு கூட்டுப் பொறுப்பாக இருந்து வருகின்றன. வளர்ச்சியடைந்த சமூகங்கள் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்திக்கும் என அர்ப்பணிப்புடன் கூடிய தொழில்சார் தலைமைத்துவங்கள், தாக்கமான நிறுவன ரீதியான ஆற்றல்கள், தகவல்களை நன்கு அறிந்த நிலையில் ஜனநாயக ரீதியில் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் நீண்ட கால உத்திகள் போன்றவை அவசியமமாகும். இத்தகைய சமூக அபிவிருத்தி கட்டுக்கோப்புக்குள்ளேயே வறுமை மற்றும் ஏழ்மை நிலை என்பவற்றின் சவால்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்
# அதன் அமுலாக்கலும் முன்னேற்றமும் 1995-2000

எச். சுமணபால
(பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்)

இலங்கையின் மிக முக்கியமான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றான சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் 1995 தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலில் சமுர்த்தி அதிகார சபை தவிர சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களமும் வறியோர் நிவாரண திணைக்களமும் ஈடுபட்டு வருகின்றன. இத்திட்டத்தின் ஆரம்பம் தொடக்கம் அமுலாக்கப்பட்டு வந்துள்ள பல்வேறு செய்திட்டங்களுக்கு ஊடாக வறுமை ஒழிப்பில் ஏற்பட்டு வந்திருக்கும் முன்னேற்றத்தை இக்கட்டுரை மீளாய்வு செய்கிறது.

## கட்டாய சேமிப்புக்கள்

வறியோர் நிவாரண திட்டத்தின் கீழ் ரூ. 3,500 மற்றும் 1,000 பெற்று வரும் குறிப்பிட்ட சமுர்த்தி குடும்பத்தின் பயன் பெறுபவரின் பெயரில் ஆரம்பிக்கப்படும் ஒரு வங்கிக் கணக்கில் முறையே ரூ.100 மற்றும் ரூ.200 வைப்புச் செய்யப்படுகின்றது. இத் திட்டத்தின் கீழ் 2000 ஜூன் முடிவு வரையில் சேமிக்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 5,893.86 மில்லியனாகும்.

## சுய விருப்பிலான சேமிப்புக்கள்

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குடும்பங்கள் சிறு குழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. சுய விருப்பிலான சேமிப்புக்கள் அவர்களுடைய சேமிப்புக்களாக இனங்காணப்படுகின்றன. அவர்களுடைய சிறு கடன் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் பொருட்டு இத்தொகைகள் பயன்படுத்தப்படுகின்றன. மிகுதி நிலுவை சமுர்த்தி வங்கிகளில் கூட்டுக்கணக்கொன்றில் வைப்புச் செய்யப்படுகின்றது.

## சனசமூக செய்திட்டங்கள்

குறை வருமான கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அவசியமான உள்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதே இச்செய்திட்டங்களின் நோக்கமாகும். சமுர்த்தி பயன்பெறுபவர்கள் செய்திட்டச் செலவுகளில் 10-25 வீதத்துக்கு தமது உழைப்பை பங்களிப்புச் செய்ய விருப்பதுடன், இத்தகைய செய்திட்டங்கள் பயன்பெறுபவர்களின் பங்கேற்புடன் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த செய்

அட்டவணை 1

| | சமுர்த்தி : கட்டாய சேமிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
| குடும்பங்கள் எண்ணிக்கை | 925,985 | 918,036 | 897,802 | 904,257 | 886,055 |
| கூட்டுச் சேமிப் புக்கள் (ரூ.மில்.) | 1517.54 | 2519.77 | 3764.15 | 5211.98 | 5893.86 |

அட்டவணை 2
சமுர்த்தி : சுயவிருப்பிலான சேமிப்பு

| | 1997 | 1998 | 1999 | 2000 (ஜூன் 30) |
|---|---|---|---|---|
| சிறு குழுக்கள் எண்ணிக்கை | 116,565 | 183,915 | 227,706 | 366,234 |
| சுயவிருப்பிலான சேமிப்பு (ரூ. மில்.) | 271.34 | 407.21 | 401.43 | 571.02 |

அட்டவணை 3
சனசமூக செய்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்

| வருடம் | மாவட்டங்கள் எண்ணிக்கை | பிரதேச செயலகங்கள் எண்ணிக்கை | முதலீடு (ரூ. மில்) | பூர்த்தி செய்யப்பட்ட செய்திட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1995 | 18 | 235 | 114.06 | 11,306 |
| 1996 | 18 | 235 | 210.52 | 11,640 |
| 1997 | 18 | 235 | 562.54 | 11,288 |
| 1998 | 21 | 283 | 373.50 | 6,061 |
| 1999 | 21 | 283 | 362.45 | 5,112 |
| 2000.06.30 | 21 | 283 | 365.00 | 1,395 |
| | | | 1988.07 | 46,802 |

திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் வசதிகள் வருமாறு:

- விவசாயத்துக்கு அவசியமான பாதைகள், மதகுகள் மற்றும் சிறு பாலங்கள் என்பவற்றை நிர்மாணித்தல்.
- சிறு அளவிலான நீர்ப்பாசன திட்டங்களை நிர்மாணித்தல்.
- கிராம விற்பனை நிலையங்களை ஸ்தாபித்தல்.

| அட்டவணை 4 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடன் வகை | 1996 | | 1997 | | 1998 | | 1999 | | 2000 | |
| | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
| நுகர்வு | 6,024 | 20.92 | 16,639 | 7.6 | 23565 | 11.21 | 2913 | 14.13 | 32,447 | 15.77 |
| அபிவிருத்தி | 16,498 | 15.26 | 42,938 | 39.46 | 71,352 | 67.2 | 99,503 | 94.61 | 116,681 | 111.77 |
| மொத்தம் | 22,522 | 2107.26 | 59,577 | 47.06 | 94,917 | 78.41 | 102,416 | 108.74 | 149,128 | 127.54 |

- நன்னீர் மீன்பிடி வளர்ப்பு மற்றும் கடற்றொழில் துறைமுகங்கள் என்பவற்றை நிர்மாணித்தல்.
- சிறிய நீர்ப்பாசன கட்டமைப்புக்களை புனருத்தாரணம் செய்தல்.
- சுகாதார மற்றும் சமூக நலன்புரித் திட்டங்களில் பங்கேற்றல்.
- சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் என்பவற்றுக்கான கட்டடங்கள் என்பவற்றை நிர்மாணித்தல்

இந் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட கிராம அதிகாரி பிரிவுகளில் செய்திட்டங்களை செயற்படுத்துவதற்கென 1999 ஆகஸ்ட் மாதத்தில் 'ரன்கெத்தட்ட தியவர' என்ற பெயரிலான துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இதன் கீழ் நீர்ப்பாசனம், நீர் விநியோகம், விளையாட்டு மைதான அபிவிருத்தி திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் 1999 இல் 8,094 செய்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

## சமுர்த்தி கொடுகடன் திட்டம்

சமுர்த்தி நலன் பெறுவோர்களுக்கு உதவும் வகையில் பெருந்தொகையான கடன் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. வருமானத்தை உருவாக்கும் செய்திட்டங்களை ஆரம்பித்தல், தற்போதைய செய்திட்டங்களை பலப்படுத்துதல் என்பவற்றுக்கென உதவி வழங்கப்படுகின்றது. சமுர்த்தி கடன் திட்டம் சமுர்த்தி நலன் பெறுபவர்களை பொறுத்தவரையில் ஒரு வரப்பிரசாதமாக இருந்து வருகின்றது.

## துரிதப்படுத்தப்பட்ட கடன் திட்டம்

இத்திட்டம் 1996 தொடக்கம் 46 பிரதேச செயலக பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. சமுர்த்தி நலன் பெறுபவர்கள் முறைசாராத மூலங்களில் இருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதிலிருந்தும் அவர்களை தடுப்பதே இச்செய்திட்டதின் முக்கிய குறிக்கோளாகும். இதன் கீழ் நுகர்வு, அவசரத் தேவைகள் என்பவற்றுக்கான கடன்களும் அபிவிருத்திக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பனவற்றுடன் இணைந்து இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## சமுர்த்தி அபிவிருத்திக் கடன் திட்டம்

இக்கடன் திட்டம் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கூடாக அமுல் செய்யப்பட்டது. இதன் கீழ் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் கூடிய கடன் தொகை ரூ.10,000 ஆகும். இக்கடனுக்கு 10 சதவீத வருடாந்த வட்டி அறிவிடப்படுகிறது. இவ்விரு வங்கிகளும் 2000.06.30 அன்றுள்ளவாறு இத்தகைய 80,173 கடன்களை வழங்கியிருந்ததுடன், அக்கடன்கள் தொடர்பாக வருமதியாக இருந்த நிலுவை ரூ.481.49 மில்லியனாக இருந்து வந்தது. 2000.07.01 தொடக்கம் இக்கடன்களை வழங்கும் பணியினை சமுர்த்தி வங்கிகள் பொறுப்பேற்றுக் கொண்டன.

## சமுர்த்தி தொழில்முனைவு கடன் திட்டம்

இத்திட்டமும் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் கீழ் ரூ.10,000 தொடக்கம் 50,000 வரை கடன்கள் வழங்கப்பட்டு வருவதுடன், அவற்றுக்கு அறவிடப்படும் வருட வட்டி 10 சதவீதமாகும். இக்கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு சமுர்த்தி உதவியைப் பெற்று வரும் மற்றொரு நபரின் தனிப்பட்ட பிணை அவசியமாகும்.

## சமுர்த்தி குத்தகைத் திட்டம்

இலக்காகக் கொள்ளப்பட்ட சமுர்த்தி உதவி பெறுபவர்களின் வருமான மட்டங்களை உயர்த்துவதும், வருமான உருவாக்கத்துக்கென கிடைத்து வரும் புதிய நிதி வசதிகளை அவர்களிடையே அறிமுகம் செய்து வைப்பதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இக் கடன் திட்டம் பீப்பள்ஸ் லீசிங் கம்பெனியுடன் கூட்டாக இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் கீழ் தனி நபர்களுக்கும் அதே போல குழுக்களுக்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. தனி நபர்களுக்கு ரூ.75,000 தொடக்கம் ரூ.150,000 வரையில் வழங்கப்படுவதுடன், குழுக்களுக்கு ரூ.150,000 - ரூ.300,000 வரையிலான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான வருடாந்த வட்டி 10 சதவீதமாகும். இக்கடன் 48 மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

## சமுர்த்தி வங்கிச் சங்க நிகழ்ச்சித்திட்டம்

சமுர்த்தி உதவி பெறுபவர்கள் மற்றும் குறை வருமான பிரிவினரிடையே சேமிப்புக்களை ஊக்குவிப்பதன் மூலமும் உற்பத்தியை உயர்த்துவதற்கு தேவைப்படும் கடன்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலமும் உற்பத்தி பெருக்கத்துக்கு வழிகோலுவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். இது இம்மக்கள் பிரிவினரை முறைசாராத கடன் வழங்குனர்களின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கும் உதவுகிறது. ஒவ்வொரு சமுர்த்தி வலயத்தையும் உள்ளடக்கிய விதத்தில் 6 கட்டங்களில் 905 வங்கிச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 5
கடன் ஊக்குவிப்பாளர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்

| வருடம் | தொகை ரூ.மில். | கடன்கள் எண்ணிக்கை | கடன் அறவீட்டு % |
|---|---|---|---|
| 1997 | 425.23 | 72740 | 59 |
| 1998 | 556.83 | 77357 | 66 |
| 1999 | 491.82 | 80152 | 72 |
| 30.06.2000 வரையும் | 481.89 | 80173 | 76 |

அட்டவணை 6
சமுர்த்தி தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்

| வருடம் | தொகை ரூ.மில். | கடன்கள் எண்ணிக்கை | கடன் அறவீட்டு % |
|---|---|---|---|
| 1998 | 1321.47 | 5378 | 98 |
| 1999 | 2382.84 | 9238 | 75 |
| 30.06.2000 வரையும் | 300.09 | 10601 | 75 |

சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஐந்து வகையான கடன்களை வழங்கி வருகின்றன. அவையாவன: சுய தொழில், விவசாயம், கடற்றொழில், நுகர்வு மற்றும் அவசரத் தேவைகள் என்பனவாகும். இத்திட்டத்தின் கீழ் 1998 தொடக்கம் கடன்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. 2000.06.30 இல் சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் மொத்த சொத்துக்கள் 2,620 மில்லியன் ரூபாவாக இருந்து வந்தன. இதில் ரூ.905 மில்லியன் திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சமுர்த்தி உதவி பெறுபவர்களின் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், அவர்களுடைய வருமான மட்டத்தினை உயர்த்துதல் மற்றும் விவசாய அடிப்படையிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் என்பன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்து வருகின்றன. இந்நோக்கத்துக்கென பின்வரும் உத்திகள் இனங்காணப்பட்டுள்ளன:

1. வீட்டுத் தோட்டம்.
2. சுய தொழில் பயிற்சி
3. புதிய விவசாய நுட்பங்கள் என்பவற்றின் அறிமுகம்
4. மரநடுகை மற்றும் மூலிகை நடுகை
5. விசேட விவசாய செய்திட்டங்கள் (மரமுந்திரிகை, தும்பு, அன்னாசி முதலியவை)

அட்டவணை 7
குத்தகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள்

| வருடம் | பண்டங்களின் எண்ணிக்கை | தொகை ரூ. மில் | செலுத் தப்பட்ட தவணை கட்டணங்கள் | அறவீட்டு % |
|---|---|---|---|---|
| 1998 | 508 | 121.87 | 2.14 | 50 |
| 1999 | 672 | 156.54 | 11.8 | 54 |
| 30.06.2000 வரையும் | 715 | 164.91 | 18.53 | 52 |

அட்டவணை 8
வங்கிச் சங்கங்கள்

| வருடம் | இயங்கிவந்த வங்கிச் சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 261 |
| 1998 | 439 |
| 1999 | 848 |
| 30.06.2000 வரையில் | 905 |

அட்டவணை 9
வங்கிச் சங்கங்களில் அங்கத்துவம்

| அங்கத்துவம் | 1997 | 1998 | 1999 | 30.06.00 வரையில் |
|---|---|---|---|---|
| பெண் | 63741 | 389460 | 737458 | 843198 |
| ஆண் | 31000 | 249646 | 507476 | 563000 |
| மொத்தம் | 94741 | 639106 | 1244934 | 1406198 |

அட்டவணை 10
வங்கிச் சங்கங்களின் சேமிப்புக்கள்
(30.06.2000 இல் உள்ளவாறு)

| சேமிப்பு வகை | சேமிப்பு கணக்குகள் எண்ணிக்கை | தொகை ரூ.மில் |
|---|---|---|
| உறுப்பினர் | 1083190 | 558.005 |
| உறுப்பினர் அல்லாதவர்கள் | 58170 | 53.880 |
| பராயமடையாதோர் | 462418 | 77.482 |
| திரிய மாதா | 397972 | 95.807 |
| குழு | 195504 | 422.518 |
| மொத்தம் | 2197254 | 1207.792 |

### விழிப்புணர்வுத் தூண்டல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இத்திட்டம் 1996 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி என்பவற்றில் அதிக அளவுக்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதுடன், அபிவிருத்தி அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வந்தது.

### சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1997 தொடக்கம் பல்வேறு செய்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. கோழி இறைச்சி உற்பத்தி, ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகள் விற்பனை, முட்டை உற்பத்தி, ஆடு, மாடு மற்றும் பன்றி வளர்ப்பு, போத்தலில் அடைக்கப்பட்ட பால் உற்பத்தி, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை போன்றவை இதில் அடங்கும்.

### சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பல்வேறு காரணங்களினாலும் நலிவு நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கும் சமூகக் குழுக்கள் மற்றும் அபிவிருத்தி செயன்முறையின் பிரதான பிரவாகத்துக்கு வெளியில் இருந்து வரும் சமூக குழுக்கள் என்பவற்றுக்கு இத்திட்டத்தின் கீழ் ஓரளவுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மக்கள் பிரிவினரின் ஒழுக்க விழுமியங்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்திலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

அட்டவணை 11
வழங்கப்பட்ட கடன்கள்
(2000.06.30 வரையில்)

| கடன் வகை | கடன்கள் எண்ணிக்கை | தொகை ரூ. மில். | அறவீட்டு % |
|---|---|---|---|
| சுய தொழில் | 221036 | 1308 | 100 |
| விசாயம் | 78956 | 349 | 100 |
| நுகர்வு | 13250 | 19 | 100 |
| கடற்றொழில் | 736 | 4 | 101 |
| இடர் | 9006 | 5 | 100 |
| மொத்தம் | 322984 | 1685 | 103 |

### மதுப் பழக்கத்தை தடுத்தல்

மதுப் பழக்கம் சிறு வருமானம் உழைக்கும் சமூகப் பிரிவினரிடையே வறுமையை நிலைத்திருக்கச் செய்யக் கூடியதாக இருந்து வருவதனால் மது மற்றும் ஏனைய போதைப் பொருட்கள் என்பவற்றின் பாவனையைத் தடுக்கும் பொருட்டு தேசிய அபாயகரமான மருந்துக்கள் சபையுடன் கூட்டாக இணைந்து 1997 இல் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன. 2000 ஆவது வருடத்தின் முதல் 6 மாத காலத்தின் போது அத்தகைய 4183 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

### எழுத்தறிவு

இந்த நிகழ்ச்சித்திட்டம் பாடசாலை வயதைச் சேர்ந்த குறிப்பாக 6-15 வயது தொகுதியைச் சேர்ந்த பிள்ளைகளை இலக்காகக் கொண்டுள்ளது. பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவதுடன் அவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. மேலும், சிறுவர் நூலகங்களும் சிறுவர் கழகங்களும் அமைக்கப்படுகின்றன. கல்வி அமைச்சுடன் கூட்டாக இணைந்து வயது வந்தவர்களுக்கான எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

### சமுர்த்தி கொடி விற்பனை

பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான நிதிகளைத் திரட்டிக் கொள்ளும் ஒரு வழிமுறையாக பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமூக அபிவிருத்தி மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி கொடி தினத்தில் கொடிகள் விற்பனை செய்யப்படுவதுடன், அத்தகைய விற்பனைகளின் மூலம் கிடைக்கும் தொகைகள் சமூக அபிவிருத்தி மன்றங்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன.

அட்டவணை 12
விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித்திட்டம் | 1996 | 1997 | 1998 | 1999 | 30.06.2000 |
|---|---|---|---|---|---|
| வீட்டுத் தோட்டம் | 75 | 61 | 77486 | 3274 | 7678 |
| வீட்டுத் தோட்டங்களில் நடப்பட்ட மரங்கள் | -- | -- | -- | 451 | 1642 |
| நடப்பட்ட மரங்கள் | -- | 5000 | 781398 | 394721 | 18553 |
| மருந்து மூலிகை செய்திட்டங்கள் | -- | 1 | 78 | 1 | -- |
| விசேட விவசாய செய்திட்டங்கள் | -- | 17 | 14 | 14 | 101 |

அட்டவணை 13
விழிப்புணர்வுத் தூண்டல் மற்றும் பயிற்சி

| நிகழ்ச்சித்திட்டம் | 1996 | 1997 | 1998 | 1999 | 30.06.2000 |
|---|---|---|---|---|---|
| கடற்றொழில் | -- | 183 | 205 | 98 | 203 |
| கால்நடை வளர்ப்பு | 910 | 1126 | 1329 | 1313 | 190 |
| போஷாக்கு | 1644 | 1417 | -- | -- | -- |
| மொத்தம் | 2554 | 2726 | 1534 | 1411 | 393 |

அட்டவணை 14
உருவாக்கப்பட்ட சுய தொழில்கள்

| நிகழ்ச்சித்திட்டம் | 1997 | 1998 | 1999 | 30.06.2000 |
|---|---|---|---|---|
| கால்நடை வளர்ப்பு | 7 | 68 | 151 | 412 |
| கடற்றொழில் | 38 | 34 | 16 | 25 |
| மொத்தம் | 45 | 102 | 167 | 443 |

அட்டவணை 15
கொடி விற்பனை மூலம் கிடைத்த வருமானம்

| வருடம் | வருமானம் ரூ. மில். |
|---|---|
| 1996 | 2.66 |
| 1997 | 2.38 |
| 1998 | 1.62 |
| 1999 | 4.90 |
| 30.06.2000 | 10.08 |

அட்டவணை 16
வேலை வாய்ப்பு பயிற்சியளிக்கப்பட்டவர்கள்

| வருடம் | பயிற்சியளிக் கப்பட்டவர் கள் எண்ணி க்கை | வேலைவாய்ப் புக்களைப் பெற்றுக் கொண்டவர் களின் எண் ணிக்கை |
|---|---|---|
| 1997 | 163 | 147 |
| 1998 | 187 | 168 |
| 1999 | 2300 | 2300 |
| 30.06.2000 | 2800 | 2650 |
| மொத்தம் | 5450 | 5265 |

### வாராந்த சந்தைகள்

தற்பொழுது 268 வாராந்த சந்தைப்படுத்தல் இடங்கள் இயங்கி வருகின்றன. இவை 8173 பேருக்கு சுய வேலைவாய்ப்புக்களை வழங்கியிருப்பதுடன், இந்நபர்கள் சந்தைப் படுத்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதன் மூலம் ரூ.1500-4000 மாதாந்த சராசரி வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

### சமுர்த்தி விற்பனை நிலையங்கள்

தனியார் தொழில் முயற்சியாளர்கள் நாடெங்கிலும் மாவட்ட மட்டத்திலும் பிரதேச செயலாளர் மட்டத்திலும் வலய மட்டத்திலும் இத்தகைய 92 விற்பனை நிலையங்களை பராமரித்து வருகின்றனர். இதில் பங்கேற்பவர்கள் மாதமொன்றுக்கு ரூ.4000-8000 சராசரி வருமானத்தை ஈட்டிக்கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். மேலும், சனச்செறிவு கூடிய பிரதேசங்களில் நடமாடும் விற்பனை வாகனங்கள் விற்பனைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. நாட்டின் பல்வேறு பாகங் களிலும் இத்தகைய 86 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### சிறு கைத்தொழில்களின் அபிவிருத்தி

சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வரும் சமுர்த்தி உதவி பெறுபவர்களின் வருமான மட்டங்களை உயர்த்துவதே இந்நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கமாகும். இதன் கீழ் அவர்கள் ஓர் அமைப்பில் திரட்டப்படுவதுடன், அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு, மூலதனம் மற்றும் சந்தைப்படுத்தல் உதவி என்பன வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியை வழங்குவதற்கு ஊடாக தொழில் திறன்களை பெற்றுக் கொடுப்பதற்கும் ஒரு முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது. சுய தொழில்களை ஆரம்பிப்பதற்கென கடன்களும் வழங்கப் படுகின்றன. 2000 ஜுன் மாதம் முடிவு வரையில் 5450 இளைஞர் யுவதிகளுக்கு இதன் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதுடன், 5262 பேர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

### சமூக சமுர்த்தி பாதுகாப்பு நிதியம்

சமுர்த்தி உதவி பெறுபவர்கள் பொருளாதார சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை காப்புறுதி செய்யும் நோக்குடன் இந்நிகழ்ச்சித் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இது சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தினால் செயற்படுத்தப்பட்டு வருவதுடன், உதவி பெறுபவர்களினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வரும் ரூ.25 பங்களிப்புக்களைக் கொண்டு அவர் இந்த பாதுகாப்பு நிதியத்தை பராமரித்து வருகின்றார். சமுர்த்தி உதவி பெறுபவர்கள் இத்திட்டத்தில் பங்கேற்பதன் மூலம் பின்வரும் சந்தர்ப்பங்களின் போது காப்புறுதி உதவியை பெற்றுக்கொள்ள முடியும்:

1. குழந்தைப்பேறு - ரூ. 2000
2. திருமணம் - ரூ. 3000
3. நோய் - ரூ. 1500
4. மரண இழப்பீடு - ரூ. 5000

அட்டவணை 17
சமூகக் காப்புறுதிக் கொடுப்பனவுகள் (ரூ. மில்.)

| வருடம் | பிறப்பு | திருமணம் | நோய் | மரணம் |
|---|---|---|---|---|
| 1997 | 11.8 | 32.3 | 16.9 | 25 |
| 1998 | 25.5 | 56.1 | 10.7 | 81.5 |
| 1999 | 193.1 | 24.6 | 9.2 | 73.2 |
| 30.06.00 | 8.1 | 10.8 | 5.5 | 32.6 |
| மொத்தம் | 238.5 | 123.8 | 42.3 | 212.3 |

அட்டவணை 18
ஊழியப் பயன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட செய்திட்டங்கள்

| வகை | வருடம் 1998 | 1999 | 30.06.2000 | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிறு குளங்கள் | 645 | 183 | 209 | 1037 |
| சிறிய நீர்ப்பாசன அமைப்புகள் | 587 | 348 | 495 | 1530 |
| விவசாயக் கிணறுகள் | 116 | 224 | 101 | 241 |
| ஏனையவை | 37 | 16 | 11 | 64 |
| பயன்படுத்தப்பட்ட ஊழிய அலகுகள் | -- | 400154 | 678826 | 1078980 |
| பயனடைந்தவர்கள் எண்ணிக்கை | 92005 | 42644 | 83202 | 217851 |
| சாகுபடி செய்யப்பட்ட நிலம் (ஏக்கர்) | 27301 | 21254 | 45175 | 93730 |

## அடுத்து வரும் தசாப்தத்தில் உலக வறியோருக்கு சிறந்த சுகாதார வசதிகள்

ஆறு ஐ நா முகவரகங்களினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கை வறுமையை உருவாக்கி அதனை நிலைத்து நிற்கச் செய்து வரும் 6 பிரதான நோய்களை வெற்றிகரமாக கட்டுப்பாட்டுக்குள் எடுத்து வர முடியும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. வரவர தீவிரமடைந்து வரும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா போன்றவை தவிர்க்க முடியாதவை அல்ல என்பதனை இந்த அறிக்கை வலியுறுத்துவதுடன், இந்நோய்களை கட்டுப்படுத்துவதற்கும் அவற்றினால் ஏற்பட்டுவரும் மரணங்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் பல வளர்முக நாடுகள் மேற்கொண்டு வந்திருக்கும் உத்திகளையும் சுட்டிக் காட்டுகின்றது. கடந்த காலத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பல உச்சி மாநாடுகளில் இந்நோய்களின் விளைவாக ஏற்படும் மரணங்களின் அளவை குறைத்துக் கொள்வதற்கென இலக்குகளை வகுத்துக் கொண்டுள்ளனர். இந்த இலக்குகள் சாத்தியமானவை என்றும் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு நிதி வசதிகளும் நடவடிக்கைகளுக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டிய தேவையும் இருந்து வருகின்றது என்பதனையும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

உலக சுகாதார நிறுவனம், ஐ நா சிறுவர் நிதியம், ஐ நா கல்வி விஞ்ஞான மற்றும் கலாச்சார நிதியம் (யுனெஸ்கோ), எச் ஐ வி - எயிட்ஸ் தொடர்பான ஐ நா வின் கூட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஐ நா குடித்தொகை நிதியம் மற்றும் உலக வங்கி ஆகிய முகவரகங்களினால் "சுகாதாரம் வள வாழ்வுக்கான வழி: வளர்முக நாடுகளின் வெற்றிக் கதைகள்" என்ற தலைப்பில் கூட்டாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கை எயிட்ஸ், காசநோய், மலேரியா, குழந்தைப் பருவ நோய்கள் மற்றும் தாய்மார்களின் நோய்கள் ஆகியவற்றை ஒழிப்பதற்கு அவசியமான முக்கியமான காரணிகளை எடுத்துக் காட்டுகின்றது.

"வளர்முக நாடுகளில் இத்தகைய நோய்கள் காரணமாக ஏற்படும் மரணங்களை தடுப்பதற்கு இப்போது என்றும் இல்லாதவாறு பிரகாசமான வாய்ப்புக்கள் இருந்து வருகின்றன" என்கிறார் உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமான டாக்டர் ஜீ.எச். பேன் லான்ட். எயிட்ஸ், காசநோய், மலேரியா, குழந்தைப் பருவ நோய்கள் மற்றும் தாய்மார் மரணம் என்பவற்றினால் உலக வறிய சமூகங்களில் ஏற்படும் மரணங்களைத் தடுக்க முடியுமா என்பது குறித்து சந்தேகம் கொண்டிருப்பவர்களின் சந்தேகங்களைப் போக்குவதற்கான ஆதாரங்கள் இப்பொழுது கிடைத்து வருகின்றன. சர்வதேச சமூகம் இதற்கென ஓர் இடையறாத முயற்சியை மேற்கொண்டு வந்தால் அடுத்து வரும் வருடங்களில் இத்துறை தொடர்பான இலக்குகளை எம்மால் யதார்த்தத்தில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக இருந்து வருமென அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

பெருமளவுக்கு வேறுபட்ட பொருளாதார சமூக மற்றும் பூகோள வேறுபாடுகளை கொண்டிருக்கும் 20 நாடுகளின் வெற்றிக் கதைகளை இவ்வறிக்கை உள்ளடக்குகின்றது. உதாரணமாக, செனிகல், உகாண்டா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகள் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோய்த் தொற்று விகிதங்களை குறைத்துக் கொள்வதற்கென வெற்றிகரமான விதத்தில் பின்பற்றி வந்திருக்கும் உத்திகளை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது. அஸர்பைசான் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் மலேரியா மரண வீதங்களை எவ்வாறு அரைவாசி அளவுக்கு குறைத்துக் கொண்டுள்ளன என்பதனையும் அது விவரிக்கின்றது. அதேபோல சீனா, இந்தியா மற்றும் பேரு போன்ற நாடுகள் காசநோய் மூலமான மரணங்களை 50 சதவீதத்தினால் குறைத்துக் கொண்டுள்ளன. குறிப்பாக இலங்கை பிரசவ தாய் மரண விகிதத்தில் கணிசமான அளவிலான வீழ்ச்சியை சாதித்துக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கை நோயைக் கட்டுப்படுத்துவதில் பெருமளவுக்கு வெற்றி கண்டிருக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியமான 6 பண்புக்கூறுகளை சுட்டிக் காட்டுகின்றது.

*(25 ஆம் பக்கம் பார்க்க)*

## சமுர்த்தி புலமைப் பரிசில்கள்

சமூக காப்புறுதி திட்டத்தின் கீழ் 1998 தொடக்கம் இந்த புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதன் கீழ் பின்வரும் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன:

- க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள்
- பிரிவென மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள்
- இளம் பல்கலைக்கழக மாணவர்களுக் கான நிகழ்ச்சித்திட்டம்
- விசேட புலமைப் பரிசில்கள்
- விளையாட்டுத் துறை புலமைப் பரிசில்கள்

இப்புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் ரூ.250 கொடுப்பனவொன்று வழங்கப்படுகிறது. 2000 ஜுன் 30 வரையில் ரூ.8 மில்லியன் பெறுமதியான இத்தகைய 2322 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

## சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

இதிட்டத்தின் கீழ் 2000.06.30 வரையில் சமுர்த்தி உதவி பெறுபவர்களிடையே 5808 தையல் மெஷின்களும் 10415 கி.கி. கட்பீஸ் துணிகளும் பகிந்தளிக்கப்பட்டருப்பதுடன், 5808 சுய தொழில் வாய்ப்புக்கள் உருவாக் கப்பட்டுள்ளன. மேலும், சமூக பாதுகாப்பு செய்திட்டத்தின் கீழ் முதலுதவி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், சக்கர நாற்காலிகளும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன. வருமானமீட்டும் நடவடிக்கை களில் ஈடுபட்டு வரும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பொருட்டு கிராம சேவா அதிகாரி மட்டத்தில் மகளிர் பலப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## ஊழியத்தைப் பயன்படுத்தும் செய் திட்டங்கள்

சிறிய நீர்ப்பாசன கட்டமைப்புக்களை புனருத்தாரனம் செய்தல், விவசாயக் கிணறுகளை அமைத்தல், சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காக ஒரு வாய்ப்பை வழங்கும் அதே வேளையில் அவர்களுடைய ஊழியத்தை பயன்படுத்திக் கொள்ளல் என்பவற்றின் மூலம் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ் 1998 தொடக்கம் 93730 ஏக்கர் நிலம் சாகுபடியின் கீழ் எடுத்து வரப் பட்டிருப்பதுடன், இதற்கென ரூ.440 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மொத்தம் 2872 செய்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

# வறுமையும் மகளிரும்

மல்லிகா பெரேரா
(விரிவுரையாளர், இலங்கை மன்றக் கல்லூரி)

21ஆம் நூற்றாண்டின் உதயத்திலும் கூட வறுமை மனித குலம் எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய சவாலாக இன்னமும் இருந்து வருகின்றது. அதே வேளையில் வறுமையின் பரிமாணங்கள், குறைவருமானம் மற்றும் நுகர்வு என்பவற்றிலிருந்து மனித அபிவிருத்தியின் ஏனைய துறைகளில் காணப்படும் குறைபாடுகள் என்ற நிலைக்கு மாற்றமடைந்துள்ளன. நாராயணன் மற்றும் ஏனையவர்கள் (2000) வறுமை என்ற பதத்துக்கு பின்வரும் வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளனர்:

> "அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் ஆற்றலின்மை, மூலவளங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத நிலை, கல்வி மற்றும் திறன்கள் இன்மை, மோசமான ஆரோக்கிய நிலை, போஷாக்கின்மை, வசிப்பிடமின்மை, நீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை, அதிர்ச்சிகளினால் எளிதில் பாதிப்படையும் நிலை, வன்செயல் மற்றும் குற்றச் செயல்கள், அரசியல் அதிகாரமின்மை மற்றும் குரலெழுப்பும் சக்தியற்ற நிலை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய பன்முக பரிமாணங்களைக் கொண்ட ஒரு நிகழ்வாக வறுமை இருந்து வருகின்றது".

உலக குடித்தொகையான, 600 கோடிப் பேரில் 1998 இல் 280 கோடி மக்கள் நாளொன்றுக்கு இரண்டு அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்திலேயே வாழ்ந்து வந்தனர். இவர்களில் 120 கோடி மக்களின் ஒரு நாள் வருமானம் ஒரு டொலருக்கும் குறைவானதாகும். இவர்களில் 44 சதவீதத்தினர் தென்னாசியாவில் வாழ்ந்து வருகின்றனர். அனேகமாக உலகின் அனைத்து நாடுகளும் பல்வேறு அபிவிருத்தி உத்திகளுடன் வறுமையை தடுத்து நிறுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு வந்துள்ளன. எனினும், வறியவர்களின் எண்ணிக்கையில் இன்னமும் கூட கணிசமான அளவிலான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் வறுமை மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும் இருந்து வருகின்றது. நாட்டின் குடித்தொகையில் 24.4 சதவீத மக்கள் 1990-91 காலப்பிரிவின் போது தேசிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வந்ததாக உலக வங்கி (1995) சுட்டிக் காட்டியுள்ளது. தொகைமதிப்பு புள்ளிவிபரங்களின் பிரகாரம் 1995-96 இல் 26.7 சதவீத குடும்பங்கள் வறுமையில் இருந்து வந்தன. நாளொன்றுக்கு ஒரு டொலருக்கு குறைவான வருமானம் பெறுபவர்கள் 1996 இல் 6.6 சதவீதத்தினரும் இரண்டு டொலருக்கு குறைவான வருமானம் பெறுபவர்கள் 45.4 சதவீதத்தினரும் இருந்து வந்துள்ளனர். இவர்கள் சர்வதேச வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களாகும். மேலும் 51 சதவீத குடும்பங்கள் - சுமார் 2,000,000 குடும்பங்கள் 1998 இல் சமுர்த்தி உதவி பெறும் குடும்பளாக இருந்து வந்துள்ளன (மத்திய வங்கி, 1999). சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயன் பெறுபவர்களாக பாரிய எண்ணிக்கையிலான மக்கள் இனங் காணப்பட்டிருக்கும் நிலை வறுமை தொடர்பான கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிர்வாகம் என்பன குறித்து மேலும் கவனம் செலுத்த வேண்டிய தேவையை எடுத்து வந்தது.

## வறியவர்கள் யார் ?

வறுமையின் கட்டமைப்பு குடிமக்களிடையே வறியவர்களின் பூகோள ரீதியான மற்றும் சமூக ரீதியான பகிர்வின் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான பரிமாணங்களை முன்வைக்கின்றது. பொதுவாக வறுமையின் அளவு தலைக்குரிய வருமானம், நுகர்வுச் செலவு அல்லது கலோரி நுகர்வு என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. இந்த பல்வேறு முறைகளினாலும் அளவிடப்படும் வறுமையின் கட்டமைப்பினை மதிப்பீடு செய்து ஒப்பிடும் பொழுது பல சுவாரசியமான அம்சங்களை அவதானிக்க முடியும். பூகோள அமைவிடம், பொருளாதார அந்தஸ்து, பால் மற்றும் சாதி வேறுபாடுகள், இனத்துவம் போன்றவை வறியவர்களிடையே வறுமை தொடர்பாக வேறுபாடுகளை எடுத்து வரும் விடயம் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அட்டவணை 1 வறுமை தொடர்பான பிராந்திய வேறுபாடுகளை எடுத்துக் காட்டுகின்றது. சுருக்கமாகச் சொல்வதானால், வறுமை, சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் வலுவற்றவர்களாக இருந்து வரும் மக்களை வறுமைச் செயன்முறை என்ற பொறிக்குள் வீழ்த்தி விடுகின்றது (உலக வங்கி 2000).

சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கொள்கை வழிமுறைகளில் ஏற்பட்டு வந்திருக்கும் முன்னேற்றத்தினை மதிப்பிடும் ஐ.நா. அமைப்பு சமூகத்தில் வாழ்ந்து வரும் வசதி வாய்ப்புக்கள் அற்ற மக்களை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு பால், பிராந்தியம், இனத்துவம், கல்வி மட்டம், வருமானக் குழுக்கள் என்பவற்றை உபயோகித்து வந்துள்ளது (ஐ.நா. அபிவிருத்தி திட்டம் 2000). இலங்கையில் கிராமிய மக்களிடையே வறுமை பெருமளவுக்கு நிலவி வருகிறது. 1973 இல் கிராம மக்களில் 94 சதவீதத்தினர் வறியவர்களாக இருந்து வந்தனர். இந்த அளவு 1978, 1981 மற்றும் 1986 ஆகிய வருடங்களில் முறையே 77, 82 மற்றும் 88 சதவீதமெனக் காணப்பட்டது. ஆனால், இந்த தசாப்தம் முழுவதிலும் மொத்த குடித்தொகையில் கிராம குடித்தொகையின் அளவு 70 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது. கிராம குடித்தொகையில் 79 சதவீதத்தினர் வறியவர்களாக இருந்து வருகின்றனர் என உலக வங்கியும் (1995) குறிப்பிட்டுள்ளது.

தொழில் வகையை அடிப்படையாகக் கொண்ட விதத்தில் வறுமை மற்றும் வறிய குடும்பங்களின் பகிர்வு என்பன தொடர்பாக ரத்னாயக்க (1994) சுவாரசியமான சில விடயங்களை முன்வைத்துள்ளார். வறிய குடும்பங்களில் சுமார் நான்கில் ஒரு பங்கு குடும்பங்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்த குடும்பங்களாக இருந்து வந்தன. வறியவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்திலேயே தங்கியிருந்து வருகின்றனர் என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது. நகர வறியவர்களைப் பொறுத்தவரையில் பெருந்தொகையானவர்கள் முறைசாராத் துறையில் சமயாசமய தொழிலாளர்களாக வேலை செய்து வந்தனர். ஒரு குடும்பத்தில் வேலை செய்யும் உறுப்பினர்கள் விவசாயத் துறையில் இருந்து வந்தால் அந்த குடும்பத்தில் வறுமை உயர் அளவில் இருந்து வரும் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

## வறுமையும் மகளிரும்

வறுமையின் மகளிர்மயமாகும் நிலை "மகளிர் வறியவர்களில் அதிகரித்த அளவிலான ஒரு விகிதாசாரத்தினரை பிரதிநிதித்துவம் செய்யும் போக்கு" என பரவலாக அறியப்பட்டுள்ளது. இது வறுமையின் விஷச் சூழலில் சிக்குண்டிருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான இடைவெளியாக இருந்து வருவதாக ஐ நா (2000) குறிப்பிட்டுள்ளது.

அட்டவணை 1

வறுமை தொடர்பான பிராந்திய ஒப்பீடு

| பிராந்தியம் மற்றும் நாடு | காரணங்கள் | முக்கிய விடயங்கள் |
|---|---|---|
| **கிழக்காசியா மற்றும் பசுபிக்** | | |
| சீனா | விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சி, பண்ணையல்லாத துறையில் குறைந்த அளவிலான வேலை வாய்ப்புகள் | வருமான ஏற்றத்தாழ்வு விரிவடைதல் |
| வியட்நாம் | ------- | சிறுபான்மைச் சமுகங்களிடையே வறுமை நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்த போதிலும், அது இன்னமும் (1997-98) 75 சதவீதமளவில் நிலவி வருகின்றது. |
| கம்போடியா | ------- | நகர வறுமையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சிக்கு இணையான விதத்தில் கிராமிய வறுமையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை. |
| தென்னாசியா, பங்களாதேஷ் | கிராமிய வேதனங்களின் மெதுவான வளர்ச்சி, வேலையின்மை, நிலத் தட்டுப்பாடு. | கிராமிய வறுமையிலும் பார்க்க நகர வறுமையில் கணிசமான அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது |
| பாகிஸ்தான் | குறைந்த வளர்ச்சி விகிதங்கள், மிகவும் பலவீனமான மனித வள அடித்தளம் | மிக மெதுவாக இடம்பெற்று வரும் வறுமைத் தணிப்பு |
| இலங்கை | ------ | வறுமை ஒழிப்பில் ஏற்பட்டு வரும் மெதுவான முன்னேற்றம் |
| **உப சகாரா ஆபிரிக்கா** | | |
| எதியோப்பியா | உள்நாட்டுப் போர் மற்றும் எல்லை மோதல் | புதிய சீர்திருத்தங்களுடன் இணைந்த விதத்தில் உள்நாட்டு போரிலிருந்து மீட்சி கண்டு வருகின்றது. நகர வறுமை தொடர்ந்தும் நிலவுகின்றது. |
| புருண்டி, ருவாண்டா, சியாராலியோன், சோமாலியா, சூடான் | சமூக ஒழுங்கில் ஏற்பட்டிருக்கும் சீர்குலைவு | வறுமையின் கடுமையான தாக்கங்களைக் கொண்டுள்ளன |
| **இலத்தின் அமெரிக்கா மற்றும் கரிபியன்** | | |
| பிரேஸில் | குறைந்த கல்வி மட்டம் | வருமான ஏற்றத்தாழ்வு |
| ஆர்ஜென்டினா | வேலையில்லாத் திண்டாட்டம் | உள்ளூர் குழுக்களிடையே உயர் அளவிலான வறுமை |
| **கிழக்கைரோப்பா மற்றும் மத்திய ஆசியா** | | |
| ரஷ்யா | மத்திய திட்டமிடல் முறையின் சீர்குலைவு, பணவீக்கம் | வறியவர்களுக்கு உதவுவதற்கான மூல வளங்களின் தட்டுப்பாடு |
| பல்கேரியா மற்றும் ஹங்கேரி | ----- | பல்கேரியாவில் வாழும் ரோமா சிறுபான்மை குழுவில் 84 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து வருகின்றனர்; இது ஹங்கேரியில் 33 சதவீதமாகும். |

கடந்த தசாப்தத்தின் போது இந்நிலை தொடர்ந்திருந்ததுடன் வியாபித்தும் வந்துள்ளது. மேலும், நாளொன்றுக்கு ஒரு டொலருக்கும் குறைவான வருமானத்துடன் வாழ்ந்து வரும் 150 கோடி மக்களில் பெரும்பாலானவர்கள் மகளிராக இருந்து வருகின்றார்கள் என்பதனையும் அது சுட்டிக் காட்டியுள்ளது. பால் அடிப்படையில் மக்களுக்கு வலுவூட்டுவதில் ஏற்பட்டிருக்கும் தோல்வி காரணமாகவே வறுமையில் வாடிவரும் பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள், உள்ளூர் சமூக குழுக்களை சேர்ந்தவர்கள், அகதி முகாம்களில் வாழ்பவர்கள், தனித்து வாழும் பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் வயது முதிர்ந்த பெண்கள் ஆகியோர் தமது ஆண் சகாக்களை பார்க்கிலும் அதிக அளவில் வறுமையை அனுபவித்து வருகின்றனர். வறுமையின் மகளிர்மயமாகும் நிலை உலகளாவிய ஒரு தோற்றப்பாடாக உருவாகியுள்ளது.

அபிவிருத்தியடைந்த உலகைப் பொறுத்த வரையில் நாளொன்றுக்கு 14.40 அமெரிக்க டொலர் மட்டத்திலேயே வறுமைக் கோடு வரையப்படுகிறது. எனவே, வறியவர்கள் யார் என்ற கேள்விக்கான பதில் வடக்கிலும் தெற்கிலும் அதே போல வளர்முக உலகிலும் வளர்ச்சி அடைந்த உலகிலும் அகிலம் தழுவியதாகவே இருந்து வருகின்றது. பெரும்பாலான நாடுகளில் ஆண்களின் சம்பாத்தியத்தில் 50 சதவீதத்துக்கு சற்றுக் கூடிய அளவில் மட்டுமே பெண்கள் சம்பாதித்து வருகின்றனர் என்ற விடயம் தெரிய வந்துள்ளது. கடன், காணி மற்றும் வாரிசுரிமை சொத்து போன்ற மூலவளங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் வழங்கும் ஊழியத்துக்கு வெகுமதி வழங்கப்படுவதில்லை. மேலும், அவர்களுடைய உழைப்பு ஆண்களின் உழைப்பைப் போன்று மதிப்புமிக்கதாக அங்கீகரிக்கப்படுவதும் இல்லை. மகளிரின் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு தேவைகள் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதும் இல்லை. கல்வி மற்றும் ஆதரவுத் தேவைகள் என்பன அவர்களுக்கு பொதிய அளவில் கிடைப்பதில்லை. அதே வேளையில், வீட்டிலும் சமூக மட்டத்திலும் முடிவுகளை எடுக்கும் விஷயத்தில் அவர்களுடைய பங்கேற்பு மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருந்து வருகின்றது. நல்ல வேலை வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்து வருகின்றது. மேலும், மகளிர் வறுமையின் விஷச் சூழலில் அகப்பட்டுக் கொண்ட பின்னர் தமது நிலைமையை மாற்றியமைத்துக் கொள்வதற்கு அவசியமான வளங்கள் மற்றும் தகவல்கள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் போதிய அளவில் அவர்களுக்கு கிடைப்பதில்லை (ஐ நா 2000). இரண்டாந்தரப் பிரஜைகளாக பெண்கள் கணிக்கப்பட்டு வரும் நிலை அவர்கள் மேலும் அதிக அளவில் ஏழ்மைக்கு இரையாகக் கூடிய ஒரு நிலையை எடுத்து வருகின்றது. உள்ளீடுகள், விரிவாக்கல் சேவைகள் மற்றும் பயிற்சி என்பன கிடைக்காதிருக்கும் நிலையும் மகளிரிடையே வறுமையை ஒழிப்பதற்கான ஓர் இடையூறாக உள்ளது. வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கும் மகளிர் ஏனையவர்களைப் பார்க்கிலும் அதிக அளவில் குடும்பங்களில் இருந்தும் சமூகங்களில் இருந்தும் சமூக நிறுவனங்களிலிருந்தும் சந்தைகளிலிருந்தும் அரச அல்லது உலகளாவிய நிறுவனங்களிலிருந்தும் பெருமளவுக்கு புறமொதுக்கப்பட்டு வருகின்றனர்.

தென்னாசியப் பிராந்தியத்துக்கே தனித்துவமாக இருந்து வரும் ஒரு சில சமூக, பொருளாதாரக் காரணிகள் இப்பிராந்தியத்தில் வறுமையின் பெருக்கத்துக்கு வழிகோலியிருக்க முடியும். குறைந்த மட்டத்திலான மானிட அபிவிருத்தி மற்றும் பெண்களின் தாழ்வான சமூக அந்தஸ்து என்பவற்றின் காரணமாகவும் அவற்றின் பின்விளைவாகவும் இப்பிராந்தியத்தில் வறுமை நிலவி வருகின்றது என உலக வங்கி (2000) குறிப்பிட்டுள்ளது. கிராமியப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மகளிருக்கு அடிப்படைத் தேவைகள் மட்டுமன்றி வாய்ப்புக்களும் தெரிவுகளும் கூட கிடைப்பதில்லை. எனவே, கமருன், மடகஸ்கார் மற்றும் நைகர் போன்ற நாடுகள் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் மகளிரை தனியொரு இலக்குக் குழுவாக இனங்கண்டுள்ளன.

## பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள்

வளர்முக நாடுகளிலும் அதேபோல வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் ஒரு நிலை காணப்படுகிறது. பல்வேறு சமூக, கலாச்சார மற்றும் அரசியல் காரணிகள் இத்தகைய ஒரு நிலைமையை தூண்டியுள்ளன. கடந்த ஒரு தசாப்த காலத்தின் போது வளர்முக உலகில் ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் தீவிரமடைந்திருப்பதுடன், இவற்றின் விளைவாக சுமார் ஐம்பது இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அது தவிர சுமார் ஒரு கோடி மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர் (ஐ நா அபிவிருத்தித் திட்டம், 2000). ஒரு சமூக நெருக்கடியின் போது வறியவர்கள், சிறுபான்மையினர், சமூக ரீதியில் புறமொதுக்கப்பட்ட சாதிகள் மற்றும் கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள், மகளிர் மற்றும் சிறுவர்கள் ஆகியோரே பெருமளவுக்கு பாதிக்கப்படுகின்றார்கள் என்ற விடயம் யாவரும் அறிந்த ஒன்றாகும். அவர்களில் மகளிர் மற்றும் சிறுவர் ஆகியோரின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியதாகும். பெண்களின் தலைமையில் இருந்து வரும் குடும்பங்கள் வறுமையினால் எளிதில் ஊறுபடத்தக்க குடும்பங்களாக இருந்து வருகின்றன என்ற விடயம் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உலகின் செல்வ வளமிக்க நாடுகளில் ஒன்றான ஐக்கிய அமெரிக்காவிலும் கூட வயது வந்த வறியவர்களில் 62.5 சதவீதத்தினர் (1992) பெண்களாக இருந்து வந்தனர் என்ற விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், வறியவர்களில் 14.4 சதவீதத்தினர் வெள்ளையரல்லாத தாயை மட்டும் கொண்ட நகர்ப்புற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தனர். இவர்களில் 22 சதவீதத்தினர் குடும்பப் பொறுப்புக்கள் காரணமாக தம்மால் வேலைக்குப் போக முடியாதுள்ளது என தெரிவித்திருந்தனர். அனேகமாக இவர்கள் அனைவரும் பெண்களாகவே இருந்தனர். கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஐக்கிய அமெரிக்காவின் வறிய குடித்தொகையைப் பொறுத்தவரையில் தனியொரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்களே ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளன. 1999 இல் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களில் 30 % தேசிய வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து வந்துள்ளதுடன், அவர்கள் கடும் ஏழ்மை நிலையில் இருந்து வந்தவர்களில் 19 வீதத்தினரை பிரதிநிதித்துவம் செய்தனர். பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் வறுமையில் வாடுவதனை தடுக்கும் பொருட்டு இத்தாலி, சுரான், ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் கிரீஸ் போன்ற நாடுகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவே, உலக அளவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ மகளிரின் வறுமைமயமாகும் நிலை இடம்பெற்று வருவதனை காண முடிகிறது.

வறுமை அடிப்படையில் நிலைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றுக்கு ஊடாக உருவாக்கப்படுகின்றது. குறிப்பிட்ட குடித்தொகையினர் எதிர்கொள்ளும் பேரண்ட மட்டத்திலான அரசியல் மற்றும் சமூக, பொருளாதார நிலவரங்கள் இத்தகைய நிலைமைகளாகும். மக்கள் வறுமைக்குள் தள்ளப்படும் முறையுடன் இச்செயன் முறைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இவை அனேகமாக பிரத்தியேகமான நிலைமைகளையே கொண்டுள்ளன. இசசெயன்

முறைகளின் மிகப் பிரதானமான உலகளாவிய பொதுத்தன்மை பால் சார்ந்த பாரபட்சங்களாகும். பொருள் ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒரு சிறந்த வாழ்க்கையை நடத்துதல், பாதுகாப்பு, தெரிவு மற்றும் நடவடிக்கை சுதந்திரம் என்பவற்றையே சிறந்த வாழ்க்கையாக அவர்கள் கருதுகின்றனர். மேலும், அவர்கள் வறுமைக்கான மூன்று காரணங்களை இனங்கண்டுள்ளனர். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான சொத்துக்களும் வருமானமும் இல்லாத நிலை வறுமைக்கான முதலாவது காரணமாகும். அரச நிறுவனங்களிலும் சமூக அமைப்புக்களிலும் எத்தகைய அதிகாரத்தையும் கொண்டிராதவர்களாகவும், குரலெழுப்ப முடியாதவர்களாகவும் இருந்து வரும் நிலை இரண்டாவது காரணமாகும். மிக மோசமான அதிர்ச்சிகளை எதிர்கொள்வதற்கு திராணியற்ற நிலை வறுமைக்கான மூன்றாவது காரணியாகும். அவர்கள் எதிர்கொள்ளும் பாரிய அதிர்ச்சிகள் இயற்கை அழிவுகளாகவும் அதேபோல மனிதனால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்களாகவும் இருந்து வருகின்றன. வெள்ளப் பெருக்குகள், வரட்சி, கலவரங்கள் மற்றும் மோதல்கள். மேலும், சொத்துக்கள் இயற்கை சொத்துக்கள், பௌதீக சொத்துக்கள், நிதிச் சொத்துக்கள் மற்றும் சமூகச் சொத்துக்கள் என சுட்டிக்காட்டப்படுகின்றன. பண்ட விநியோக அமைப்புக்கள் பால் சார்ந்த உணர்திறனை எப்பொழுதும் கொண்டிருப்பதில்லை. ஆதலால் வறியவர்களிடையே பெண்கள் அதிக அளவுக்கு பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் எந்த வகையிலும் குரலெழுப்ப முடியாதவர்களாக இருந்து வருவதுடன், சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதும் அவற்றை பயன்படுத்துவதும் அவர்களைப் பொறுத்தவரையில் மிகவும் சிரமமான ஒரு காரியமாக இருந்து வருகின்றது. மேலும், அவர்கள் தமது ஆண் சகாக்களிலும் பார்க்க அதிக அளவில் மோசமான அதிர்ச்சிகளினால் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். வறிய ஆண்களும் பெண்களும் ஒட்டுமொத்த அமைப்பிலும் வன்முறை, ஊழல், உள்நாட்டு போர், பொதுப் பாதுகாப்பு, அதிகாரமற்ற நிலை, பாதுகாப்பற்ற ஜீவனோபாயம் என்பன தாம் எதிர்கொண்டுவரும் இடையூறுகளாக இருந்து வருகின்றன என்று கருதுகின்றனர்.

## சமூக, கலாச்சார நடைமுறைகளும் சட்ட கட்டமைப்பும்

சமூகமயமாக்கல் செயன்முறையின் போது புதிதாக பிறக்கும் ஒரு குழந்தை ஒவ்வொரு சமூகமும் பேணி வரும் விழுமியங்கள், நெறிமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் போலி நம்பிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பால் ரீதியான அடையாளங்களை பெற்றுக் கொள்கிறது. உலகின் பெரும்பாலான சமூகங்கள் தந்தை வழி ஆதிக்கம் நிலவி வரும் சமூகங்களாகவே இருந்து வருகின்றன. இத்தகைய சமூகங்களில் மகளிர் தாம் வாழும் சமூகங்களில் இரண்டாந்தரப் பிரஜைகளாக சிறுமைப்படுத்தப்பட்டுள்ளனர். தந்தை வழிச் சமூகங்களில் மகளிர் போஷாக்கு மற்றும் சுகாதாரம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் தமது சமூக, கலாச்சார உரிமைகளை பயன்படுத்திக் கொள்வதிலிருந்தும் எவ்வாறு தடுக்கப்பட்டு வருகின்றனர் என்பதனை ஐநா அபிவிருத்தி திட்டம் (2000) அறிக்கையிட்டுள்ளது. விவாகரத்து அல்லது வாழ்க்கைத் துணையின் மரணம் ஒரு பெண்ணின் மானிட மூலதனத்தின் ஒரு பாகத்தின் பெறுமதியை எவ்வாறு குறைத்து விட முடியும் என்ற விடயமும் சமூக மட்டத்தில் அது ஒரு இழப்பினை எடுத்து வருகின்றது என்ற விடயமும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சமூகமயமாக்கல் செயன்முறையில் சம்பந்தப்பட்டிருக்கும் சமூக நிறுவனங்கள் அனைத்துமே மகளிர் இரண்டாந்தரப் பிரஜைகளாக இருந்து வருகின்றனர் என்ற விடயத்தை வலியுறுத்தி வருகின்றன. இது விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகள் என்பவற்றை சட்டபூர்வமாகியுள்ளதுடன், அது நீண்ட கால அடிப்படையில் சட்டரீதியான கடப்பாட்டினையும் எடுத்து வருகின்றது. குடும்பச் சட்டம் அத்தகைய ஒரு துறையாக இருந்து வருவதுடன், அதில் முடிவெடுக்கும் செயன்முறையில் பெண்கள் இரண்டாம் தர பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர். தந்தை வழிச் சமூகத்தின் விழுமியங்களே இதில் சட்டங்களாக இருந்து வருகின்றன. இலங்கையின் பொதுச்சட்டம் குடும்பச் சட்டத்துடன் ஒப்பீடும்பொழுது பெருமளவுக்கு சமத்துவ இயல்பினைக் கொண்டுள்ளது என்பது நன்கு அறியப்பட்ட ஒரு விடயமாகும். பால் சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்ட முன்னோடிகளும் குடும்பச் சட்டம், ஊடகங்கள் மற்றும் கல்வி என்பன இத்தகைய பால் பாரபட்சத்தை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளை சமூகத்தில் வேரூன்றச் செய்வதற்கு எவ்வாறு உதவியுள்ளன என்பதனை சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அது சமூகத்தில் ஆண், பெண் உறவுகள் சீர்கேடடைவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது. சமூக அபிலாஷைகளுக்கும் தனிநபர்களின் செயலாற்றுகைக்குமிடையில் இடையறாது அதிகரித்து வரும் இடைவெளி இந்நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. உலகமயமாக்கலுடன் இணைந்த விதத்தில் கலாச்சாரங்கள் ஒருங்கிணைந்து வருவதுடன், சமூகத்தில் வாழும் தனிநபர்களிடையே வேறுபட்ட நடத்தைகளும் அணுகுமுறைகளும் உருவாகி வருகின்றன. அடிச்சராடாக ஓடும் பொருளாதார மற்றும் அரசியல் சக்திகள் ஆண்களும் பெண்களும் பிறழ்ந்து சென்றிருக்கும் பங்குப் பணிகளை வகிக்க வேண்டிய நிர்ப்பந்தங்களை எடுத்து வந்துள்ளன. மகளிர் வருமானம் உழைப்பவர்களாக செயற்பட்டு வருவதுடன், பொருளாதார ரீதியிலும் முனைப்புடன் இயங்கி வருகின்றார்கள். இது அவர்கள் தமது எல்லைகளை வீட்டின் பாரம்பரிய இருப்பிடத்திலிருந்து வெளியில் விரிவாக்கிச் செல்லக்கூடிய நிர்ப்பந்தத்தை எடுத்து வந்துள்ளது. சட்டம் மட்டும் மகளிர் சட்ட நடைமுறைகளில் ஈடுபடுவதற்கு ஒரு தடையாக இருந்து வரவில்லை. ஆண்களும் பெண்களும் எதனைத் தெரிந்து கொள்ள வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை நிர்வகித்து வரும் சமூக அமைப்பும் பெண்கள் சட்ட நடைமுறைகளை சரிவர அறிந்து கொள்வதனை தடைசெய்து வருகின்றது.

## வாரிசு உரிமை

சொத்துக்கள் மற்றும் ஏனைய வளங்கள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான மகளிரின் வாரிசுரிமை எந்த வகையிலும் சமத்துவமானதாக இருந்து வரவில்லை என்பது நன்கு அறியப்பட்ட ஒரு விடயமாகும். உலக வெளியீட்டுக்கு பெண்கள் சுமார் அரைவாசிப் பகுதி அளவிலான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். ஆனால், உலகளாவிய ரீதியில் சுமார் 1 சதவீத சொத்துக்களையே அவர்கள் சொந்தமாகக் கொண்டுள்ளனர். இது வறுமையின் பால் பரிமாணங்கள் குறித்து அபிவிருத்திப் பணியாளர்களிடையே ஒரு மீள் சிந்தனையை எடுத்து வந்துள்ளது. இலங்கையில் தந்தை வழி குடும்பச் சட்டங்களும் சமூக அபிலாஷைகளும் பெண்கள் சொத்துக்களை வாரிசுரிமையாக பெற்றுக் கொள்ளும் நிலையின் மீது வரையறைகளை எடுத்து வருகின்றன. 1935 இன் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், காணிக் குடியேற்றத்திட்டங்களில் வாரிசுரிமையாக அச்சொத்தினை பெற்றுக் கொள்பவரின் பெயர் குறிப்பிடப்படாதிருப்பின் ஆண்களின் வாரிசுரிமைக்கு முன்னுரிமை அளிக்கின்றது. இதன் விளைவாக மகாவலி குடியேற்றத்திட்டத்தின் மூலம் பெண் குழந்தைகளிலும் பார்க்க ஆண் குழந்தைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், வாரிசுரிமை மற்றும் குடும்பத்துக்குள் முடிவுகள் எடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கண்டியச் சட்டம் ஓரளவுக்கு சமத்துவ இயல்பினைக் கொண்டதாக இருந்து வருகின்றது. சீதனம் குறித்த சமூக வழக்கங்கள் பெண்கள் பணத்தை அல்லது ஆபரணங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிலையை

ஏற்படுத்தியிருப்பதுடன், அந்தப் பணம் அல்லது ஆபரணங்கள் கணவனைச் சென்றடைய வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. பெண்களுக்கு சொத்து மீதான போதிய உரித்து இல்லாத நிலையில் பிணை தொடர்பான தேவைப்பாடுகளை நிறைவு செய்து வைப்பது. சிரமமானதாக இருந்து வருகின்றது. இது மறுபுறத்தில் பெண்களின் கடன்பெறும் ஆற்றலை மட்டுப்படுத்தி வருகின்றது. இந்தத் துறை தொடர்பாக உலகெங்கிலும் மிகவும் மெதுவான முன்னேற்றமே ஏற்பட்டு வந்துள்ளது. பொலிவியா, மலேஷியா, டான்ஸானியா மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளையும் உள்ளிட்ட ஒரு சில நாடுகள் மட்டுமே பெண்கள் நிலத்தை வாரிசுரிமையாக பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் தமது சட்டங்களை மாற்றியமைத்துக் கொண்டுள்ளன.

### வளங்களைப் பெறக்கூடிய ஆற்றல்

வளங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை வளங்கள் கிடைத்து வருவது தொடர்பான அறிவு மற்றும் அவற்றை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. வளங்களைப் பெற்றுக் கொள்ளும் விஷயத்தில் தற்போது நிலவி வரும் சமூக விழுமியங்களில் ஆண்களின் கையே ஓங்கியுள்ளது. இந்த விடயத்தில் மகளிர் உரிமை மறுக்கப்பட்டவர்களாக இருந்து வருகின்றனர். வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான செயன்முறையும் கூட சிரமமான ஒன்றாக இருந்து வருவதுடன், மகளிரைப் பொறுத்த வரையில் பரிச்சயமற்ற ஒன்றாகவும் இருந்து வருகின்றது. கல்வி மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பனவும் இத்தகைய அடிப்படையிலான சமூகமயமாக்கலுக்கு பங்களிப்புச் செய்து வருகின்றன. எனினும், வறுமையின் விஷச் சூழலை உடைத்தெறியும் பொருட்டு மகளிருக்கு வளங்களைப் பெற்றுக் கொடுப்பது ஓர் அத்தியாவசியத் தேவையாகும். வறுமையின் நிர்ணய காரணிகளில் ஒன்றாக திகழ்ந்து வரும் கொடுகடனை பெற்றுக் கொள்வதற்கு சொத்து அல்லது பிணையாளர் என்ற முறையில் பிணைப் பொறுப்பினை சமர்ப்பிப்பது அவசியமாகும். தற்போதைய சமூக கலாச்சாரத்துக்குள் மகளிரால் அத்தகைய தேவையை நிறைவு செய்து வைக்க முடியாதுள்ளது. தகவல்கள் மற்றும் பயிற்சி என்பவற்றை பெற்றுக் கொள்வதிலும் சமூக நிலைமைகள் காரணமாக பெண்கள் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றார்கள். எனவே, குடும்பத்துக்குள் வருமானத்தின் பகிர்வு மற்றும் தலைமுறைகளுக்கிடையில் சொத்துக்களின் பகிர்வு என்பன குடும்பத்தை சேர்ந்த பெண் உறுப்பினர்களின் நலனோம்பலின் மீது தாக்கங்களை எடுத்து வருகின்றன. வளங்களை பெற்றுக் கொள்வதில் பெண்கள் இவ்விதம் எதிர்கொண்டு வரும் வரையறைகள் காரணமாக பூரணத்துவமற்ற சந்தைகளில் ஆண்களிலும் பார்க்க அதிக அளவிலான பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

குறிப்பிட்ட சில சந்தைகளிலான அவர்களுடைய பங்கேற்பு, ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் மற்றும் அவற்றை வலுவுக்கிடல், கடன், நிதி மற்றும் காப்புறுதி போன்ற வசதிகளை பெற்றுக் கொள்ளல் என்பன வரையறுக்கப்பட்டவையாகவே இருந்து வருகின்றன. மகளிரின் இந்த இயலாமை நிலை வீட்டில் அவர்களுடைய பேரம் பேசும் சக்தியின் மீதும் தாக்கத்தை எடுத்து வருகின்றது. கிராமியச் சமூகங்களில் நிலம், கொடுகடன், பண்ணையல்லாத துறையின் தொழில் வாய்ப்புக்கள் என்பன மிகுந்த முக்கியத்துவத்தை பெற்றிருக்கும் வளங்களாக இருந்து வருகின்றன (உலக வங்கி, 1998). எனவே, இன்றைய சமூக பின்புலத்தில் பெண்கள் ஆண்களையும் பார்க்க அதிக அளவில் வறியவர்களாக இருந்து வருகின்றார்கள் என்ற விடயம் தெளிவாகத் தெரிகின்றது.

### குடியகல்வு

உலகமயமாக்கல் உலக நாடுகளுக்கிடையே தொழிலாளர்களின் நகர்வினை இலகுபடுத்தியுள்ளது. குடியகல்வு ஒரு நாட்டுக்குள் இடம்பெற்றாலும் நாடுகளுக்கிடையில் இடம்பெற்றாலும் அது குடும்பத்தின் மீது கணிசமான அளவிலான தாக்கங்களை எடுத்து வருகின்றது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான குடியகல்வின் பின்னணியில் தொழில்களைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் மிகைத்துக் காணப்படுகின்றது. இதன் விளைவாக ஆண்-பெண் உறவுகளில் சிக்கல்களும் குடும்ப வாழ்க்கையில் சீர்குலைவுகளும் தோன்றுகின்றன. அது மட்டுமன்றி பெண்கள் மிக மோசமாக சுரண்டப்படும் நிலையையும் இது எடுத்து வருகிறது. ஏனெனில், அவர்கள் தமது குடும்பங்களின் நலனை கருத்தில் கொண்டு தமது சுய மரியாதையை பணயம் வைத்தும் கூட காரியங்களைச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். பெண்கள் நகர்ப்புறங்களுக்கு குடியகல்ந்து செல்லும் பொழுது அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். உடல்ரீதியான சுரண்டலுக்கும் துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். ஏனெனில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிக்கலான நிலைமைகளுக்கு ஏற்ற விதத்தில் அனுசரித்துச் செல்லும் ஆற்றல் அவர்களுக்கு இல்லாதிருந்து வருவதுடன், அத்தகைய சமூகங்களில் தோன்றும் நிலைமைகளை சரிவர புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் அவர்கள் இருந்து வருகின்றனர். சமூகமயமாக்கலில் இடம்பெறும் பால் அடிப்படையிலான வகை மாதிரிகள் வேதன முறைக்குள் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுகளை எடுத்து வருகின்றன. பாரம்பரிய தொழில் வகைகளில் ஊழியர் படையில் பெண்களின் உள்ளடக்க விகிதம் சமூக விழுமியங்களை பிரதிபலித்துக் காட்டுகின்றது. பெண்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறைந்த சம்பளங்களுடன் கூடிய தொழில்களை பெற்று வருவதனால் சம்பாத்தியத்தில் ஆண்-பெண் இடைவெளி பாரிய அளவில் நிலவி வருகின்றது.

### மோதல் / போர்

மோதல் நிலைமைகளில் பெண்கள் சுரண்டலுக்கும் சமூக ரீதியிலான புறமொதுக்கலுக்கும் எளிதில் இரையாக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்ற விடயம் இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது. மோதலின் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பவர்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பினை அவர்களே ஏற்க வேண்டியுள்ளது. அதாவது, அவர்கள் உடல் ஊனமுற்றவர்களை பராமரிக்க வேண்டியிருந்து வருவதுடன், விதவை நிலையில் கைவிடப்பட்டவர்களாக இடம் பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வர வேண்டியுள்ளது. குடும்பத்தில் வருமானத்தை உழைப்பவர்களாகவும் அவர்கள் இருந்து வருகின்றார்கள். தமக்கு ஏற்பட்டிருக்கும் துயரங்கள் காரணமாக உளவியல் ரீதியான பாதிப்புக்களையும் அவர்கள் எதிர்கொண்டுள்ளனர். சமூக கட்டமைப்புக்கள் தமது ஆண் சகாக்களுக்கு இணையான விதத்தில் அவர்கள் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிப்பதில்லை. இந்த நிலையில் அவர்கள் பிறரின் தயவில் பெருமளவுக்கு தங்கியிருக்க வேண்டியிருப்பதுடன், வறுமையில் வாழ்வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

### இலங்கையில் வறுமையும் பெண்கள் நிலையும்

வறுமை தொடர்பான பால் அடிப்படையிலான தரவுகள் கிடைக்காதிருந்த போதிலும் இலங்கையில் ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிக அளவில் வறுமையில் வாடி வருகின்றார்கள் என்ற விடயம் யாவரும் அறிந்தவொன்றாகும். எளிதில் வறுமைக்கு இரையாகக் கூடிய குழுக்களைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது பெண்களே உயர் அளவில் இதனால் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பது தெரிய வருகின்றது. வறிய மக்கள் பெருமளவுக்கு ஈடுபட்டு வரும் பொருளாதார நடவடிக்கை துறைகள் இங்கு பெட்டியில் தரப்பட்டுள்ளன.

வறியவர்கள் பெருமளவில் ஈடுபட்டு வரும் பொருளாதார நடவடிக்கைகள்

1. நிலமற்ற விவசாய தொழிலாளர்கள்

2. குடும்ப உழைப்பை பயன்படுத்தி உணவுப் பயிர்களை உற்பத்தி செய்து வரும் சிறு காணிகளை வைத்திருக்கும் குடியானவர்கள்.

3. மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு

4. சிறிய அளவிலான பெருமளவுக்கு குடிசைக் கைத்தொழில் வகையைச் சேர்ந்த கிராமியக் கைத்தொழில்களில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள்.

5. சிறு வியாபாரிகள் மற்றும் சுய தொழில்களில் ஈடுபட்டு வருவோர்.

6. மேசன், தச்சன் போன்ற தனிப்பட்ட முறையில் தொழில் செய்து வரும் கைவினைக் கலைஞர்கள்.

*ஆதாரம் : லக்ஷ்மன். 1997*

வறுமைக்கும் வேலையின்மைக்கும் இடையில் ஓர் இணைப்பு நிலவி வருவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது (லக்ஷ்மன், 1997). இலங்கையில் பெண்களுக்கிடையிலான வேலையில்லாத் திண்டாட்டம் வீழ்ச்சி அடைந்துவரும் ஒரு போக்கினை காட்டிய போதிலும் கூட அது ஆண்களின் வேலையின்மை அளவினைப் பார்க்கிலும் உயர்வானதாகவே இருந்து வருகின்றது. பெண்களுக்கிடையிலான வேலையில்லாத் திண்டாட்டம் 1992 இல் 22.2 சதவீதமாக இருந்து 2000 ஆவது வருடத்தின் நடுப்பகுதியில் 10.1 சத வீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. அதே வேளையில், ஆண்களின் வேலையின்மை விகிதம் 1992 இல் 10.7 சதவீதமாக இருந்து 2000 நடுப் பகுதியில் 5.3 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. மேலும், கல்வி கற்ற பெண்களிடையே கபொத (உ-யர்தர) தகுதியையும் அதற்கு கூடுதலான தகுதிகளையும் பெற்றிருந்த பெண்களிடையே வேலையின்மை 30 % வரையில் மிக உயர்வாக நிலவி வருவதும் அவதானிக்கப் பட்டுள்ளது. ஆனால், கல்வியைப் பெற்றிராத பெண்களை பொறுத்தவரையில் வேலையின்மை 2 வீதத்துக்கும் குறைவான மட்டத்திலேயே நிலவி வருகின்றது. ஆண்களைப் பொறுத்தவரையில் தரம் 5-10 கல்வித் தகைமையைப் பெற்றுக்கொண்ட வர்களிடையே மிக உயர் அளவில் 55 % வேலையின்மை நிலவி வருகின்றது. ஆனால், அதே வேளையில் பள்ளிக் கல்வியை பெற்றிராத ஆண்களிடையே இது 4 % அளவில் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவி வருகின்றது. க பொ த (உயர்தரம்) மற்றும் அதற்கு கூடிய தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ள ஆண்களிடையே 15 சதவீதத்துக்கும் குறைவாகவே வேலையின்மை நிலவி வந்துள்ளது. குறைந்த அளவில் கல்வியை பெற்றுக் கொண்டிருக்கும் பெண்கள் உயர் தகைமைகளை பெற்றிருக்கும் தமது சகாக்களை பார்க்கிலும் அதிக அளவில் ஊழியர் படையில் வாய்ப்புக்களை பெற்று வருகின்றார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இது ஊழியத்தின் பாரம்பரிய பால் அடிப்படையிலான பிரிவை வேரூன்றச் செய்வதற்கும் பங்களிப்புச் செய்து வருகின்றது. அதாவது, குறைந்த வேதனங்களை பெற்றுத் தரும் கீழ்மட்ட தொழில்களிடையே பெண்கள் ஒன்றுதிரண்டிருக்கும் நிலையை இது எடுத்து வருகின்றது.

இன்னமும் கூட விவசாயத் துறையே இலங்கை ஊழியர் படையின் பிரதான வேலை கொள்வோர் துறையாக இருந்து வருகின்றது. கிராமியத் துறையில் ஊழியர் படைக்கான அதன் பங்களிப்பு 41.8 சத வீதமாகும். அதே வேளையில், நாட்டின் மொத்த ஊழியர் படையில் 37 சதவீதத்தினர் விவசாயத் துறையிலேயே வேலை செய்து வருகின்றனர். வேதனம் பெறாத குடும்ப உழைப்பாளர்கள் என்ற முறையிலும் கூலித் தொழிலாளர்கள் என்ற முறையிலும் குடியகல்வு தொழிலாளர்கள் என்ற முறையிலும் பெண்கள் விவசாயத்துக்கு கணிசமான அளவிலான பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர். இலங்கையில் 1997-98 இல் வேதனம் பெறாத குடும்ப உழைப்பாளர்களாக 56 % பெண்கள் உழைத்து வந்துள்ளார்கள் என்ற விடயம் தெரிய வந்துள்ளது.

பெண்கள் இரு விதங்களில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். முதலாவதாக சமூகத்தில் வாழ்ந்து வரும் வறிய குழுக்களை சேர்ந்தவர்கள் என்ற முறையிலும், இரண்டாவதாக தாம் பெண்களாக இருந்து வருவதன் காரணமாகவும் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தமது ஜீவனோபாயத்துக்கென இத்தகைய பொருளாதார நடவடிக்கைகளில் தங்கியிருக்கும் பெண்களை தலைவர்களாக கொண்ட குடும்பங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களினால் அண்மைக் காலத்தில் பெண்களை தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. அது 1990-1991 இல் 20 சதவீதமாக இருந்து வந்தது. 1993 இல் 71 சதவீத குடும்பத் தலைவர்கள் விதவைகளாக இருந்து வந்ததாகவும், 3 சதவீதம் மட்டுமே அவ்வித ஆண்களைக் கொண்டிருந்த குடும்பங்களாக இருந்து வந்தமையை எடுத்துக் காட்டுகின்றது. சுமார் 10.2 % பெண்கள் தனித்து வாழ்ந்து வருவதாகவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. நகர துறையில் 17 % குடும்பங்கள் பெண்களை தலைவர்களாக கொண்ட குடும்பங்களாக இருந்து வந்துள்ளன (ரத்னாயக்க 1994). விதவைகள், பிரிந்து வாழும் நபர்கள் மற்றும் பெண்களை தலைவர்களாக கொண்ட குடும்பங்கள் ஆகியோரிடையே மிக உயர் அளவில் வறுமை நிலவி வருவதாக ரத்னாயக்க (1994) குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

பெண்களே வறியவர்களுக்கு மத்தியில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களாக இருந்து வருகின்ற அதேவேளையில், அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. பெண்களாக இருந்து வரும் காரணத்தினால் அவர்கள் இரு தடவைகள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். எனவே, வறுமையின் பால் அடிப்படையிலான பரிமாணங்களும் இருந்து வருகின்றன. வறுமையின் மகளிர்மயமாகும் நிலை பிராந்தியங்கள், எளிதில் நலிவடையக் கூடிய சமூகக் குழுக்களின் குணாம்சங்கள், பூகோள அமைவிடம் என்பவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றது. எனவே, பால் அடிப்படையிலான வறுமைத் தணிப்பு உத்திகளை பரிச்சயப்படுத்திக் கொள்வது அவசியமாகும். தற்பொழுது உலகமயமாக் கலின் பால் அடிப்படையிலான தாக்கமும் வறுமையின் நிலைமாற்றமும் இடம்பெற்று வருகின்றது. உலக பொருளாதாரத்தின் உலகமயமாக்கலின் எதிர்மறைத் தாக்குதலை பெண்களே அதிக அளவுக்கு அனுபவித்து வருகின்றனர். பொருளாதாரம் உயர் அளவில் உலகளாவிய சந்தைகளுடன் பிணைக்கப்படும் பொழுது சமூக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பொதுத்துறை செலவினங்கள் என்பவற்றில் வெட்டுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையிலும் பெண்களே அதிக அளவிலான சுமைகளை ஏற்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு மத்தியில் பெண்களை தலைவர்களாக கொண்ட குடும்பங்கள் வறுமையினால் மிக எளிதில் பாதிப்படையக் கூடிய குடும்பங்களாக இருந்து வருகின்றன என்ற விடயம் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் தந்தைவழி குடும்பச் சட்டங்களும் சமூக எதிர் பார்ப்புகளும் பெண்கள் வாரிசுரிமையாக சொத்துக்களை பெற்றுக் கொள்ளும் நிலையை மட்டுப்படுத்தி வருகின்றன. மேலும், பெண்களுக்கு போதிய அளவில் வளங்கள் கிடைக்காதிருக்கும் நிலை குடும்பத்தில் அவர்களுடைய பேரம்பேசும் நிலையை நலிவடையச் செய்துள்ளது என்பதும் தெளிவாகும். குடியகல்வு மற்றும் மோதல் நிலைமைகள் என்பன வறுமையின் மகளிர்மயமாக்கலின் மீத தாக்கத்தை எடுத்து வரும் ஏனைய காரணிகளாகும்.

# உள்நாட்டில் இடம்பெயர்ந்திருப்பவர்களிடையே நிலவி வரும் வறுமை

விமலா பெரியண்ணன்பிள்ளை
(விரிவுரையாளர், இலங்கை மன்றக் கல்லூரி)

வளர்முக நாடுகள் வறுமைய ஒழிப்பது தொடர்பான சவாலை இடையறாது எதிர் கொண்டு வருகின்றன. பல தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகள் சாதகமான பெறுபேறுகளை எடுத்து வந்துள்ளன. எனினும், வறுமை இல்லாத ஓர் உலகம் இன்னமும் ஒரு கனவாகவே இருந்து வருகின்றது. இயற்கைப் பேரிடர்கள், பொருளாதார துர்நிர்வாகம், சாதகமற்ற வர்த்தக நிலுவைகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு அமைப்புகள் என்பன போதிய அளவில் இல்லாதிருத்தல் என்பன வறுமையின் பெருக்கத்துக்கு பங்களிப்புச் செய்துவரும் காரணிகளாக உள்ளன. அண்மைய வருடங்களில், மோதல் நிலைமைகள் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்துவரும் ஆயிரக்கணக்கான மக்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. போர் மற்றும் உள்நாட்டு போராட்டங்கள் என்பவற்றின் விளைவாக பெருந்தொகையான மக்கள் தமது வழமையான வாழிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதுடன், இது வறுமைப் பிரச்சினையை மேலும் 'தீவிரப்படுத்தியுள்ளது. இவ்விதம் இடம் பெயர்ந்திருக்கும் மக்கள் எளிதில் பாதிப்புக்களை எதிர் கொள்ளக்கூடிய ஒரு விசேட குழுவாக உள்ளனர். உள்நாட்டுப் போராட்டங்கள் இடம் பெற்றுவரும் நாடுகளில் இடம்பெயர்வு வறுமையின் அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் உள்நாட்டு ஆயுத மோதல், உள்நாட்டுப் போர், மனித உரிமை மீறல்கள், இயற்கை அல்லது மனிதனால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகள் என்பவற்றின் விளைவாக சடுதியாக அல்லது எதிர்பாராத விதத்தில் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் தனி நபர்கள் அல்லது தனி நபர்களைக் கொண்ட குழுக்கள் ஆவர். மேலும், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அரசின் எல்லையொன்றை தாண்டிச் செல்லாதிருக்கும் நபர்களே உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் தொடர்பான பிரச்சினை கெடுபிடியுத்தத்தின் பின்னரேயே எழுச்சியடைந்தது. கெடுபிடி யுத்தம் இடம் பெற்றுவந்த பொழுது பெருந்தொகையான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களால் தமது நாட்டைவிட்டு வெளியேறிச் செல்வதற்கு முடியாதிருந்தது. இவ்விதம் தேசிய எல்லைகளைக் கடந்து செல்லும் நபர்கள் அகதிகளாக அங்கீகரிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவும் பாதுகாப்பும் கிடைத்து வருகிறது. அவ்விதம் எல்லைகளைக் கடக்காது தமது சொந்த நாடுகளில் தங்கியிருப்பவர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் என அழைக்கப்படுகின்றனர். இவ்விதம் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் எண்ணிக்கை இப்பொழுது அதிகரித்து வருகின்றது. அகதிகளும் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களும் பல பொதுவான குணாம்சங்களைக் கொண்டுள்ளனர். ஆனால், தேசிய எல்லைகளைத் தாண்டிச் செல்லும் அகதிகள் சர்வதேச சமூகத்தின் உதவியையும் பாதுகாப்பையும் பெற்றுவரும் அதேவேளையில், தமது சொந்த நாடுகளின் எல்லைகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அத்தகைய உதவியும் பாதுகாப்பும் கிடைப்பதில்லை. உள்நாட்டில் இடம்பெயர்திருக்கும் மக்களின் தேவைகள் குறித்து கவனத்தை ஈர்ப்பதற்கும், அவர்களுடைய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கும் என இவ்விதம் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை 1998 இல் ஐ நா அமைப்பு அறிமுகம் செய்து வைத்தது. அகதிகளுக்கான ஐக்கிய அமெரிக்க பேரவையின் தரவுகளின் பிரகாரம் உலகெங்கிலும் சுமார் 21.1 மில்லியன் மக்கள் தமது சொந்த நாடுகளில் இடம் பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர். 1999 ஆம் வருடத்தின் போது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையில் சுமார் 24 % அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. 1999 ஆம் வருட முடிவின் போது அவ்வருடத் தொடக்கத்தில் இருந்த அளவிலும் பார்க்க மேலும் 40 இலட்சம் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வந்தனர். 1995 க்கும் 1999 க்கும் இடையில் கணிசமான அளவில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை 32 இலிருந்து 40 ஆக அதிகரித்திருந்தது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்துக்கும் அதிகமாக காணப்பட்ட நாடுகள் 1999 இல் 18 ஆக இருந்தன. உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மொத்த மக்களில் சுமார் அரைவாசி பகுதியினர் சூடான், கொலம்பியா, அங்கோலா, ஈராக், பொஸ்னியா, புருண்டி மற்றும் கொங்கோ - கிங்காரா ஆகிய நாடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவற்றில் நான்கு நாடுகள் ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்தவையாகும்.

மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் நிலை நோய்களின் பரவல், சமூக கொந்தளிப்புக்கள், அரசியல் ஊசலாட்டம் மற்றும் பாதுகாப்பின்மை போன்ற பல சமூக, அரசியல் பிரச்சினைகளின் எழுச்சிக்கு வழிகோலுகின்றது. இலங்கையில் கடந்த 17 வருட காலமாக ஓர் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றது. இதன் விளைவாக சுமார் பத்து இலட்சம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையில், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அவர்களுக்கென அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மக்களுக்கான பாதுகாப்பு, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு என்பவற்றுக்கென அரசாங்கம் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு வருகின்றது. அண்மைய மதிப்பீடொன்று 682,827 நபர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இவர்களில் 172,693 பேர் 14 மாவட்டங்களில் அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். சரியான புள்ளிவிபரங்களை பெற்றுக் கொள்வது சிரமமான ஒரு காரியமாக இருந்து வருவதனால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வரும் மக்களின் எண்ணிக்கை மேலும் உயர்வானதாக இருந்துவர முடியும்.

அட்டவணை 1
14 மாவட்டங்களில் அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்த இடம்பெயர்ந்துள்ள மக்கள் (1999 செப்டம்பரில் உள்ளவாறு)

| மாவட்டம் | நலன்புரி நிலையங்கள் எண்ணிக்கை | இந்நிலையங் களில் வாழ்ந்து வருபவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 56 | 6,191 |
| மன்னார் | 15 | 22,757 |
| கிளிநொச்சி | 40 | 24,868 |
| வவுனியா | 14 | 18,337 |
| திருகோணமலை | 16 | 3,953 |
| மட்டக்களப்பு | 02 | 1,540 |
| அம்பாறை | 08 | 4,020 |
| முல்லைத்தீவு | 79 | 32,642 |
| கொழும்பு | 01 | 450 |
| குருணாகல் | 13 | 1,154 |
| அநுராதபுரம் | 44 | 9,244 |
| பொலன்னறுவை | 07 | 2,879 |
| மாத்தளை | 01 | 46 |
| புத்தளம் | 113 | 44,612 |

*மனிதாபிமான உதவி முகவரகங்களின் சம்மேளனம் - ஆண்டு நூல் 2000*

உள்நாட்டு ஆயுதப் போராட்டம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்திருப்பது மட்டுமன்றி தமது உடமைகளையும் உறவினர்களையும் இழந்துள்ளனர். வளங்கள் மிகவும் வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே காணப்படும் இடங்களில் வாழ்க்கை நடத்துவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். வாழ்க்கை நிலைமைகள் மற்றும் வாய்ப்புக்கள் என்பன இடத்துக்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இச்சமூகப் பிரச்சினைகளின் பொதுவான இயல்பினை பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்ட முடியும்:

- இடம்பெயர்ந்துள்ள நிலை உணவு, நீர், உறைவிடம் மற்றும் பொருத்தமான சுகாதாரம் என்பவற்றின் பற்றாக்குறைக்கு வழிகோலுகின்றது.
- இந்நிலையில் மக்கள் நெரிசல் நிலைமைகளில் வாழ வேண்டி நேரிடுகின்றது.
- மிகவும் நெருக்கமாக நெரிசல் நிலையில் வாழ்ந்து வரும் நிலை மன உளைச்சல் மற்றும் நோய்கள் என்பவற்றின் தோற்றத்துக்கு வழிகோலுகின்றது.
- ஜீவனோபாய மார்க்கங்கள் இல்லாத நிலை.
- சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கென உள்ளூர் சமூகங்களுடன் போட்டியிட நேரிடும்பொழுது சமூகங்களுக்கிடையில் மோதல் நிலை தோன்றுகிறது.
- போதியளவில் நடமாட்ட சுதந்திரம் இல்லாதிருப்பது அல்லது பாதுகாப்பின்மை குறித்த அச்ச உணர்வு.
- நிவாரணம் மற்றும் புனருத்தாரணம் என்பவற்றை வழங்கும் நிறுவனங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை.
- அடிக்கடி இடம்பெயரும் பொழுது மக்கள் கையறு நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.
- பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பின்மை.
- விதவைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பு.
- மாற்று வேலைவாய்ப்புக்கள் இன்மை மற்றும் கிடைக்கும் தொழில் வாய்ப்புக்களுக்கு அவசியமான திறன்கள் இன்மை.

இந்த நிலைமைகள் அனைத்தும் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை வறுமை நிலைக்குள் தள்ளியுள்ளன. தனிநபர் ஒருவருக்கு போதிய உணவு, உறைவிடம், உடை, கல்வி, சுகாதார வசதி என்பன இல்லாத நிலையே வறுமை நிலையென கூறப்படுகின்றது. அவல வாழ்வு வாழ்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வறுமையில் வாழ்ந்து வரும் மக்கள் சுகாதாரக் கேடு, பொருளாதார சீர்குலைவு, இயற்கை பேரிடர்கள் எனபவற்றின் போது உடனடியாக பாதிப்புக்களை எதிர்கொள்ளும் மக்கள் பிரிவினராக இருந்து வருகின்றனர். குறிப்பிட்ட ஒரு குடித்தொகையினரிடையே பின்வரும் நிலைமைகள் நிலவி வருவது மானிட வறுமையைக் குறிக்கின்றது என ஐ நா அபிவிருத்தி திட்டத்தின் மானிட அபிவிருத்தி அறிக்கை (2000) சுட்டிக் காட்டுகின்றது:

- இன்று பிறக்கும் குழந்தைகளில் 40 வயது வரையில் ஆயுள் எல்லையை கொண்டிராத குழந்தைகளின் சதவீதம்
- வயது வந்தவர்களிடையே நிலவி வரும் எழுத்தறிவின்மை விகிதம்.
- சுகாதார சேவைகள் மற்றும் பாதுகாப்பான நீர் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வரும் மக்களின் சதவீதம், ஓரளவுக்கு அல்லது கடுமையாக எடைக் குறைவினை கொண்டிருக்கும் ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகளின் சதவீதம்.

எனவே, இந்த வகையில் வறுமை என்பது பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட ஒரு நிகழ்வாக இருந்து வருகின்றது. வறுமையின் பலவேறு அம்சங்கள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவையாக இருந்து வருவதுடன், முக்கியமான வழிகளில் ஒன்றின் மீது ஒன்று அழுத்தங்களை எடுத்து வருகின்றது. உதாரணமாக, சுகாதார சேவைகளில் ஏற்படும் விருத்தி நிலை ஒரு தனி நபரின் வாழ்க்கைத் தரத்தை விருத்தியடையச் செய்யும். அது மறுபுறத்தில் அந்த நபரின் உற்பத்தித் திறனை அதிகரித்து, பொருளாதார நிலைமையை மேம்படுத்தி, வறுமை ஒழிப்புக்கு பங்களிப்புச் செய்யும். மக்கள் இடம்பெயர்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில் வறுமையின் பன்முகப் பரிமாணங்கள் தீவிரமடைகின்றன.

உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் சமூகங்களிடையே போதியளவில் உணவு மற்றும் உறைவிடம் கிடைக்காமை, பிள்ளைகளுக்கு கல்வி வசதியின்மை, போதிய சுகாதார வசதிகள், நீர் விநியோகம் என்பன கிடைக்காமை மற்றும் வேலை வாய்ப்புக்கள் இன்மை முதலிய வறுமை தொடர்பான நோய்க் குறிகள் பரவலாக காணப்படுகின்றன. இம்மக்கள் பிரிவினருக்கு சுகாதார வசதிகளும் போதிய உணவு, உறைவிடம் என்பனவும் கிடைப்பதில்லை. இந்நிலை காரணமாக அவர்கள் எளிதில் நோய்வாய்ப்படக்கூடியதாக இருந்து வருவதுடன், அது வறுமையை மேலும் தீவிரப்படுத்துகின்றது.

இலங்கை அரசாங்கம் உணவு உதவி, சுகாதார சேவைகள், இருப்பிட வசதி போன்றவற்றை வழங்குவதன் மூலம் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் தேவைகளை நிறைவு செய்து வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய உதவிகள் அம்மக்கள் உயிர் வாழ்வதற்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் ஒரு நிலையில், அமைப்பு ரீதியான இடையூறுகள் காரணமாக நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்களின் வாழ்க்கைத் தரங்களில் குறிப்பிடத்தக்க அளவிலான மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. எனவே, இத்தகைய நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களிடையே பரவலாக வறுமை நிலவி வருகின்றது. அந்த வறுமையை ஒழிப்பதே நாடு எதிர்கொண்டு வரும் மிகப் பெரிய சவாலாக உள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் இம்மக்களில் பெரும்பாலானவர்கள் ஒரு வருடத்துக்கும் மேற்பட்ட காலம் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருவதனால் பயனற்ற ஒரு வாழ்வினை நடத்துவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்

படுகின்றனர். அவர்களுக்கு செய்வதற்கு வேலை எதுவும் இல்லை. எனவே, இம் மக்களிடையே நிலவி வரும் வறுமையை ஒழிக்கும் பொருட்டு பன்முக பரிமாணங்களைக் கொண்ட ஓர் அணுகு முறை பின்பற்றப்படுவது அவசியமாகும். இந்த அணுகுமுறை இம்மக்களிடையே வறுமையைத் தூண்டி வரும் காரணிகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும். இதற்கு சாத்தியமான பல்வேறு தெரிவுகள் இருந்து வருகின்றன. அவையாவன:

### மீளக் குடியமர்த்துவதன் மூலம் தங்கியிருக்கும் நிலையை குறைவடையச் செய்தல்

உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கு ஊக்கமளிக்க முடியும்; அல்லது நாட்டின் ஏனைய பாகங்களில் அவர்களைக் குடியேற்ற முடியும். மீளக் குடியமர்த்தப்படும் பொழுது இந்நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் ஒரு சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும். மேலும், பொருத்தமான ஜீவனோபாய மார்க்கங்களையும் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கு அது அவர்களைத் தூண்டும். காலப் போக்கில் தங்கியிருக்கும் மனோபாவமும் அவர்களிடமிருந்து ஒழிந்துவிடும்.

### நிவாரணத்துக்கு ஊடாக அபிவிருத்தி

குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்குள் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ளும் நிலை எட்டப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிவாரண உதவியை தொடர முடியும். இதற்கென நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை சரிவரப் புரிந்து கொண்டு, அவர்கள் தமது சொந்த முயற்சியில் இலாபகரமான தொழில்களில் ஈடுபடக் கூடிய விதத்தில் அவர்களுக்கு தேர்ச்சித் திறன்கள் வழங்கப்படுவது அவசியமாகும். அது அவர்கள் தமது பொருளாதார வறுமையைப் போக்கிக் கொள்வதற்கு உதவும். பொருளாதார வறுமை ஏனைய அனைத்து வகைகளையும் சேர்ந்த வறுமைகளின் தோற்றுவாயாக இருந்து வருவதனால், பொருளாதார வறுமை ஒழிக்கப்படும் பொழுது ஏனைய வகைகளைச் சேர்ந்த வறுமைகளை வெற்றி கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு கிடைக்கும்.

### அரசாங்க துறைக்கும் அரசு சாரா துறைக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு

உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் தொடர்பாக பணிகளை மேற்கொண்டு வரும் அரச துறை நிறுவனங்களும் அரச சாரா நிறுவனங்களும் இம்மக்களின் வாழ்க்கைத் தரங்களில் படிப்படியான ஒரு விருத்தி நிலையை எடுத்து வரும் பொருட்டு அவை தமக்கிடையே ஒரு நல்ல ஒருங்கிணைப்பினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவை பின்பற்றப்படக் கூடிய ஒரு சில நீண்ட கால உத்திகளாகும். ஆனால், இதற்கான குறுங் கால உத்திகள் என்ற முறையில் பின்வருவனவற்றை பின்பற்ற முடியும்:

### பணத்துக்காக வேலை செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடியகல்வுத் தொழிலாளர்களினாலும் கூலித் தொழிலாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளை இடம்பெயர்ந்திருக்கும் நபர்களைக் கொண்டு மேற்கொண்டு அவ் வேலைகளுக்கென அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியும். இது அவர்கள் தம்மை முன்னேற்றிக் கொள்வதற்கு உதவுவதுடன், உதவிக்கென வேறு நிறுவனங்களில் தங்கியிருக்காமல் தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளும் நிலைக்கு அவர்களை உயர்த்தும். மேலும், அது அவர்களுடைய சுய மரியாதையை உயர்த்துவதுடன், இடம்பெயர்ந்திருக்கும் நிலையிலேயே ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்கும்.

### கைத்தொழில்களை நிறுவுதல்

உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வரும் இடங்களில் கைத்தொழில்களையும் தொழிற்சாலைகளையும் ஸ்தாபிப்பதற்கு ஊக்கமளிக்க முடியும். அக்கைத்தொழில்களில் வேலைவாய்ப்புக்களை வழங்கும் பொழுது இம்மக்கள் தொடர்பாக முன்னுரிமைகளை வழங்கலாம்; அல்லது இடம்பெயர்ந்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்தையும் சேர்ந்த ஒரு நபருக்கு வேலைவாய்ப்பினை வழங்கலாம்.

### மக்கள் சமூக ரீதியில் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகளை அறிமுகம் செய்து வைத்தல்

இம்மக்கள் அனேகமாக செய்வதற்கு வேலை எதுவும் இல்லாத நிலையில் வாழ்ந்து வருவதனால் வீணே சோம்பிக் கிடப்பதற்கும், பயனற்ற விதத்தில் பொழுதை போக்குவதற்கும் அவர்கள் பழகிக் கொள்கிறார்கள். இது விரக்திக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் வழிகோலுகின்றது. பல்வேறு சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டால் தமது நேரத்தை அவர்கள் பயனுள்ள விதத்தில் செலவிட முடியும். விளையாட்டுக்கள், நிகழ்கலைகள், தொழில் திறன் பயிற்சி, கல்வி மற்றும் கைவினைத் தொழில்கள் என்பவற்றில் அவர்களை ஈடுபடுத்த முடியும். பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் விளையாட்டு என்பவற்றை வழங்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட உத்திகளை பின்பற்றுவதன் மூலம் இடம்பெயர்ந்திருக்கும் மக்களிடையே நிலவி வரும் வறுமை நிலையை தணிக்கவும் நிவாரண உதவிகளை வழங்கி வரும் நிறுவனங்களில் அவர்கள் தங்கியிருக்கும் நிலையை குறைக்கவும் முடியும்.

*(16ஆம் பக்கத் தொடர்ச்சி)*

- பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கும் உயர் மட்டத்தில் அரசியல் அர்ப்பணிப்புணர்வு அவசியமாகும்.
- நோய்கள் மற்றும் அவற்றின் மூலம் ஏற்படும் மரணங்கள் என்பவற்றை வெற்றிகரமான முறையில் தடுத்து நிறுத்திக் கொள்வதற்கு தனியார்துறை, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஐ நா முகவரகங்கள் என்பவற்றுக் கிடையே கூட்டு ஒத்துழைப்பு அவசியமாகும்.
- பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு புதுமைப்புனைவிலான நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். குறிப்பாக தாய்மாருக்கு பயிற்சி மற்றும் கல்வி என்பவற்றை வழங்குவது வெற்றிக்கான ஒரு முக்கிய வழியாக.
- வீட்டை முதலாவது மருத்துவ மனையாக தரமுயர்த்திக் கொள்வதன் மூலம் குழந்தை மரண விகிதங்களை குறைத்துக் கொள்ள முடியும்.
- சமூக மட்டத்தில் மருந்துகள் மற்றும் ஏனைய செலவு குறைவான கருவிகள் என்பன கிடைத்து வருவது அவசியமாகும்.
- திட்டமிடல் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் பெறுபேறுகளை அளவிடுவது ஒரு முக்கிய கூறாக இருந்து வருகின்றது.

# இலங்கையில் வறுமை ஒழிப்பில் இளைஞர்கள் கொண்டிருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்

சரன் வீரவன்ச
(விரிவுரையாளர், இலங்கை மன்றக் கல்லூரி)

இளமை என்பது ஒரு மனிதப் பிறவியின் வாழ்க்கையில் செயல்துடிப்பும் திடகாத்திரமும் நிறைந்த ஒரு காலப் பிரிவாக இருந்து வருகின்றது. மேலும், இளமையின் போது ஒரு நபர் படிப்படியாக தனது பிள்ளைப் பருவத்தை தாண்டி வருவதுடன், அபிவிருத்தி, கட்டங்களை முழுமைப் படுத்துவதனை அவர் ஆரம்பிக்கிறார். உயிரியல் ரீதியில் இளமை என்பது பிள்ளைப் பருவத்திலிருந்து வயது முதிர்ந்த பருவத்துக்கு இடம் பெறும் நிலை மாற்றமாக உள்ளது. ஒருவரின் வாழ்க்கையில் மிக மதிப்புமிக்க ஒரு காலப் பிரிவாக இந்த இளமைப் பருவம் இருந்து வருகின்றது. வரலாறு நெடுகிலும் வயது முதிர்ந்தவர்களுக்கும் இளைஞர்களுக்கு மிடையே இளைஞர்களின் நடத்தை தொடர்பாக சர்ச்சைகளும் கருத்து முரண்பாடுகளும் நிலவி வந்துள்ளன. எகிப்தில் வாழ்ந்து வந்த பைப்பிரஸ் மக்களிடையேயும் இப்போக்கு காணப் பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளைஞர்களை பயனற்ற ஒரு குழுவினர் எனக் கருதினர். இந்த இளைஞர்கள் வயது முதிர்ந்தவர்களாக மாற்றமடையும் பொழுது சமூகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் விதி குறித்தும் அவர்கள் சந்தேகம் கொண்டிருந்தனர். பின்னர் சோக்கிரடீசின் காலத்தின் போது ஏதென்ஸ் நகர இளைஞர்களின் சக்தி குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், சோக்ரடீஸ் இந்த கருத்தாக்கங்களுக்கு சவால் விடுத்ததுடன், இளைஞர்கள் ஆற்றல் மிக்க ஒரு குழுவினராக இருந்து வருவதாகவும், அவர்கள் எதனையும் கேள்விக்குள்ளாக்காமல் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் கூறினர்.

கடந்த காலத்தைப் போலவே இன்றும் இளைஞர்கள் சிந்திக்கும் விதமும் செயற்படும் விதமும் ஒரு நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார தளங்களின் மீதும் ஒட்டுமொத்த அபிவிருத்திக் கட்டமைப்பின் மீதும் செல்வாக்கினை எடுத்து வருகின்றது. இலங்கை இன்றைய உலகமயமாக்கல் போக்கின் பின்புலத்தில் பல சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை எதிர் கொண்டு வருகின்றது. இளைஞர்கள் ஒரு முற்போக்கு தலைமுறையினர் என்ற முறையில் இடம்பெற்றுவரும் நிலை மாற்றங்களை அடையாளங் கண்டு, தமது ஆற்றல்களை விருத்தி செய்து, தமது பலவீனங்களை அகற்றி, இச்சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு புத்தாக்கத் திறனுடனும் வீரியத்துடனும் முன்வருவார்க ளேயானால் அவர்களால் தம்மையும் அதே போல நாட்டையும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

வறிய நாடுகளைப் பொறுத்தவரையில் அபிவிருத்தியின் குறிக்கோள் இந்நாடுகளில் எழுத்தறிவின்மை மற்றும் அடிமை நிலை என்பவற்றிலிருந்து தோன்றியிருக்கும் பலவீனங்களிலிருந்து மக்களை வெளியே எடுத்து வருவதாகவே இருந்து வர வேண்டும் என முன்னாள் தன்சானிய ஜனாதிபதியான ஜூலியஸ் நியரேரே குறிப்பிட்டிருந்தார். மக்களின் எழுச்சியும் சுதந்திரமுமே அபிவிருத்தியின் அடிப்படை நோக்கமாக இருந்துவர வேண்டும் என அவர் நம்பினார். எனினும், ஒரு தனி நபரே தனக்கான சுதந்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும். அவர் திடசங்கற்பத்துடன் செயற்படக்கூடிய வராக இருந்து வருதல் வேண்டும். தான் வாழ்ந்து வரும் சுற்றாடல் மற்றும் சமூகம் என்பவற்றின் மீது செல்வாக்கினைப் பிரயோகிக்கக் கூடிய ஆற்றலையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும். அந்த வகையில், அபிவிருத்தியென்பது தனிநபரினால் தனி நபருக்காக எடுத்து வரப்படும் ஒன்றாகவே இருந்து வருகின்றது. அது அந்த தனிநபருக்கு உரித்தானதாகும்.

எனவே, இன்றைய தலைமுறை பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டபோதிலும் இப்பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான அடிப்படை சக்தியை இளைஞர்கள் தம்வசம் வைத்துள்ளனர். இலங்கையில் இத்தகைய சவால்கள் வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றின் வடிவிலேயே வெளிப்பட்டு நிற்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளை, பொறுத்தவரையில் பாரம்பரிய நெறிமுறைகளுக்கு எதிரான இளைஞர்களின் நடத்தை மாதிரிகளிலேயே இப்பிரச்சினைகள் எழுச்சியடைந்துள்ளன.

கடந்த நூற்றாண்டின் போது பொருளாதாரத்தில் இணையான வீதத்திலான ஒரு வளர்ச்சி இன்றி குடித்தொகையில் ஏற்பட்ட தீவிர அதிகரிப்பு காரணமாகவே இளைஞர் அமைதியின்மை தோன்றியுள்ளது என இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு 1990 இல் அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இந்த ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த பலர் இன்றைய இலங்கையில் நிலவிவரும் சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் தார்மீக பிரச்சினைகள் நாட்டின் அரசியல் கலாச்சாரம் காரணமாகவே தோன்றியுள்ளன என்றும், இந்நிலைமைக்கு இளைஞர்களே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர். எனினும், இலங்கையின் படித்த ஊழியர் படையை நாங்கள் நோக்கும் பொழுது, பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய இளம் ஊழியர் படையொன்றை இலங்கை கொண்டிருப்பதனை காண முடிகின்றது. இந்த இளம் ஊழியர் படை பொருத்தமான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டால் அபிவிருத்திச் செயன்முறையின் உற்பத்தி திறனையும் செயல்திறனையும் விருத்தி செய்து கொள்ள முடியும் என்பதும் தெளிவாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞர்களிடையே மிகவும் தீவிரமான விதத்தில் நிலவி வருகின்றது. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம் வேலையின்மை 1997 இல் 10.5 வீதத்தி லிருந்து 1999 இல் 8.8 வீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. எனினும், வேலையின்மை விகிதத்தில் ஏற்பட்டிருந்த இந்த வீழ்ச்சிக்கு மத்தியிலும், பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இலங்கை ஒரு சாதகமான நிலைமையைக் கொண்டிருக்கவில்லை. எனினும், எமக்கு கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் மதிப்பு மிக்க மனித வளங்களை திட்டமிட்ட ஒரு ஒழுங்கில் முறையாக பயன்படுத்திக் கொண்டால் நாட்டில் உயர் மட்டத்திலான அபிவிருத்தி யொன்றை எடுத்து வருவது சாத்தியமாகும்.

| அட்டவணை 1 | |
|---|---|
| வயதுத்தொகுதி | வேலைவாய்ப்பு |
| வரு.15-19 | 26.3 |
| 20-24 | 68.2 |
| 25-29 | 73.6 |
| 30-34 | 71.0 |

*ஆதாரம்: தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்*

வறுமை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கும் இலங்கையைப் போன்ற நாடுகள் இப் பிரச்சினைகளை வெற்றி கொள்ள வேண்டுமானால் மக்கள் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கக் கூடியவர்களாக இருந்து வர வேண்டும் என கல்வியியலாளரான போல் பிரேயர் என்பவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். படித்தவர்களிடையே நிலவி வரும் அறிவுசார் வறுமையை தவிர்த்துக் கொள்வதற்கும் அதேபோல எழுத்தறிவின்மையை நீக்கி கையறு நிலையில் இருந்துவரும் மக்களிடையே ஒரு நிலைமாற்றத்தை எடுத்து வருவதற்கும் கல்வியமைப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என அவர் கூறுகிறார். மேலும், கல்விச் சூழலின் குறிக்கோளை சாதித்துக் கொள்வதற்காகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். சமூக அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அவர்களிடையே உளக் கிளர்ச்சியை தூண்டுவதற்கு, அதாவது அவர்களுடைய குரல்கள் ஓங்கி ஒலிப்பதற்கு இடமளிக்கப்படுதல் வேண்டும். வறுமையை எதிர்கொண்டு மௌனமானவர்களாகவும், செயலற்றவர்களாகவும் வாழ்ந்து வரும் மக்கள் தமது நிலையை வெறுமனே விதியென ஏற்றுக்கொண்டு வாளாவிருப்பதற்கு இடமளிக்கப்படக் கூடாது. மாறாக, அவர்களுடைய வாழ்க்கையை அவர்கள் தமது சொந்த பொறுப்பில் எடுத்துக் கொள்வதற்கான மனத் தூண்டுதலை அவர்களுக்கு அளித்தல் வேண்டும். இந் நோக்கத்துக்கென சாதகமான ஒரு அணுகுமுறையையும் ஆளுமையையும் வளர்த்துக் கொள்வதற்கான வழிகாட்டுதலையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். உங்கள் சார்பில் ஏனையவர்கள் முடிவுகளை எடுப்பதாக இருந்தால் நீங்கள் உங்கள் சுய அடையாளத்தை இழந்து விடுவீர்கள்.

பெற்றோராலும் பெரியவர்களாலும் வழங்கப்படும் அறிவுரைகளை இளைஞர்கள் செவிமடுப்பது அவசியமாகும். இளைஞர்கள் தமது கருத்துக்கள் மட்டுமே சரியானவை என விடாப்பிடியான அணுகுமுறையை பின்பற்றக்கூடாது. மாறாக வேறுபட்ட கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் ஆற்றலை அவர்கள் கொண்டிருத்தல் அவசியமாகும். இலங்கையைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் ஒரு நீண்ட காலப்பிரிவுக்கு பெற்றோர் மீதும் பெரியவர்கள் மீதும் தங்கியிருந்து வருகின்றார்கள் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் சமூக, விஞ்ஞான பீடத்தினால் 2000 இல் நடத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டாய்வு சுட்டிக் காட்டுகின்றது. கல்வி மட்டத்தின் அதிகரிப்புடன் குறிப்பிடத்தக்க விதத்தில் இவ்விதம் இவர்கள் பிறரில் தங்கியிருக்கும் காலப் பிரிவின் அளவு அதிகரித்து வருகின்றது என்பதனையும் இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது. ஆட்சேர்ப்பு நிலையில் ஏற்பட்டு வரும் பல்வேறு ஒழுங்கீனங்கள் காரணமாக இலங்கையில் இளைஞர்கள் தமது கல்விக்கு ஏற்ற விதத்திலான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகின்றது. இந்த அரசியல், பொருளாதார, சமூக பின்புலத்தில் இளைஞர்களின் விரக்தி நிலை அதிகரித்துள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியின் 'இலங்கைக்கான ஒரு நோக்கு' என்ற திட்ட அறிக்கை இலங்கை இளைஞர்கள் 2005 அளவில் பின்பற்றுவதற்கான ஒரு வழியை முன்வைக்கின்றது. இளைஞர்கள் தங்கியிருக்கும் மனோபாவத்தை போக்கிக் கொள்ள வேண்டும் என்றும், தமது எதிர் காலத்தைத் திட்டமிடும் பொறுப்பு தமது கைகளிலேயே இருந்து வருகின்றது என்பதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதனையும் அது கேட்டுக் கொள்கிறது. இளைஞர்கள் தமது தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழலை உருவாக்கிக் கொடுப்பது அரசியல்வாதிகளின் கடப்பாடாக இருந்து வருகிறது என்றும் அது குறிப்பிடுகின்றது. மேலும், செயல்திறனுடன் கூடிய ஆக்கபூர்வமான குழுவொன்றை அபிவிருத்தி செய்யும் பொருட்டு சட்டத்தை மதிக்கும், நிதான போக்கினைக் கொண்ட, தொழில் முனைப்புதிறன்களுடன் கூடிய தனி நபர்கள் உருவாவது அவசியமாகும். சவால்களை எதிர்கொண்டு முன்முயற்சியுடன் வேலைகளில் ஈடுபடக்கூடிய தனி நபர்களின் எழுச்சியை உறுதி செய்வது இளைஞர்களின் முதன்மையான கடப்பாடாகவும் பொறுப்பாகவும் இருந்து வருகின்றது என்ற விடயமும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தமது கடப்பாடுகளை நன்கு அறிந்து கொண்டுள்ள பொறுப்புணர்வுடன் கூடிய இளைஞர் சமுதாயமொன்றின் எழுச்சிக்கு அடிப்படையான உளவியல் பின்னணி யொன்றின் அபிவிருத்தி அவசியம் என

அட்டவணை 2
பெற்றோர் மீது தங்கியிருக்கும் இளைஞர் யுவதிகள்

| வகை | முழுமையாக தங்கியிருப்பவர்கள் | ஓரளவுக்கு தங்கியிருப்பவர்கள் | சுதந்திரமாக இருப்பவர்கள் |
|---|---|---|---|
| மொத்தம் | 71.8 | 10.9 | 17.3 |
| ஆண் | 81.0 | 13.2 | 25.1 |
| பெண் | 85.1 | 7.8 | 7.1 |
| நகர | 67.0 | 11.7 | 21.3 |
| கிராம | 73.6 | 10.3 | 16.1 |
| தோட்ட | 65.1 | 18.0 | 18.9 |
| வரு. 15 - 19 | 87.0 | 6.7 | 6.2 |
| வரு. 20. - 24 | 64.0 | 13.8 | 22.6 |
| வரு. 25 - 29 | 41.2 | 16.3 | 40.5 |
| கபொத உயர் தரத்துக்கு ஆயத்தம் செய்பவர்கள் | 77.8 | 9.1 | 13.0 |
| க.பொ.த உயர்தர தகுதி | 73.3 | 10.6 | 13.6 |
| பட்டப்படிப்பு அதற்கு மேல் | 75.[illegible] | 10.1 | 13.9 |
| பாடசாலை செல்லாதவர்கள் | 47.4 | 5.3 | 47.4 |

மூலம் : இளைஞர் தொடர்பான மதிப்பீட்டாய்வு

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

**அட்டவணை 3**
**க.பொ.த. (சாதாரண தரம்) 1998**
**தோற்றியவர்கள் எண்ணிக்கையும் சித்தியடைந்த பாடங்களும்**

| பாடங்கள் | தேறியவர்கள் மொத்தம் | | | |
|---|---|---|---|---|
| | D + C + S | % | F | % |
| மரவேலை | 1,594 | 79.48 | 860 | 20.52 |
| மேசன் வேலை | 84 | 95.45 | 4 | 4.55 |
| உலோக வேலை | 30 | 81.35 | 70 | 18.67 |
| வானொலி தொழில்நுட்பம் | 353 | 71.46 | 141 | 28.54 |
| மோட்டார் பொறிமுறை | 773 | 65.89 | 127 | 14.11 |
| கடல்நீர் மீன்பிடி | 34 | 97.14 | 1 | 2.86 |
| நன்னீர் மீன்பிடி | 9 | 90.10 | 1 | 10.10 |
| விவசாயம் | 1,06,637 | 79.49 | 27,507 | 20.50 |
| தோட்ட வேலை | 8,584 | 88.53 | 1,112 | 11.47 |
| கால்நடை வளர்ப்பு | 63 | 64.29 | 35 | 35.71 |
| மட்பாண்ட வேலை | 103 | 91.15 | 10 | 8.85 |
| ஆடை நெய்தல் | 413 | 87.5 | 59 | 12.5 |
| நில அளவை | 182 | 77.12 | 64 | 22.86 |
| வீட்டுத் தோட்டம் | 125 | 62.24 | 27 | 17.76 |
| மனையியல் | 12,287 | 84.10 | 2,341 | 16.20 |

மூலம் : பரீட்சைத் திணைக்களம், 1998

உளவியலாளர்கள் கருதுகின்றனர். மூன்று முக்கியமான பண்புக் கூறுகள் இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளன:

1. பௌதீக தோற்றம் குறித்த மனப்பாங்கு.
2. ஆற்றல் குறித்த மனப்பாங்கு
3. சமூக ஏற்றத்தாழ்வு குறித்த மனப்பாங்கு.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனப்பாங்குகளை வளர்த்துக் கொண்டிருக்கும் ஓர் இளைய தலைமுறையிலும் பார்க்க தொழில்நுட்ப ஆற்றல்களை கொண்டிருக்கும் இளைய தலைமுறையொன்றே எமது நாட்டுக்கு தேவையாக இருந்து வருகின்றது. எனவே, இளைஞர்கள் தமது ஆற்றல்களை இனங் கண்டு அத்தகைய விசேட ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு முன் வர வேண்டும். இத்தகைய ஆற்றல்கள் பாடசாலையில் இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப் பட்டால் அவை அவர்களுடைய வருங்காலத்துக்கு பயனுள்ளவையாக அமைய முடியும்.

இருபத்தோராம் நூற்றாண்டில் விசேட ஆற்றல்களை கொண்டிருக்கும் தனிநபர் களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன. சாதாரணமான நபர்களுக்கு அவை கிடைக்கப் போவதில்லை. எனவே, இளைஞர் யுவதிகள் தாம் ஈடுபடும் எந்தத் துறையிலும் சரி-தையல் வேலை, சமையல், பாடல், ஓவியம் தீட்டுதல், மேசன் வேலை, தச்சு வேலை அல்லது வேறு வேலைகள் என எந்த துறையாக இருந்தாலும் சரி - தமது ஆற்றல்களிலிருந்து உச்சமட்ட பயன்களை பெற்றுக் கொள்வதற்கு எத்தனிக்க வேண்டும். சமூகத்துக்கு பயனளிக்கக்கூடிய அனைத்து விதமான திறன்களும் ஆற்றல்களும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். ஒரு தனிநபர் தனது ஆற்றலை மதிக்கும்பொழுது அவருடைய அந்த ஆற்றல் தானாகவே அபிவிருத்தியடையும். எந்தவொரு தொழிலினதும் கண்ணியம் தனிநபர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதிலேயே தங்கியுள்ளது. தொழிற்சந்தையில் பெருமளவுக்கு கிராக்கி நிலவி வரும் பல தொழில் வகைகளைப் பொறுத்தவரையில் தகைமை பெற்ற ஆளணியினரின் பற்றாக்குறை நிலவி வருவதாக அடிக்கடி கூறப்படுகிறது. எனவே, சந்தைபடுத்தக்கூடிய ஆற்றல்களைக் கொண்டிருக்கும் நபர்களை அடையாளங்கண்டு கொள்வதற்கும், அவர்களுடைய ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கும் இப்பொழுது தருணம் வந்துள்ளது. இங்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ள க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை (1998) வாழ்க்கைத் திறன்கள் மற்றும் தொழில்நுட்ப பாடங்களின் பெறுபேறுகள் (அட்டவணை 3) இதனை எடுத்துக் காட்டுகின்றன.

1998 இல் க.பொ. த. (சாதாரண தர) பரீட்சைக்கு மொத்தம் 880,088 பரீட்சார்த்திகள் தோற்றினர். வாழ்க்கைத் திறன்கள் மற்றும் தொழில்நுட்ப பாடங்கள் என்பவற்றுக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கை (1990) இப்போக்கு தொடர்பாக கவனத்தை ஈர்த்து, இப்பாடங்களை அதிக அளவிலான மாணவர்கள் படிப்பதற்கு தூண்டும் விதத்திலான சிபார்சுகளை முன்வைத் திருந்தும் கூட 1998 அளவிலும் கூட நிலைமையில் கணிசமான அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. கொழும்பு பல்கலைக்கழகத்தினால் இளைஞர்கள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட மதிப்பீட்டாய்வு இப்போக்கினை ஊர்ஜிதம் செய்துள்ளது.

இளைஞர்கள் தொழில்களை பெற்றுக் கொள்ள விரும்பும் துறைகளை இனங் கண்டு கொள்வதற்கு இவ்வாய்வு முயற்சித் துள்ளது. கிராமப் பிரதேசங்களையும் தோட்டப் பிரதேசங்களையும் சேர்ந்த இளைஞர்கள் - குறிப்பாக யுவதிகள்- அரசாங்க வேலைக்கு முன்னுரிமை அளித்து வருகிறார்கள் என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது (அட்டவணை 4). தொழில் அபிலாஷைகளுக்கும் இன்றைய யதார்த்த நிலைமைகளுக்குமிடையில் ஒரு பாரிய இடைவெளி நிலவி வருகின்றது என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய தேசிய மற்றும் சர்வதேசிய போக்குகளின் பின்னணியில் அரசின் பங்குப் பணி வீழ்ச்சி கண்டு வருகின்றது. இன்றைய உலக மயமாக்கலின் போக்குகளையும் அது வழங்கிவரும் வாய்ப்புகளையும் இளைஞர்கள் அங்கீகரிப்பது அவசியமாகும். ஊழியர் படையின் ஒரு பரந்த பிரிவினரை இளைஞர் யுவதிகள் பிரதிநிதித்துவம் செய்து வருகிறார்கள் என்பது தெளிவாகும். எனவே, இளைஞர் தொடர்பான பல்வேறு திட்டங்களையும் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தையும் அமுல் செய்வதற்கு பொறுப்பானவர்கள் இளைஞர்களின் தொழில் தொடர்பான அபிலாஷைகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதுடன், எழுச்சி கண்டுவரும் உலக நிலைமைகளின் சவால்களை எதிர்கொள்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்யும் விஷயத்திலும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.


33795

அட்டவணை 4
சமூகப் பின்னணி மற்றும் தொழில் முன்னுரிமை

| குழு | அரச துறை | தனியார் துறை | சுய தொழில் | ஏனையவை |
|---|---|---|---|---|
| மொத்தம் | 53.40 | 20.00 | 24.80 | 1.5 |
| ஆண் | 43.2 | 21.7 | 33.3 | 1.5 |
| பெண் | 66.8 | 17.9 | 13.5 | 1.6 |
| நகர | 44.7 | 27.1 | 26.1 | 2.0 |
| கிராம | 55.8 | 18.1 | 24.2 | 1.5 |
| தோட்ட | 52.7 | 19.5 | 27.8 | - |
| மேல் மாகாணம் | 40.5 | 28.8 | 28.8 | 2.6 |
| மத்திய மாகாணம் | 55.8 | 22.1 | 22.7 | 0.3 |
| தென் மாகாணம் | 57.7 | 18.4 | 23.0 | 1.0 |
| வட மாகாணம் | 75.0 | 5.5 | 19.5 | - |
| கிழக்கு மாகாணம் | 72.2 | 11.9 | 16.0 | - |
| வடமேல் மாகாணம் | 48.0 | 21.7 | 28.3 | 1.4 |
| வடமத்திய மாகாணம் | 57.8 | 10.6 | 30.6 | 1.1 |
| ஊவா மாகாணம் | 59.8 | 10.6 | 26.3 | 3.4 |
| சபரகமுவ மாகாணம் | 54.6 | 19.2 | 28.6 | 2.2 |
| க.பொ.த. உயர்தர தகைமை | 82.3 | 22.7 | 11.6 | 3.3 |
| பட்டம் மற்றும் அதற்கு மேல் | 72.2 | 21.5 | 5.1 | 1.3 |

மூலம் : இளைஞர் மதிப்பீட்டாய்வு 2000, கொழும்பு பல்கலைக்கழகம்

பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உற்பத்தியில் ஈடுபடும்பொழுது உள்நாட்டுச் சந்தைக்கு அப்பால் சென்று பிராந்திய மற்றும் சர்வதேச சந்தைகளை இலக்காக கொள்ள வேண்டும். ஒரேயடியாக சர்வதேச சந்தைகளில் பிரவேசிக்க முடியாது. முதலில் உள்நாட்டுச் சந்தையில் பிரவேசித்து நிலை நிறுத்திக் கொண்ட பின்னர் சர்வதேச சந்தைகளை தேடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

வேலை என்பது உயிராக இருந்து வருகின்றது என்றும், சோம்பேறித்தனம் என்பது மரணமாக இருந்து வருகின்றது என்றும் லெனின் குறிப்பிட்டார். மலைச் சிகரங்களை எட்டுவதற்கு குறுக்கு வழிகள் இல்லையென்றும், வேலை செய்ய விரும்புபவர்கள் மிக எளிதில் சிகரங்களை தொட முடியும் என்றும் கார்ல் மார்க்ஸ் கூறினார். வருங்காலத்தில் அனைத்து தொழில்களுக்கும் ஒரே விதமான மதிப்பே நிலவி வரும். ஒவ்வொரு தொழில் துறையிலும் விதிமுறைகளின் தொகுப் பொன்றை பின்பற்ற வேண்டியது அவசிய மாகும். எதிர்காலத்தில் இவை குறித்த சாதகமான மனப்பாங்குகளை கொண்டிருப்ப வர்கள் மட்டுமே உலகுக்கு பயனுள்ள ஒரு பணியை நிறைவு செய்து வைக்கக் கூடியவர்களாக இருந்து வருவார்கள் என்ற உண்மையை நாங்கள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

சமூகம் தவறானது என சில சந்தர்ப்பங்களில் இளைஞர்கள் நினைக்க முடியும். ஒரு தனிநபரின் உள வளர்ச்சியில் உள்ள ஒரு கட்டமாகும், எவ்வாறெனினும், வயது வந்தவர்களும் கூட தமது இளமைப் பருவத்தின் போது இத்தகைய குறை பாடுகளை அவதானித்திருக்க முடியும். அநீதிகளுக்கு எதிரான இத்தகைய போராட்டங்களை வரலாறு பதிவு செய்துள்ளது. போரும் பயங்கரவாதமும் தொடர்ந்தும் இளைஞர்களை சீரழித்து வருகின்றன. அவை இளைஞர்களை மட்டுமன்றி ஒட்டுமொத்த சமுதாயத்தையும் அழிவின் விளிம்புக்கு எடுத்து வருகின்றன. எனவே, இளைஞர்கள் இந்தச் சதிகளை புரிந்து கொள்ள வேண்டியிருப்பதுடன், சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான தமது பங்களிப்பினை வழங்க வேண்டியவர் களாகவும் இருந்து வருகின்றார்கள். இருள் குறித்து வெறுமனே புலம்பிக் கொண்டிராமல் அந்த இருளைப் போக்குவதற்கென ஆகக் குறைந்தது ஒரு மெழுகுவர்த்தியையேனும் அவர்கள் ஏற்றி வைக்க வேண்டும். குறை காண்பதும் விமர்சிப்பதும் வெறுப்புக்கும் கோபத்துக்கும் பழிவாங்கலுக்குமே இட்டுச் செல்ல முடியும். அவற்றின் விளைவாக இறுதியில் அழிவுகரமான புரட்சிகரமான சிந்தனை தோன்ற முடியும். இத்தகைய இளைஞர்கள் முடிவில் பொதுச் சொத்துக் களையும் வளங்களையும் அழித்தொழிக்கும் நபர்களின் கூட்டாளிகளாகிவிடக் கூடும்.

இளைஞர்கள் பிரநிதித்துவம் செய்து வரும் சக்தி மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமானால் அவர்களுடைய தன் னம்பிக்கையை விருத்தி செய்வது அவசியமாகும். இளைஞர்கள் வறுமையை ஒரு சாக்காகக் கொள்ளக் கூடாது. மாறாக, சவால்களை எதிர்கொண்டு பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்வதற்கு அவர்கள் திடசங்கற்பம் பூண்டு கொள்ள வேண்டும். இளைஞர்கள் தமது வீரியத்தை எந்த அளவுக்கு ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் வருகின்றார்களோ அந்த அளவுக்கு அவர்கள் தமக்கும் நாட்டுக்கும் அனுகூலங்களை எடுத்து வர முடியும்.

*****

# வணிகத் துறையில் மேம்பாட்டு நடவடிக்கைகளின் செல்வாக்கு

எம். பி. ஜீ. தமயந்தி மெனிக்கே
(உதவி விரிவுரையாளர், பொருளியல் வணிக, புள்ளிவிபரவியல் துறை, பேராதனை பல்கலைக்கழகம்)

இன்றைய வணிகத் துறையில் அரச தொழில் முயற்சிகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது தனியார் துறை தொழில் முயற்சிகள் கூடிய அளவிலான பங்களிப்பினை வழங்கி வருவதனை தெளிவாக காண முடிகிறது. இந்த பின்னணியில் தொழில்களின் போட்டித் தன்மையும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த நிலையில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்ற விடயம் முன்னரைப் பார்க்கிலும் இப்பொழுது மிகுந்த முக்கியத்துவத்தையும் தனிச் சிறப்பினையும் பெற்று வருகின்றது. சிக்கல்மிக்க சமூக அமைப்பொன்றுக்குள் வாழ்ந்து வரும் பகுத்தறியும் திறனைக் கொண்டிருக்கும் நுகர்வோரை தமது பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் பால் ஈர்த்துக் கொள்வதும் தக்கவைத்துக் கொள்வதும் மிகவும் சிரமமான ஒரு காரியமாக இருந்து வருவதனால் நிறுவனங்கள் அதற்கென பல்வேறு தந்திரோபாயங்களையும் கையாள வேண்டியுள்ளது. இத்தந்திரோபாயங்களில் சந்தைப் படுத்தல் முகாமைத்துவம் என்ற உத்தி முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்கிறது.

## சந்தையை இனங்கண்டு கொள்ளல்

ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது போட்டிச் சந்தையை பொதுவாக இரு பிரிவுகளில் இனங்கண்டு கொள்ள முடியும்:

1. நுகர்பொருட் சந்தை
2. கைத்தொழில் பொருட் சந்தை

இங்கு குறிப்பாக நுகர்பொருட் சந்தை தொடர்பாகவே கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சந்தையை மிக விரிவானதும் அடிக்கடி மாற்றங்களை எதிர்கொண்டு வருவதுமான ஒரு சந்தை எனக் குறிப்பிடலாம். இந்த மாற்றங்களுக்கு வழிகோலும் ஒரு முக்கியமான காரணி நுகர்வோர் மனப்பாங்குகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களாகும். காலநிலைப் போக்குகள், பொருளாதாரம் மற்றும் அரசியல் மாற்றங்கள் என்பன இதன் மீது செல்வாக்குச் செலுத்தி வரும் ஏனைய மாற்றங்களாகும். இத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் தமது சந்தைப் பங்கினை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதனை விரிவாக்கிக் கொள்வதற்கும் தொழில் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்வர வேண்டும். எனவே, நுகர்வோர் மனப்பாங்குகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை இடையறாது பகுப்பாய்வு செய்ய வேண்டியிருப்பதுடன், நிறுவனங்கள் இம்மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் தமது பண்டங்களை திட்டமிட வேண்டியுள்ளன. அதன் பின்னர் பயனுள்ள சந்தைப்படுத்தல் திட்டமொன்றை உருவாக்கிக் கொள்வதன் மூலம் மிகப் பொருத்தமான சந்தைப்படுத்தல் உத்திகளை செயற்படுத்த வேண்டும்.

## சந்தைப்படுத்தல் கலவை தொடர்பான உத்திகள்

போட்டி நிலவும் நுகர்வோர் பண்டச் சந்தையில் சந்தைப்படுத்தல் உத்திகளை மிகவும் விவேகபூர்வமான முறையில் தெரிவு செய்து கொள்வது அவசியமாகும். 1960 களில் மக்கார்தி என்பவரினால் தெரிவு செய்யப்பட்ட சந்தைப்படுத்தல் கலவை உத்தியை இங்கு மிக முக்கியமான ஒரு உத்தியாக குறிப்பிட முடியும். சந்தைப்படுத்தல் கலவை என்பது பண்டத்தை கொள்வனவு செய்பவரின் நடத்தை மீது ஒரு செல்வாக்கினை எடுத்து வரக்கூடிய விதத்தில் நிறுவனத்தினால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய சில மாறிகளின் ஒரு தொகுதியாகும். அம்மாறிகள் வருமாறு: 1. பண்டம், 2. விலை, 3. விநியோகம், 4. மேம்பாடு. மிகவும் சிறந்த சந்தைப்படுத்தல் கலவை தொகுப்பொன்றினை பின்பற்றுவதன் மூலம் எந்தவொரு வணிக முயற்சியும் வெற்றிகரமான சந்தைப்படுத்தலை மேற்கொள்ள முடியும். இந்த தொகுதியில் மேம்பாடு (Promotion) மிக முக்கியமான ஒரு மாறியாக இருந்து வருகின்றது.

எளிமையான வார்த்தைகளில் கூறுவதானால் தற்போதைய விற்பனை மட்டத்தை பெருக்கிக் கொள்வதற்கென மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகள் எனக் குறிப்பிட முடியும். இவ்விதம் இனங்காணப்படும் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள் சந்தைப்படுத்தலின்போது ஒன்றுடனொன்று ஓரளவுக்கு வேறுபட்ட வேறு நான்கு மாறிகளை உள்ளடக்கியவையாக இருந்து வருகின்றன: 1. விளம்பரம், 2. தனிப்பட்ட விற்பனை, 3. விற்பனை மேம்பாடு, 4. மக்கள் தொடர்பு. இவற்றிலும் கூட நுகர்வோர் பண்டச் சந்தையில் விளம்பரம் மிக முக்கியமான விற்பனை மேம்பாட்டு மாறியொன்றாக கருதப்பட்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் சந்தைப்படுத்தல் கழகத்தின் அபிப்பிராயத்தின் பிரகாரம், விளம்பரம் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் மூலம் கொடுப்பனவு அடிப்படையில் ஆள் சாராத விதத்தில் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன குறித்த கருத்துக்களை முன்வைத்து, அவற்றை வளர்த்தெடுக்கும் ஒரு செயன்முறையாகும். விளம்பரத்தின் மூலம் பண்டங்களை அறிமுகம் செய்து வைப்பதும் அதேபோல விற்பனை மேம்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது. போட்டிச் சந்தையில் குறிப்பாக நுகர்பொருட் சந்தையில் விளம்பரம் மிகவும் வெற்றிகரமான ஒரு விற்பனை மேம்பாட்டு முறையாக இருந்து வருகின்றது.

விளம்பரத்தை தமது விற்பனை மேம்பாட்டுக் காரணியாக உபயோகிக்கும் பொழுது வணிகர்கள் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அதனை விளம்பரத்தின் போது

மட்டுமன்றி ஏனைய அனைத்து விதமான விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளின் போதும் பின்பற்றுவது அவசியமாகும். முதலில் விற்பனை மேம்பாட்டு முறையொன்றின் (பிரச்சாரத்தின்) மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை தெளிவாக நிர்ணயித்துக் கொள்வது அவசியமாகும். அந்தக் குறிக்கோள் சம்பந்தப்பட்ட பண்டம், அதன் இயல்பு மற்றும் சந்தையின் இயல்பு என்பவற்றுக்கேற்ற விதத்தில் வேறுபட முடியும். எனினும், பொதுவாக நோக்கும் பொழுது விளம்பரத்தின் மூலம் பின்வரும் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது:

1. தகவல்களை வழங்குதல்
2. பண்டத்தின் பால் ஈர்ப்பினை எடுத்து வருதல்
3. நுகர்வோரைத் தூண்டுதல்

இந்தகுறிக்கோள்களை நிர்ணயித்து கொள்வதில் பண்டம் எதுவாக இருந்த போதிலும் அப்பண்டம் சந்தையில் இயங்கும் விதம் குறித்து உற்பத்தியாளர் ஒரு தெளிவான புரிந்துணர்வை கொண்டிருப்பது அவசியமாகும். இச்சந்தர்ப்பத்தில் ஒரு பண்டத்தின் வாழ்க்கை வட்டம் குறித்த கருதுகோளை உபயோகித்துக் கொள்ள முடியும்.

ஒரு பண்டத்தின் வாழ்க்கை வட்டம் தொடர்பான கருதுகோளும் விளம்பரத்தின் குறிக்கோள்களும்:

1. எண்ணம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு வரும் கால கட்டம்
2. அறிமுகம் செய்து வைக்கும் கால கட்டம்.
3. வளர்ச்சிக் கால கட்டம்
4. முதிர்ச்சிக் கால கட்டம்
5. சீர்குலைவு

பண்டம் தொடர்பாக ஆய்வு செய்யும் காலப் பிரிவின்போது என்ன பண்டத்தை உற்பத்தி செய்வது, அதற்கு நிலவி வரும் சந்தை எத்தகையது போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுவதுடன், அக்கால கட்டத்தின்போது பண்டம் தொடர்பான விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. பண்டத்தை சந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கும் பொழுது தகவல்களை விளம்பரம் செய்வதன் மூலம் நுகர்வோருக்கு குறித்த பண்டம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுக்க முடியும். இச்சந்தர்ப்பத்தில் பண்டத்தின் இயல்பு, தரம், விலை, அவை கிடைக்கும் இடங்கள் போன்ற விபரங்களை விளம்பரம் செய்யலாம். உதாரணமாக, டிஸ்பிரின் டிரெக்ட் வலி நிவாரண வில்லையை சந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கும் பொழுது அதன் இயல்பு மற்றும் அதனை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் என்பன விளம்பரப்படுத்தப்பட்டன. எனவே, அறிமுகம் செய்து வைக்கும் கால கட்டத்தில் நுகர்வோருக்கு தகவல்களை வழங்குவது விற்பனை மேம்பாட்டின் ஒரு குறிக்கோளாக இருந்து வருகின்றது.

பண்டம் சந்தையில் வளர்ச்சி கண்டுவரும் கால கட்டத்தின்போது விளம்பரம் தொடர்பான குறிக்கோள்களை மீண்டும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இக்காலகட்டமளவில் பல பிரதியீட்டுப் பண்டங்கள் சந்தைக்குள் பிரவேசித்திருக்க முடியும். எனவே, அச்சந்தர்ப்பத்தில் நிறுவனங்கள் தமது பண்டங்களின் மீது நுகர்வோரின் விருப்பினை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு போட்டிச் சூழ்நிலையில் நுகர்வோரைத் தம்பக்கம் ஈர்ப்பதற்கென விளம்பரங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, முதலில் வென்டோல் உற்பத்தியொன்றாக வெனிவெல் சவர்க்காரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் சிறிது காலத்தின் பின்னர் ஓர் உள்நாட்டு உற்பத்தியாக அப்சரா வெனிவெல் சவர்க்காரம் அறிமுகம் செய்யப்பட்டது. தற்பொழுது இந்த இரு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு மேற்கொண்டு வரும் விளம்பரங்களின் மூலம் நுகர்வோரை தம்பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதனைக் காண முடிகிறது.

ஒரு பண்டம் முதிர்ச்சிக் கட்டத்தை அடையும் பொழுது விளம்பரத்தின் மூலம் செய்யக் கூடியதெல்லாம் அப்பண்டம் தொடர்பாக நுகர்வோரின் உள்ளங்களில் ஒரு ஞாபகப் பதிவினை ஏற்படுத்துவதாகும். அந்த அடிப்படையிலேயே இக்கட்டத்தின்போது விளம்பரங்கள் செய்யப்படுதல் வேண்டும். உதாரணமாக, தற்போதைய சந்தையில் சன்லைட் சவர்க்காரம் தொடர்பாக நுகர்வோருக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டும் இவ்விளம்பர உத்தி பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. பல தலைமுறை காலமாக நம்பிக்கையை வென்றது சன்லைட் என்ற வகையில் இந்த விளம்பரம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பண்டம் சீர்குலைவடைந்து வரும் கட்டத்தின்போது விளம்பரத்தின் மூலம் மேலும் விற்பனை மேம்பாட்டை எதிர்பார்க்க முடியாது. எனவே, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதத்தில் தனது விளம்பர குறிக்கோள்களை புரிந்து கொண்டு அதன் பயனாக ஆக்கபூர்வமான விதத்தில் விளம்பரங்களை முன்னெடுக்கக் கூடிய விதத்தில் குறிப்பிட்ட வணிகர் புத்திசாலியாக இருந்து வருவது அவசியமாகும்.

விளம்பரத்தின் குறிக்கோள்களை தெளிவுபடுத்திக் கொண்ட பின்னர் அதற்கான வரவு செலவுத்திட்டத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். பாரிய அளவிலான வணிகர்களை பொறுத்தவரையில் தமது நிதிப் பலத்துக்கு ஏற்ற விதத்தில் விளம்பரங்களுக்கென அவர்கள் பாரிய தொகைகளை செலவிடும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். ஆனால், சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினர் சார்பு ரீதியில் குறைவான ஒரு தொகையையே விளம்பரங்களுக்கென செலவு செய்யக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். எவ்வாறிருப்பினும், வரவு செலவுத்திட்டங்களை முடிவு செய்யும் பொழுது பொதுவாக பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுப்பது அவசியமாகும்:

1. வருமானத்தின் சதவீதம்
2. போட்டி நிறுவனங்களின் விளம்பரச் செலவு
3. நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்
4. செலவுகளை மேற்கொள்ளக் கூடிய ஆற்றல்

விளம்பரங்கள் தொடர்பாக எத்தனை சதவிகிதத்தை செலவிட வேண்டும் என்ற விடயத்தை சம்பந்தப்பட்ட வணிகர் தனது வருமானத்துக்கு ஏற்ப தீர்மானிக்க வேண்டும். பொதுவாக தனியார் துறை விளம்பர நடவடிக்கைகளுக்கென வருமானத்தில் சுமார் 20 சதவீதத்தை செலவிட்டு வருகின்றது. ஆனால், அரச துறை தொழில் முயற்சிகள் தமது வருமானத்தில் 1 சதவீதத்தை மட்டுமே விளம்பரங்களுக்கென செலவிடுகின்றன. தனியார் துறையிலும் கூட சிறு வணிகர்கள் விளம்பரத்துக்கென தமது வருமானத்தில் 20 சதவீதத்தை செலவிட முடியாது. இங்கு மற்றொரு விடயத்தையும் நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். அதாவது, பாரிய வணிகரின் 20 சதவீதம் ஒரு பெருந்தொகையாக இருந்து வருவதுடன், சிறு வணிகரின் 20 சதவீதம் சார்பு ரீதியில் ஒரு சிறு தொகையாக இருந்து வரும். எனவே, இந்த நிலையில் பாரிய வணிகர்கள் 20 சதவீத செலவின் மூலம் உள்ளடக்கிக் கொள்ளும்

விடயங்களை சிறு வணிகரினால் அதே சதவிகிதத்திலான செலவின் மூலம் உள்ளடக்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. இத்தகைய ஒரு பின்னணியில் சிறு தொழில்முயற்சிகள் சந்தைப்படுத்தல் தொடர்பான பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. எனவே, ஒவ்வொரு வணிகரும் தனது தொழில் ஆற்றலுக்கு ஏற்ற விதத்தில் தன்னால் மேற்கொள்ளக் கூடிய செலவின் அளவினை சரிவர உணர்ந்து கொள்வதுடன், இச்செலவுகளை மிகவும் ஆக்கபூர்வமான விதத்தில் மேற்கொள்வதற் கூடாக தனது விற்பனைகளை பெருக்கிக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டியுள்ளது.

போட்டியிடும் நிறுவனங்களின் விளம்பர நடவடிக்கைகள் நாங்கள் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கும் மற்றொரு காரணியாகும். அந்நிறுவனங்களின் விளம்பரங்களின் இயல்பு, செலவுகளின் அளவு என்பன இங்கு முக்கியபத்துவம் பெறுகின்றன. போட்டியிடும் நிறுவனங்களுடன் (செல்வு செய்யக்கூடிய ஆற்றல் இருந்தால்) போட்டியிட்டுக் கொண்டு விளம்பரங்களை முன்வைக்க முடியும். ஆனால், அதனை போட்டி போட்டுக்கொண்டு செய்ய முடியாதிருந்தால் அதற்கென மாற்றுவழிகளைக் கண்டறிய வேண்டும். போட்டி போட்டுக்கொண்டு விளம்பரங்களை செய்ய முடியாதிருக்கும் நிறுவனங்கள் தமது சந்தையை இழந்துள்ள நிலையில் சந்தைக்குள் ஏகபோக நிலை தலைதூக்கி வருகின்றது என்ற குற்றச்சாட்டு இப்பொழுது முன்வைக்கப்படுகின்றது. எனினும், இக்கூற்றினை ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக, விளம்பரங்களுக்கூடாக போட்டிச் சந்தையில் தமக்குரிய பங்கினை விரிவாக்கிக் கொள்ள முடியாதிருந்தால் வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். முக்கியமாக சிறு வணிகர்களைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையிலான விற்பனை என்ற மேம்பாட்டு முறையை அவர்கள் வெற்றிகரமாக பரீட்சித்து பார்க்க முடியும்.

விளம்பரச் செலவுகளை நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மற்றொரு காரணி நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பனவாகும். அதாவது, மேற்கொள்ளப்படும் செலவுகளின் மூலம் இந்நோக்கங்களையும் குறிக்கோள்களையும் சாதித்துக் கொள்ள முடியுமா என்ற விடயம் கண்டறியப்படுதல் வேண்டும். விற்பனையை 50 சதவீதத்தால் பெருக்கிக் கொள்வது நோக்கமாக இருந்து வந்தால், அதற்கு விளம்பரத்தின் மூலம் வழங்கப்படக்கூடிய பங்களிப்பினை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் அதற்கான செலவை தீர்மானித்துக் கொள்ளலாம். அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளுக்கூடாகவே இதனை வெற்றிகரமாக சாதித்துக் கொள்ள முடியும். செலவுகளை மேற்கொள்ளும் பொழுது உண்மையிலேயே அச்செலவினை தம்மால் தாங்கிக் கொள்ள முடியுமா என்ற விடயத்தை கவனத்தில் எடுப்பது மற்றொரு காரணியாகும். சிறுதொழில் முயற்சிகள் வரையறுக்கப் பட்ட அளவிலான வளங்களை மட்டுமே கொண்டுள்ளன. எனவே, போட்டிபோடும் நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கென வரையறுக்கப்பட்ட வளங்களை எந்த அடிப்படையில் ஒதுக்குவது என்பதனை அவை விவேகபூர்வமான விதத்தில் முடிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் தம்மால் தாங்கிக் கொள்ள முடியாத செலவினை விளம்பரத்துக்கென செலவிட்டால் சிறு தொழில் முயற்சிகள் நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடலாம். இது சிறு தொழில் முயற்சிகளுக்கு மட்டுமன்றி நடுத்தர மற்றும் பாரிய தொழில் முயற்சிகளுக்கும் கூட பொருந்தக் கூடிய ஒரு கோட்பாடாகும். செலவுகளை நிர்ணயித்துக் கொண்ட பின்னர் விளம்பரங்களுக்கென பயனுள்ள ஊடகங்களை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விளம்பர ஊடகத்திலும் காணப்படும் சார்புரீதியான அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் என்பவற்றை பின்வருமாறு எடுத்துக் காட்டலாம்:

| ஊடகம் | அனுகூலம் | பிரதிகூலம் |
|---|---|---|
| தினசரிப் பத்திரிகைகள் | ஓரளவுக்கு சந்தையை உள்ளடக்குகின்றன | வரையறுக்கப்பட்ட பார்வையாளர் எண்ணிக்கை |
| வர்த்தக தொலைக்காட்சி | கட்புல செவிப்புல சாதனமாகும். செலவு அதிகம், பார்வையாளரை எளிதில் சென்றடையலாம். | |
| வானொலி | செலவு குறைவு, விரிந்த பிரதேசங்களை உள்ளடக்குகிறது | இல்லை |


ஊடகங்களின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அடிப்படை யாகக் கொண்டு தம்மால் ஏற்கக் கூடிய செலவின் அடிப்படையில் மிகவும் பயனுள்ள ஊடகத்தை தெரிவு செய்து கொள்ளலாம். இந்த செயன்முறைகள் அனைத்தையும் பின்பற்றிய பின்னர் விளம்பரங்களின் மூலம் ஒட்டுமொத்தமாக தமது குறிக்கோள்கள் எந்த அளவுக்கு வெற்றியடைந்துள்ளன என்பதனை கண்டறிவதற்கென பகுப்பாய்வொன்றினை மேற்கொள்ள முடியும். அத்தகைய ஒரு பகுப்பாய்வுக்கு ஊடாக வருங்கால விளம்பரங்களை திட்டமிட்டுக் கொள்வதற்கும், செலவுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட வணிகருக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். அது அத்தொழிலின் எதிர்கால மேம்பாட்டுக்கு பெருமளவுக்கு உதவும்.


நுகர்வோர் சந்தையில் விளம்பரங்கள் மிகுந்த முக்கியத்துவத்தை பெற்றுக் கொள்கின்றன. எனினும், விளம்பரங்களுக்கூடாக மட்டும் மேம்பாட்டு நடவடிக்கைகள் பூர்த்தியடைவதில்லை. இது தவிர விற்பனை மேம்பாடு என்ற விடயம் சந்தையில் முக்கியமான ஒரு பங்கினை ஆற்றி வருகின்றது. இதனை இரு விதங்களில் பயன்படுத்திக் கொள்ள முடியும்:

1. வாடிக்கையாளர்களை ஊக்குவிப்பதற்கு.
2. வர்த்தகர்களை ஊக்குவிப்பதற்கு


கழிவு விற்பனை, கூப்பன் முறை, இலவசமாக மாதிரிகளை வழங்குதல், பல பண்டங்களை உள்ளடக்கிய பொதிகள் மற்றும் கடன் வசதிகள் போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கலாம். பங்கிலாப கொடுப்பனவு, கடன், தரகுக் கட்டணம் மற்றும் விற்பனையாளர்களிடையே போட்டியை நடத்துதல் என்பவற்றுக் கூடாக வர்த்தகர்களை ஊக்குவிக்க முடியும். இந்த விற்பனை மேம்பாட்டு முறையை பின்பற்றும் போது முக்கியமாக ஒரு விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். அதாவது, தொடர்ச்சியாக இம்முறையை பின்பற்றி வருவதன் மூலம் தொழிலின் மீது மோசமான விளைவுகள் ஏற்பட முடியும். நுகர்வோர் அல்லது விற்பனையாளர் நிரந்தரமாக இம்முறைக்கு தம்மை பரிச்சயப்படுத்திக் கொள்வதே இதற்கான காரணமாகும். அந்நிலையில் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கையொன்றை மேற்கொள்ளாமல் தமது பண்டங்களை விற்பனை செய்து கொள்வது முடியாத காரியமாகி விடலாம். எனவே, இம்முறையை எச்சந்தர்ப்பத்தில் பின்பற்றுவது என்பதனை சம்பந்தப்பட்ட வணிகர் தீர்மானிக்க வேண்டும். விழாக் காலங்கள் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம்.


# வறுமையும் மனித அவலமும் : ஒரு தொகுப்பு










## இலங்கையில் வறுமை










| மாகாணம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| மேல் | 11.6 | 1.20 | 14.4 | 11.2 |
| மத்தி | 27.9 | 0.10 | 13.3 | 24.4 |
| தென் | 26.5 | 0.07 | 19.4 | 26.2 |
| வட-மேல் | 33.9 | [illegible] | 2.3 | 30.1 |
| வட-மத்தி | 31.2 | 0.15 | 2.1 | 31.7 |
| ஊவா | 37.0 | 0.10 | 12.1 | 34.1 |
| சப்ரகமுவ | 31.5 | 0.07 | 12.0 | 32.7 |

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: QD/11/News/2000


NRFC கணக்குப் பிரிவு,
வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் பிரிவு,
இல. 59, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி - 332745, 075-338459; 46409, 332746
தொலைநகல் - 332753, 433140
மின் அஞ்சல் - info@nrfc-peoples.lk




பிரதி விலை: ரூ. 25/-